
விலை 20 ரூபா

# தீபம்

www.deepam.lk

வார இதழ் • தீபம் 14 • 25.10.2015

ஐயப்பன் கைத்தொழிலகம்
IYAPPAN INDUSTRIES



கொப்பராய் அரைத்தல்
எள்ளு அரைத்தல்
இலுப்பை விதை அரைத்தல்
வேப்பம் விதை அரைத்தல்
விளக்குமாறு, தும்புத்தடி
தும்புவகை உற்பத்திகள்
சிரட்டை, ஈக்கில் என்பன
கொள்வனவு செய்யப்படும்

077 4821455

Mannar Road, Veppankulam, Vavuniya.
மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா




அரியாலையில் மணல் அகல்பவர்களினால் வெளிச்சத்திற்கு வந்துள்ளன சில எலும்புக்கூடுகள். கூடவே மீட்கப்பட்ட பென்சில், அடிமட்டம், பேர்ஸ், கைப்பை போன்றனதான் மனசை 'பகீர்' என்கிறது. மீண்டும் ஒரு கிருஷாந்தியா? இன்னொரு செம்மணியா அடையாளம் காணப்பட்டுள்ளது?

தொடர்ச்சி 9-ம் பக்கம்

# இரண்டாவது செம்மணி?




தினம் ஒரு பிரச்சனை... பரபரப்பு. கிளிநொச்சி மகாவித்தியாலயம் முன்னர்தான் கல்விச்சாதனைகளிற்காக செய்தியானது. இப்பொழுது பிரச்சனைகளால் அன்றாடம் செய்தியாகிறது. பரம வைரிகளைப்போல அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் நடந்து கொள்ள... உள்வீட்டுப்பிரச்சனை இப்பொழுது நடுச்சந்திக்கு வந்துள்ளது. சொந்த மாணவர்களையே பொலிஸ்நிலையம் அனுப்பிய அதிபர்... அதிபருக்கு எதிராக திரளும் ஆசிரியர், மாணவர் குரல்கள்... படம்பிடிக்குள் இரகசிய கமராக்காரர் என ஒரு சூடான திரைக்கதைக்கு தேவையான அத்தனையையும் வைத்துள்ளது கிளிநொச்சி 'கலவர' மகாவித்தியாலம்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# கிளிநொச்சி 'கலவர' மகாவித்தியாலம்!



விடாமுயற்சிக்கு இன்னொரு பெயர் டென்சிகா! 6



வேண்டும் ஒரு மோட்டார்சைக்கிள் 11



குமிழமுனை காட்டுப்பு 23

உள்ளே...

# யார் குற்றியும் அரசியாகட்டும்!

தமிழ் அரசியல்கைதிகள் விவகாரம் பெரும் கொந்தளிப்பின் பின்னர் வழக்கம்போல சூடு தணிந்துள்ளது. வழக்கம் போல சூடு தணிந்திருந்தாலும், இம்முறை வழக்கத்தை விட அது தமிழ் சூழலில் பரவலான கவனத்தை கோரியிருந்தது. இது முன்னெப்பொழுதும் நிகழ்ந்திராதது. குறிப்பாக தமிழ் அரசியல்தலைமைகளிடம் அது செலுத்திய தாக்கம் பெரியது.

தமிழ் அரசியல்தலைமைகள் யாருமே கைதிகள் விவகாரத்தை தாமாக கையிலெடுக்கவில்லை. அது சம்மந்தனாகட்டும், விக்கேஸ்வரனாகட்டும், விஜயகலாவாகட்டும்ஞ் அனைவருக்கும் பொருந்தும். கைதிகள் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்து, அது ஊடகங்களிலும், பொதுஅரங்கிலும் எதிரொலிக்க தொடங்கியதும் அரசியல்தலைமைகள் அதில் அக்கறை செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தது.

கைதிகள் விவகாரத்தில் நமது தலைமைகள் விரைவாக செயற்பட காரணமாக இருந்தது இரண்டு காரணங்கள்.

முதலாவது தமிழ்தேசிய கூட்டமைப்பு ஆட்சியின் பங்குதாரர்களாக இருந்தது. மற்றது, தமிழரசு எதிர் விக்னேஸ்வரன் பனிப்போர்.

தமிழ்தேசிய கூட்டமைப்பு ஆட்சியின் பங்குதாரர்களாக அவர்கள் ஆட்சியில் அங்கம் பெறாத போதும், அப்படி விளிப்பதில் தவறில்லாத உறவே அமைந்துள்ளது உள்ள சூழலில் களத்தில் அரச எதிர்ப்பு போராட்டங்களை தணிக்கும் தேவை அதற்கு உள்ளது. போராட்டங்களிற்கு வாய்ப்பாக அமையும் ஒவ்வொரு சம்பவமும், அரசியல்ரீதியில் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு பாதகமாகவே அமையும்.

கைதிகள் விவகாரம் வடக்கு கிழக்கில் ஒருவிதமான மக்கள் போராட்ட வடிவத்திற்கு மாறும் தன்மை தென்பட்டது. தமிழ்தேசிய மக்கள் முன்னணி அதனை கையிலெடுக்க முற்பட்டிருந்தது. இது தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு நெருக்கடியை ஏற்படுத்துவதாக அமைந்தது. வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன், அரசின் அமைச்சரான விஜயகலாவிற்கும் அது நெருக்கடி கொடுத்தது. அவர்கள் கைதிகள் சார்பாக தலையிட வேண்டிய புற அழுத்தத்தை கொடுத்தது.

இரண்டாவது காரணமான பனிப்போரும் இதில் கணிசமான செல்வாக்கை செலுத்தியது. கைதிகள் விடுவிப்பில் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதி, சில முன்னகர்வுகளை முதல்வர் செய்கிறார் என்றதும், அதற்கு ஏட்டிக்கு போட்டியாக சில நகர்வுகளை தமிழரசுக்கட்சி செய்தது.

இதன் தொடர்ச்சியாக நடந்த போட்டியில் எந்த சொரணையுமின்றி தமிழர் பிரதிநிதிகள் நடந்து கொண்டனர். கைதிகளிற்கு ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியை யார் பெற்றுக் கொடுத்ததென்ற 'சான்றிதழை' பெறுவதில் தமிழரசு தரப்பும், முதல்வர் தரப்பும் முட்டிமோதிக் கொண்டது. குறிப்பாக இரண்டு தரப்பு சார்பான ஊடகங்களும் எதிரும்புதிருமான செய்திகளை வெளியிட்டன. கைதிகள் விடயத்தில் ஜனாதிபதி ஒரு உத்தரவாம் வழங்கியிருக்கிறார் என்பதை விட, அதனை யார் பெற்றுக்கொடுத்தார்கள் என்ற 'பொறுப்புரிமையை' தமது சார்பு அரசியல் தலைமைக்கு பெற்றுக்கொடுப்பதிலேயே ஊடகங்கள் குறியாக இருந்தன. யாழில் இயங்கிய அச்சு மற்றும் இணைய ஊடகங்களில்த்தான் இந்த போட்டாபோட்டி நிலவியது.

கைதிகளின் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டமென்பதே நமது அரசியல்தலைமைகளின் முகத்தில் பூசப்பட்டகரிதான். தேர்தல் சமயத்தில் கைதிகள் விடுதலை பற்றி பேசி, தேர்தலின் பின்னர் நமது தலைவர்கள் அனைவரும் கைதிகளை வசதியாக மறந்துவிட்டனர். கைதிகளின் விடுதலை தொடர்பாக தமிழர்களின் எந்த பிரதிநிதியும் புதியஅரசிடம் பேசவில்லை. இந்தநிலையில் கைதிகள் ஆரம்பித்த போராட்டம், ஒருவகையில் தமிழர் பிரதிநிதிகளின் தோல்விதான்.

இன்னொரு முக்கியமான விடயத்தையும் கைதிகளின் போராட்டம் வெளிப்படுத்தியுள்ளது. தமிழர்களின் அரசியல்போராட்டத்தை திட்டமிட்டு, தலைமைதாங்கும் தெளிவான தலைவர்களாக யாரும் தம்மை இனங்காட்டிக்கொள்ளவில்லை. இருப்பவர்கள் அனைவரும் சம்பவங்களின் பின்னால் செல்பவர்களே.

இவர்கள் கைதிகளின் விடய உறுதிமொழியில் சில்லறைச் சண்டைகளில் ஈடுபடுவதை தவிர்த்து உருப்படியான காரியங்களில் அக்கறை செலுத்துவதுதான் காலத்தின் தேவை. விக்னேஸ்வரன் கேட்டாரா, சம்பந்தன் கேட்டாரா, டக்ளஸ் கேட்டாரா என்பதல்ல, கைதிகள் விடுதலையாகிறார்களா என்பதே முக்கியம். இந்த விடயத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் 'யார் சொல்லி விட்டார்கள்' என்ற பெருமையை பெற தனித்தனியாக மல்லுக்கட்டுவதல்ல. கூட்டாக சேர்ந்து, சிறைகளில் உள்ள அரசியல்கைதிகள் விடுதலையாகி, சமூகத்தில் நிம்மதியான வாழ்வை தொடர வழிசமைத்துக் கொடுப்பதே.

அவர்களை சிறைச்சாலைகளிலிருந்து விடுவிப்பது பெரியதல்ல. அதனிலும் சவால்மிக்கது, அவர்களிற்கு வளமான வாழ்க்கையை கட்டியமைத்து கொடுப்பது. சிறைச்சாலை வாசல்களில் நின்று புகைப்படம் எடுத்து ஊடகங்களிற்கு அனுப்பிய எத்தனை அரசியல் வாதிகள், இந்த கைதிகள் விடுதலையான பின்னரும் அவர்களின் வாழ்க்கைக்கு உதவுவார்கள் அல்லது அவர்களை அறிந்திருப்பார்கள் என்பதெல்லாம் சந்தேகமான விடயங்கள்தான்.

அறிக்கை, உணர்ச்சிபேச்சுக்களிற்கு அப்பால் வெகுதூரத்தில் யதார்த்தம் உள்ளதென்பதை நமது அரசியல்வாதிகள் உணரட்டும். யார் குற்றியும் அரிசியாகட்டும். கைதிகளை விடுவித்து, நல்ல சமூக வாழ்க்கையை கட்டியெழுப்ப இனியாவது ஒன்றுபட்டு உழைப்போமே!

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633 ✉ deepamdesk@gmail.com

# சொன்னார்கள்



**நா. வேதநாயகன் – அரசஅதிபர், யாழ்**

எமது சமுதாயத்தில் சில துறைகள் சரிவர இயங்காமல் இருப்பதே சமுதாய பிறழ்வுகள் அதிகரிக்க காரணம். சிலதுறையை சேர்ந்தவர்கள், குற்றம்சாட்டப்பட்டவர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு, நீதி கிடைக்க வேண்டியவர்களிற்கு நீதி கிடைப்பதற்கு தடையாக உள்ளனர்.




**பா.சிதம்பரம் – இந்திய காங்கிரஸ் கட்சி**

இந்தியாவின் மாநிலங்களிற்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை விட அதிக அதிகாரங்களை இலங்கையின் வடக்கு,கிழக்கு மாகாணங்களிற்கு வழங்குவதற்கேற்ற வகையில்த்தான் இலங்கை இந்திய ஒப்பந்தம் பிரேரிக்கப்பட்டது.




**ஹூ சுனியாங் – வெளிவிவகார அமைச்சு பேச்சாளர், சீனா**

இலங்கைக்கும் சீனாவிற்குமிடையில் பொருளாதார, வர்த்தக உறவுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருநாடுகளும் தங்களிற்கிடையில் பரஸ்பர மரியாதையுடனும், கௌரவத்துடனும் அதை முன்னெடுக்கின்றன. சமமான அளவில் லாபங்கள் பகிரப்படத்தக்க விதத்திலேயே வர்த்தக உறவுகள் உள்ளன.



**மகிந்த ராஜபக்ச – எம்.பி, குருணாகல்**

தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் அரசியல் பழிவாங்கல்களிலேயே ஈடுபடுகிறது. அபிவிருத்தியில் கவனத்தை செலுத்துவதை விடுத்து, பழிவாங்கல்களிற்கே அதிக முக்கியம் கொடுக்கிறது.



**மிரெஸ்லாவ் ஜென்கா – உதவிச் செயலர், ஐ.நா**

இனப்பிரச்சனை தீர்விற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால ஆரம்பித்துள்ளார். அரசியல் தீர்வு காண்பதற்கு உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளிற்கு தேவையான நிபுணத்துவ உதவிகளை வழங்க ஐநா எப்பொழுதும் தயாராகவே உள்ளது.



**ரிசாட் பதியூதீன் – அமைச்சர், கைத்தொழில் வணிகத்துறை**

முல்லைத்தீவில் இருந்து வெளியேறிய மக்கள் மீள்குடியேறச் செல்லும் போது அபாண்டமான பொய் சொல்லி அவர்களின் மீள்குடியேற்றத்தை தமிழ்தேசிய கூட்டமைப்பின் பிரமுகர்கள் தடுக்கிறார்கள். இது கண்டனத்திற்குரியது.

# க்ளிக் பக்கம்

**யா**ழ்ப்பாணம் மணியந்தோட்டத்தின் கடற்கரையில் அமைந்துள்ள பண்டைய துறைமுகம். தமிழர்களின் தொன்மையான அடையாளம் ஒன்று இன்று கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. மாலைப்பொழுதொன்றில் எடுத்தது.

**என்னைப்பற்றி** நான் தனுசியன். யாழ்ப்பாண பல்கலைகழக இதழியில் பயிற்சிநெறியின் இரண்டாம் வருட மாணவன். ஊடககற்கைநெறிக்காலத்தில் புகைப்படப்பிடிப்பில் ஆர்வம் ஏற்பட்டது.



படப்பிடிப்பாளர்: **அ.தனுசியன்**

இடம்: **மணியந்தோட்டம்**



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் deepamdesk@gmail.com




கடந்த வாரம் சமூக வலைத்தளங்களில் பரபரப்பை கிளப்பிய படம் இது. நடுவீதியில் கார் ஓட்டுகிறான் என்று சொல்லாமல், நடு வயலிற்குள் கார் ஓட்டுகிறான் என்பதுதான் சரி. சில தினங்களின் முன்னர் பஸ்யால-கிரிஉல்ல வீதியில் இரவுநேரம் பயணம் செய்து கொண்டிருந்த கார், வீதியை விட்டு நாற்பது அடி தூரம் வயலிற்குள் பயணம் செய்துள்ளது. இந்த முரட்டு பயணத்தால் வாகனத்திற்கு அதிக சேதம் விளைந்தபோதும், சாரதி அதிஸ்டவசமாக தப்பித்து கொண்டுள்ளார்.

# இணைய ஜன்னல்

**Ashroff Shihabdeen**
எல்லாத் திருமதிகளுக்குப் பின்னாலும் ஒரு திரு இருக்கிறார். “திரு” “திரு” என முழித்துக் கொண்டு!

**Rimaz Ahamed**
விஷால் அடுத்த முதல்வர்ன்னு வேணா சொல்லுங்க. ஆனா தயவு செஞ்சி இளைஞர்ன்னு சொல்லாதீங்க. 38 வயசுடா அவனுக்கு. அவனெல்லாம் இளைஞர்ன்னா நாங்கெல்லாம் என்ன குழந்தையா???

**சௌம்யா/twitter.com**
கட்டெறும்பெல்லாம் பாய்ஸ், சுள்ளெறும்பெல்லாம் கேர்ள்ஸ்னு நினைச்சிட்டிருந்தேன் சின்னப்புள்ளைல

**Con Gainer/twitter.com**
பரபரப்பான காலை வேளையில் மியூசிக் சேனலுக்கு போன் செய்து தொகுப்பாளினியிடம் சிரித்துப்பேசுமளவிற்கு நிம்மதியான ஒரு வாழ்க்கை வாய்க்கவேண்டும்

**Ahilan Nadarajah**
ஏடு தொடக்கும் போது நாக்கில் 'அ' எழுதுவதுதான் முறையானதும் பாதுகாப்பானதும் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு குழந்தையின் நாக்கில் 'கி ' என்று ஒரு பெரியமனுஷன் எழுதப்போய் தொண்டைக்குள் விரலை விட்டுவிட்டார். பாவம். அந்தக் குழந்தை இன்னும் 'ஒவாக்'.. ' ஓவ்வ்வாக்' .. 'ஔவ்வாக்'

# வாவ்.. வட்ஸ்அப்

உங்களைப்பற்றி_உங்களுக்கே_தெரியாத_ ஐந்து_விஷயங்கள்....

மிக மெதுவாக படிக்கவும்...!!

ஊதா ஊதா ஊதா ஊதா

ஊதா ஊதா ஊதா ஊதா

ஊதா ஊதா ஊதா ஊதா

ஊதா ஊதா ஊதா ஊதா ஊதா ஊதா ஊதா ஊதா

ஊதா ஊதா ஊதா ஊதா

1. உங்களுக்கு ரொம்ப சோம்பேறித்தனம். ஏன்னா மொத்தமிருக்குற 24 ஊதா'வையும் நீங்க முழுசா படிக்கல...!!
2. உங்களுக்கு ரொம்ப கவனக்குறைவு..?? நடுவில் ஒரு "ஊகா" இருக்கு நீங்க சரியா கவனிக்கல..!!
3. இப்ப நீங்க உடனே அத செக் பண்ணீட்டீங்க..!!
4. அப்படி ஒன்னும் இல்லை...!! நம்மளையே முட்டாள் ஆக்கீட்டானேன்னு, இப்ப மெல்ல புன்னகைக்கிறீங்க..?
5. படிச்சிமுடிச்சிட்டு கண்டிப்பா ஷேர் பண்ணப் போறீங்க...!!

ஆனா_உங்களைப்பற்றி_எனக்கு_12_விஷயம்_ தெரியும்..!!


1. நீங்க என்னோட பதிவை படிச்சிட்டு இருக்கீங்க..!!
2. நீங்க ஒரு நல்ல மனுசன்.!!
3. உதட்ட குவிக்காம 'ஊ' சொல்ல முடியாது...!!
4. இந்நேரத்துக்குள்ள அதை செஞ்சி பாத்துருப்பீங்க...!!
5. இப்ப கண்டிப்பா சிரிச்சிருப்பீங்க..!!
6. உங்க முகத்துல சிரிப்பு இன்னும் மிச்சமிருக்கும்..!!
7. அடடா, நீங்க பாயிண்ட் நெம்பர் "5" படிக்காம விட்டுட்டீங்க...??
8. இப்ப நீங்க 5வது பாயிண்ட தேடுறீங்க..!!
9. இப்ப கண்டிப்பா திரும்ப சிரிப்புத்தான்...!! ஏன்னா..? நான் உங்களப்பத்தி சரியாத்தான் சொல்லீட்டு இருக்கேன்...!!

ஹா.....ஹா.....ஹா.....ஹா

நீங்களும் இப்ப உங்க கவலையெல்லாம் மறந்து சிரிக்கிறீங்க தானே...!!

நீங்க எவ்வளவு கஷ்டத்துல இருந்தாலும் சத்தமா சிரிச்சா மனசு லேசாயிடுங. ்க..!!

நீங்கமட்டும் சிரிச்சிட்டே இருக்காம உடனே லைக் போட்டுட்டு மளமளன்னு ஷேர் பண்ணுங்க...!!



**TU Senan**

தமிழில் யீ என்ற உச்சரிப்பை எழுத எழுத்தில்லை. அதிகம் உபயோகிக்காத அகேனத்தை (ஃ) இதற்கு பாவிக்கவேண்டும். ஃபிஸ் அன்ட் சிப்ஸ் என்ற உணவை மீனும் கிழங்குப் பொரியலும் என மொழிபெயர்த்து எழுத முடியாது என தோழர் வேலு சரியானபடி சுட்டிக்காட்டினார். கிழங்குப் பொரியலுக்காக காத்துக்கிடக்கிறான் என இலக்கியமயப்படுத்தி தப்பிக்கொண்டு விடலாம். ஆனால் தமிழ் அல்லாத பாத்திரத்தை உருவாக்கும்போது பல சிக்கல்கள் எழுகிறது. எஃ என்ற எழுத்து அதிகம் பாவிக்கப்படும் ஆங்கிலத்தின் செல்வாக்கில் இருந்து கொண்டு அந்த எழுத்து இல்லாமல் இயங்குவது கடினம். அதனால் அகேனத்தின் உச்சரிப்பு மாற்றிப் பாவிக்கும் தேவையுள்ளது. இன்று பலர் இந்த மாற்றத்தை உள்வாங்கி எழுதத் தொடங்கியிருக்கிறார்கள். யார் தொடக்கி வைச்சது எனத் தெரியவில்லை. இற்றைக்கு 15 வருடங்களுக்கு முன் இவ்வாறு எழுதிய ஞாபகமுண்டு மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.




சர்ச்சைகளின் பின் பாபர்வீதி ஆலய தேர்த்திருவிழாவை ஆரம்பித்து வைத்தபோது அமைச்சர் மனோ கணேசன்

## பத்திரிகைத்துறையில் ஆர்வமுடையவரா?

நீங்கள் புதிய தேடல் உள்ளவரா?
சுவாரஸ்யமாக எழுதத் தெரிந்தவரா?
பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவரா?
இன்றே இணையுங்கள்
தீபம் வார இதழுடன்.
பகுதிநேரமாகவோ,
முழு நேரமாகவோ பணியாற்றலாம்.



உடனடியாக உங்கள் சுயவிபரத்தை அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர்
தீபம்
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
deepamdesk@gmail.com

## 1-ம் பக்க தொடர்ச்சி

என்ன நடக்கிறது கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில்? தினம்தினம் ஒவ்வொரு பரபரப்பு செய்திகள். மாணவர்கள் மீது அதிபர் புகார்... ஆசிரியர்கள் மீது அதிபர் புகார்... திபர் மீது ஆசிரியர்கள் புகார் என தினம்தினம் கலவர பூமியாக விளங்குகிறது கிளிநொச்சி மகாவித்தியாலயம். முன்னர் நீண்ட காலத்தின் முன்னர் கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயம் என்ற பெயரில் இருந்தது. இப்பொழுது கிளிநொச்சி மகாவித்தியாலயம் என பெயர் மாறிவிட்டது. தற்போதைய நிலைமையை பார்த்தால் கிளிநொச்சி 'கலவர' மகாவித்தியாலயம் என பெயர் மாற்றலாம் போலுள்ளது என்கிறார்கள் பலரும்.

பாடசாலை வாயிலை கடந்து உள்நுழையும்போதே 'இன்று என்ன பிரச்சனையோ' என தமக்கு 'திக்திக்' என அடித்துக் கொள்ள ஆரம்பித்து விடுவதாக பெரும்பாலான ஆசிரியர்கள் குமுறுகிறார்கள்.

> **பாடசாலையின் அதிபர் ஜெயந்தி மற்றும் அவருக்கு நெருக்கமான ஒருசில ஆசிரியர்கள் திரண்டு மற்றையவர்களை பழிவாங்குதல், ஓரங்கட்டுதல் போன்ற நடவடிக்கைகள் செய்வதால் பிரச்சனை முற்றியதாக நம்மிடம் கூறினார்கள்.**

பாடசாலையின் அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் மற்றும் அவருக்கு நெருக்கமான ஒருசில ஆசிரியர்கள் ஓரணியாக திரண்டு மற்றையவர்களை பழிவாங்குதல், ஓரங்கட்டுதல் போன்ற நடவடிக்கைகள் செய்வதால் பிரச்சனை முற்றியதாகவும், பெரும்பாலான ஆசிரியர்களும் மாணவர்களும் தற்போதைய நிர்வாகம் மாறவேண்டுமென விரும்புவதாக நம்மீடம் பேசியவர்கள் கூறினார்கள். என்றாலும் யாரும் பகிரங்கத்தில் கருத்துச் சொல்ல துணியவில்லை.

'என்னைப்பற்றி பேஸ்புக்கில் கொமண்ட் அடித்தார்கள்' என சொல்லி சொந்தப்பாடசாலை மாணவர்களையே பொலிஸ்நிலையத்திற்கு அனுப்பிய அதிபருடன் வில்லங்கப்பட முடியாதென அவர்கள் கூறுகிறார்கள்.

### பிரச்சனையின் முதல் முடிச்சு

கிளிநொச்சி மகாவித்தியாலயம் கிளிநொச்சியின் தலைசிறந்த பாடசாலையென்ற அந்தஸ்தைகடந்தபல வருடங்களாக போராடி பெற்றுள்ளது. கிளிநொச்சியில் அதிக மாணவர்களை கொண்ட பாடசாலை. கிட்டத்தட்ட 2500 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். இவ்வளவு பெருந்தொகை மாணவர்கள் கல்வி பயிலும் இன்னொரு பாடசாலை கிளிநொச்சி மாவட்டத்திலேயே கிடையாது.

முன்னர் 1 சி தரத்தில் இருந்த பாடசாலை, பெரும்போராட்டத்தின் பின்னர் 1 ஏபி தரபாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. இது நடந்தது முன்னைய அதிபர் பங்கயச்செல்வனின் காலத்தில். அந்த தரத்தை எட்டுவதற்கு பாடசாலையின் பல்வேறு வளங்கள் அதிகரிப்பட வேண்டியிருந்தது.


பங்கயச்செல்வன்

அதனை முன்னைய அதிபர் வெற்றிகரமான செயற்படுத்தியிருந்தார். அதிபர் பங்கயச்செல்வனிற்கு முன்னாள் ஈ.பி.டி.பி பிரமுகர் சந்திரகுமாருடன் நெருக்கம் இருந்ததென்றும், பாடசாலையை தரமுயர்த்தும் நடவடிக்கைக்கு சந்திரகுமாரும் கணிமான பங்களிப்பு செய்தார் என்றும் கூறப்


ஜெயந்தி தனபாலசிங்கம்

படுகிறது.

தரமுயர்த்தப்பட்ட பின்னர் உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த பிரிவுகளின் முதலாவது அணி மாணவர்கள் கடந்த கல்விப்பொது தராதர உயர்தரப் பரீட்சை எழுதினார்கள். இரண்டு பிரிவுகளிலும் சேர்த்து 37 மாணவர்கள் பரீட்சை எழுதியது கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் பிரமிப்பான விடயமென்கிறார்கள். ஏனெனில், கிளிநொச்சியின் மற்ற எந்தப் பிரபல்ய பாடசாலையிலும் இந்தளவு பெருந்தொகையானவர்கள் பரீட்சை எழுதியதில்லை என்கிறார்கள். இந்த தொகை ஒவ்வொரு வருடமும் அதிகரித்து 2017 வருடத்தில் அறுபதை கடக்கவுள்ளது.

கிளிநொச்சியில் அட்மிசனிற்காக பெற்றோர் அடிபிடிப்படும் ஒரே பாடசாலை. ஒவ்வொரு வருடமும் புலமைப்பரிசில் பரீட்சையில் சராசரியாக 50 மாணவர்கள் சித்தியடையும் கிளிநொச்சியின் ஒரே பாடசாலை. யுத்தகாலத்திலேயே பல்வேறு தேசிய விருதுகளை வென்ற பாடசாலை. மகிந்த ராஜபக்சவிடமிருந்தும் விருது வாங்கியுள்ளது. அது தவிர பிரபாகரனின் இளையமகன் பாலச்சந்திரனும் யுத்தகாலத்தில் அங்குதான் படித்திருந்தார்.

இப்படியான பின்னணியில் கடந்த பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் வடமாகாண கல்வியமைச்சு ஒரு அதிரடி நடவடிக்கை மேற்கொண்டது. நீண்டகாலம் ஒரே பாடசாலையில் கடமையாற்றியவர்கள், பாடசாலைகளிற்கு தோதாக தர அதிபர்களின் நியமனம் என இடமாற்றம் பலவற்றை வழங்கியது. வடக்கில் பல பாடசாலைகளில் இடமாற்றம் வழங்கப்பட்டது.

அரசசேவையில் இடமாற்றங்கள் சாதாரண வழக்கம் என்றபோதிலும், இந்த விடயம் விவகாரமானது. முன்னைய அதிபர் இடமாற்றத்தில் சரியானமுறையின்மை, பாரபட்சம் காட்டப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இந்த சர்ச்சைகள் உச்சமடைய, பாடசாலையில் போராட்டங்கள் வெடித்தது.

மாணவர்கள் பாடசாலை பிரதான வாயிலை பூட்டி, புதிய அதிபர் உள்நுழைய விடாமல் போராடினார்கள். வடக்கில் யாழ் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும், கிளிநொச்சி பாரதிபுரம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலுமே சர்ச்சைக்குரிய போராட்டம் வெடித்தது. வட்டுக்கோட்டை

> மாணவர் தரப்பின் தகவல்ப்படி, பொலிஸ்நிலையம் அனுப்பப்பட்டவர்கள் சிலர் செய்த குற்றம்
> மாணவி ஆசிரியர்தினத்தை ஒழுங்கமைத்து நடத்தியபோது, அதிபரிற்கு பிடிக்காதவர்களை நிகழ்வில் கலந்துகொள்ள வைத்தது.
> இன்னொரு மாணவன் தேசியமட்டத்தில் பாடசாலையின் நாட்டியநாடகக்குழு வெற்றிபெற்றிருந்தது. பழைய அதிபரின் காலத்தில் உருவாக்கப்பட்ட அந்தகுழு, அவருடன் எடுத்த குழுப்படம் ஒன்றை 'பனர்' அடித்து கட்ட முயன்றது. பாடசாலைக்குள் அதைகட்டக்கூடாதென அதிபர் தடுத்துள்ளார். இந்த மாணவனும் இன்னும் சிலரும் அதை பாடசாலைக்கு வெளியில் கட்டியுள்ளனர்.

மற்றும் பாரதிபுரம் போராட்டம் ஒய்ந்தபோதிலும் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் போராட்டம் இன்றைய திகதி வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

### என்னதான் பிரச்சனை

இப்பொழுது பாடசாலையில் என்னதான் பிரச்சனை? இப்படியொரு கேள்வியை கேட்டால், அதிபருக்கு நெருக்கமானவர்கள் பரவலாகஎல்லோர் மீதும்கைகாட்டுகிறது. ஆசிரியர், மாணவர் தரப்போ அதிபர் தரப்பின் மீது கைகாட்டுகிறது.

பழைய அதிபரின் இடமாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் போராட்டம் நடத்தியதை, தனக்கு எதிரான போராட்டமென புதிய அதிபர் கற்பனை பண்ணி, அதற்கு பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகஒருதரப்பு கூறுகிறது. இதனால் புதிய அதிபர் பொறுப்பேற்ற கடந்த ஒன்றரை மாதங்களும் பாடசாலை கலவரபூமியாக உள்ளது. தனக்கு எதிரானவர்கள் என கருதுபவர்களை காரணமின்றி திட்டி, பிரளத்தை கிளப்புகிறார் என்கிறார்கள் அவர்கள். தனக்கெதிரான சதி நடப்பதாக கற்பனை செய்து, ஒவ்வொருவரின் நடத்தையிலும் ஒவ்வொரு காரணம் கண்டுபிடிக்கிறார் என்பது அவர்கள் கருத்து. 'பாடசாலைக்குள் நுழையவே அச்சமாக உள்ளது. ஏதேதோ காரணத்தை கூறி பிரச்சனையை கிளப்புகிறார். தினமும் புதுப்புது பிரச்சனைகள் கிளம்புவதால் கடந்த ஒன்றரை மாதங்களாக சுமுகமான கல்விச்சூழல் இல்லாமல் இருக்கிறது' என்கிறார்கள்.

'பழைய அதிபரிற்கு ஆதரவானவர்கள் சதித்திட்டங்கள் தீட்டுகிறார்கள். பிரச்சனைகளின் பின்னணியில் அவர்கள்தான் உள்ளனர். இதனால்த்தான் பாடசாலையில் பிரச்சனைகள். அவற்றிற்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கிறோம்' என்பதே அதிபர் தரப்பின் வாதம் என சொல்கிறார்கள்.

### அரசியல்காரணம்

மேலோட்டமான பார்வையில் இது ஒரு சாதாரண பிரச்சனை போல தோன்றலாம். சில தவறான புரிந்துணர்வால் பிரச்சனைகள் தோன்றியிருக்கலாம். உட்கார்ந்து பேசினால் அனைத்தும் சீரடைந்து விடும் போல தோன்றலாம். ஆனால் நன்றாக விசாரித்தால் பல 'பகீர்' தகவல்கள் வெளிவருகிறது.

பாடசாலை இப்பொழுது இரண்டுபட்டு போயுள்ளதற்கு காரணம் கிளிநொச்சியின் அரசியல் போட்டாபோட்டியும் ஒரு காரணம் என்கிறார்கள். கிளிநொச்சியில் சிறீதரன் எம்.பிக்கும், சந்திரகுமாரிற்கும் கணிசமான ஆதரவு உள்ளது. அவர்களின் ஆதரவாளர்களும் அரசதுறைகளில் முக்கிய பொறுப்புக்களில் உள்ளனர். அவர்களிற்கிடையிலான போட்டியும் இதில் செல்வாக்கு செலுத்தியதாக கூறப்படுகிறது.

முன்னைய அதிபரின் காலத்தில், சந்திரகுமாரின் ஆதரவாளர்கள் கணிசமான செல்வாக்கும் செலுத்தியிருக்கிறார்கள். இது மற்ற அணிக்கு அவ்வளவாக பிடிக்கவில்லையென்கிறார்கள்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் முன்னர் அதிபராக இருந்தவர்தான் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன். பாடசாலையில் ஒரு பிடியை வைத்திருக்க அவருக்கு ஆதரவானவர்கள்

> **புதிய அதிபராக திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் பொறுப்பேற்றதும் செய்த முதல் காரியம், தனக்கு விசுவாசமானவர்களை பொறுப்பில் நியமித்ததே. இதனால் பல்வேறு குழப்பங்கள் நேர்ந்ததாக கூறப்படுகிறது.**

விரும்பியதாக கூறப்படுகிறது. இதுதான் பிரச்சனையின் பின்னால் உள்ள மறைமுக அரசியல் எனப்படுகிறது.

வடக்கு கல்வியமைச்சர் குருகுலராஜாவை அரசியலில் இறக்கியவர் சிறிதரன். இப்படியான பின்னணியில் தற்போதைய அதிபருக்கு வலுவான பின் ஆதரவு உள்ளதாக தெரிகிறது. அதுதவிர, கல்வியமைச்சருக்கும் தற்போதைய அதிபருக்குமிடையில் நெருக்கமுள்ளதாகவும் சொல்கிறார்கள்.

### 'அச்சாப்பிள்ளை' ரீற்மென்ற்

புதிய அதிபரின் வரவிற்கு தாங்கள் யாரும் எதிர்ப்பு எதிரிவிக்கவில்லையென்பதை அடித்துக் கூறுகிறார்கள் மாணவர்களும், ஆசிரியர்களும். 'இப்பொழுது கூட தமது கோரிக்கை அதிபரை மாற்றுவதோ, பழைய அதிபரை கொண்டு வர வேண்டுமென்பதோ அல்ல. பாடசாலை சிக்கல்களை


பாடசாலை விவகாரம் இப்பொழுது அனேக அரசியல்வாதிகள் தலையிடும் விவகாரமாகிவிட்டது. மாணவர் போராட்டம் வெடித்தபோது அப்போதைய அமைச்சர் விஜயகலா, எம்.பி சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்களும் மாணவர் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி வாக்குறுதி வழங்கியிருந்தனர். அமைச்சர் விஜயகலா சுமுக தீர்வு வழங்குவதாக வாக்களித்தும், இன்னும் பாடசாலை கலவரபூமியாகவே உள்ளது.




சுமுகமாக்கி, மாணவர்களின் கல்வியை சீர்படுத்த வேண்டுமென்பதே' என்கிறார்கள் நாம் பேசிய அனைவரும்.

ஆனால் அதிபர் இதற்கு ஒத்துழைக்கிறார் இல்லையென்றும், அவர் பாடசாலையை சீர்குலைக்கிறார் என்றும் அவர்கள் குற்றம்சாட்டுகிறார்கள்.

ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் அதிபரிற்கு கணிசமான எதிர்ப்புணர்வு உள்ளதை அவதானிக்க முடிகிறது. கடந்த ஒன்றரை மாதங்களாக பொறுமையுடன் இருந்த ஆசிரியர்கள் பொங்கியெழுந்து வலயக்கல்விப் பணிமனையை முற்றுகையிட்டது இதற்கு நல்ல உதாரணம். சுமார் ஐம்பதிற்கும் அதிகமான ஆசிரியர்கள் திரண்டு சென்று, தம்மை பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆசிரியர்களின் பிரச்சனையை கேட்டு வலயக் கல்விப்பணிமனை அதிகாரிகள் தலையை பிய்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்களாம். ஆசிரியர்களின் பிரச்சனையை புரிந்தாலும் 'மேலிடம்' ஓடர் போடாமல் எதையும் செய்ய முடியாத நெருக்கடி அவர்களிற்கு.

## 'உர்' அரசியல்

பாடசாலை ஆசிரியர்கள் பெரும்பாலானவர்கள் காலையில் அதிபரை கண்டால் 'குட்மோர்னிங்' கூட சொல்வதில்லையாம். ஆட்களை கண்டால் அதிபர் முகத்தை வேறுபக்கம் திருப்பி வைத்திருக்க, ஆசிரியர்களும் முகத்தை வேறு பக்கம் வைத்துக் கொண்டு சென்று விடுவார்களாம்.

தமக்கு கவுன்சிலிங் செய்வதற்கு அதிபர் முயன்றது ஆசிரியர்களை கொதிக்க வைத்துள்ளது. 'நாங்கள் என்ன மனநோயாளிகளா? எம்மை மனநோயாளிகளாக்க அதிபர் முயல்கிறாரா' என அவர்கள் கொந்தளிக்கிறார்கள். மனநோயாளிகளையா ஆசிரியர்களாக்கியுள்ளார்கள் என்ற கேள்வியை யாராவது கேட்டால், அரசுதான் பதில் சொல்ல வேண்டிவரும்!

ஆசிரியர்கள் மத்தியில் தனக்கு எதிர்ப்புணர்வு உள்ளது, பழைய அதிபருக்கு ஆதரவாக அவர்கள் செயற்படுகிறார்கள் என கருதும் அதிபர், கடந்த ஒன்றரை மாதங்களாக பல்வேறு துறைசார்ந்தவர்களையும் அழைத்து ஆசிரியர், மாணவர்களிற்கு 'உளஆற்றுப்படுத்தல்' செய்கிறாராம். இதில் சாமியார், சாத்திரியார் வகையறாக்களும் உண்டாம். வருபவர்களும், பழைய 'அதிபரை மறந்துவிடுங்கள். புதிய அதிபருக்கு விசுவாசமாக அச்சாப்பிள்ளையாக நடக்க வேண்டும்' என்ற சாரப்பட போதனை செய்கிறார்களாம். கடந்த ஒன்றரை மாதத்தில் ஏழோ எட்டோ தடவை இப்படியானவர்கள் வந்துவிட்டார்கள் என்றும், அதனாலேயே கல்வி நடவடிக்கைகள் நடக்காமல் உள்ளதாகவும் கூறப்படுகிறது. மிக அண்மையில் உளவளத்துணை வைத்தியர் ஒருவர் வந்து ஆசிரியர்களிற்கு ஆற்றுப்படுத்தல் செய்துள்ளார். சுமார் நான்கு பாடநேரம் ஆற்றுப்படுத்தல் நடந்துள்ளது. அந்த ஆற்றுப்படுத்தலின் இறுதியில் ஆசிரியர்களிடம் வினாவொன்று வழங்கப்பட்டு, பதிலளிக்க கேட்கப்பட்டிருந்தது. பழைய அதிபரை விரும்புகிறீர்களா? புதிய அதிபரை விரும்புகிறீர்களா என்ற சாரப்பட அந்த வினா அமைந்திருந்தது.

### விசுவாச உளவாளிகள்

புதிய அதிபராக திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் பொறுப்பேற்றதும் செய்த முதல் காரியம், பழைய அதிபரின் காலத்தில் பாடசாலை நிர்வாக மட்டங்களில் பொறுப்பாக இருந்தவர்களை அதிரடியாக மாற்றி, தனக்கு விசுவாசமானவர்களை அந்த பொறுப்பில் நியமித்ததே. இதனால் பல்வேறு குழப்பங்கள் நேர்ந்ததாக கூறப்படுகிறது. சீராக இயங்கிப் பெறுபேறுகளை உயர்வாகப் பெற்ற ஒரு நிர்வாகத்தில் எதற்காக அதிரடி மாற்றங்கள்? என்பது பலருடைய கேள்வி.

பாடசாலை மாணவர் தலைவர்களிற்கு பொறுப்பாக இதுவரை காலமும் இரண்டு ஆசிரியர்கள்தான் இருந்தனர். புதிய அதிபர் அதனை மாற்றி பத்துப் பேரை பொறுப்பாக நியமித்துள்ளாராம். இதனால் பல சமயங்களில் யாரிட்ட கட்டளையை யார் நிறைவேற்றுவதென்பது தெரியாமல் திண்டாடுவதாக கூறுகிறார்கள்.

அதிபர் நியமனத்தின்போது மாணவர்கள் நடத்திய போராட்டத்தால் எச்சரிக்கையுடன் நுழைந்த புதிய அதிபர், தற்போது இராணுவப் பாணி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக குற்றம்சாட்டுகிறார்கள். தனக்கு எதிராக ஆசிரியர்கள், மாணவர்கள் சதித்திட்டம் தீட்டினால் கண்டுபிடிக்க இருவர் கொண்ட உளவுப்படையொன்றை அதிபர் உருவாக்கியுள்ளார் என கூறப்படுகிறது. யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆசிரியர், இடமாற்றலான காவலாளி ஆகிய இருவரதும் பணி, யாராவது கூட்டமாக நின்றால் அதை படம் எடுத்து அதிபரிடம் 'போட்டு கொடுப்பது'.

இப்படித்தான் அண்மையில் வகுப்பறையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த மாணவிகளை உளவாளியொருவர் படம்பிடிக்க, மாணவிகள் அதை தட்டிக் கேட்க விடயம் விவகாரமானது. ஊடகங்கள் அதை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டதையடுத்து, உளவாளிகள் இப்பொழுது அடங்கிவிட்டார்களாம். இதுவரை நான்கைந்து ஆசிரியர்கள் கூட்டமாக நின்று கதைத்தாலே அடுத்த கணம் அதிபரின் மேசையில் அந்தப் புகைப்படம் இருக்குமென்கிறார்கள்.

### இயக்கப்படுகிறாரா அதிபர்?

அதிபர் மீது அதிருப்தியாளர்களால் வைக்கப்படும் இன்னொரு முக்கிய குற்றச்சாட்டு, அவர் யாராலோ இயக்கப்படுகிறார் என்பது. பாடசாலை ஆசிரியர்களுடன் நடக்கும் கலந்துரையாடலில் ஒரு முடிவை எடுத்து இறுதி செய்வதாகவும், பின்னர் மறுநாள் அதற்கு மாறான உத்தரவுகளை பிறப்பிப்பதாகவும் அவர்கள் குற்றம்சாட்டுகிறார்கள். பாடசாலை பழைய மாணவர் சங்கத்தில் உள்ள சிலர் மற்றும் வேறுசிலர் அதிபரின் முடிவுகளில் செல்வாக்கு செலுத்துவதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் அதிபர் தரப்பு இதனை மறுக்கிறது. பாடசாலையின் பழைய மாணவர்களிற்கும் பாடசாலையில் பொறுப்பு உள்ளதாகவும், ஆனால் எந்த முடிவெனிலும் அது அதிபரின் தனித்துவமானதென்பதும் அவர்கள் வாதம்.

### இலங்கையின் ஆச்சரியம்

அண்மையில் பரபரப்பை கிளப்பிய இன்னொரு விடயம், பாடசாலை மாணவர்கள் சிலரிற்கு எதிராக அதிபர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டது. ஐந்து மாணவர்களிற்கு எதிராக அதிபர் முறையிட்டிருந்தார். அதிபரின் குற்றச்சாட்டு, பேஸ்புக்கில் தனக்கெதிராக அவர்கள் அவதூறு கிளப்புகிறார்கள் என்பதே.

அதிபரால் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அனைவருமே பாடசாலையில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியவர்கள். மாணவர் தலைவர்கள். இவர்களில் ஒருவர் மாணவி. க.பொ.த சாதாரண தரத்தில் 8ஏ,பி பெறுபேறு பெற்றவர்.


அதிபரின் முறைப்பாட்டையடுத்து மாணவர்கள் கிளிநொச்சி காவல்நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். மாணவர்களிற்கு ஆதரவாக கிளிநொச்சி கோட்ட, வலய கல்வியதிகாரிகளும், பாடசாலை ஆசிரியர்கள் பெருமளவானவர்களும் பொலிஸ் நிலையம் சென்றிருந்தனர்.

விசாரணையின் பின்னர், 'அதிபர் ஒருவர் பாடசாலை பிரச்சனையை தீர்க்க முடியாமல், தனது மாணவர்களை பொலிஸ்நிலையம் அனுப்பிய சம்பவத்தை இப்பொழுதுதான் பார்க்கிறேன்' என பொலிஸ் அதிகாரியொருவர் அலுத்துக் கொண்டதாக கூறப்படுகிறது.

பிள்ளைநேயப்பாடசாலையான கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் மாணவர்களை எந்த நேயமுமின்றி காவல்நிலையம் வரை கொண்டுசெல்லப்பட்டுள்ளதுதான் இப்பொழுது சர்ச்சையை கிளப்பியுள்ளது.

### 'கப்சிப்' அதிகாரிகள்'

ஆரம்பத்திலேயே சரிசெய்யப்பட வேண்டிய பிரச்சனையில் அதிகாரிகள் அசமந்தமாக இருப்பதுதான் ஏன் என்பது தெரியவில்லை. இரண்டு தரப்பும் ஏட்டிக்கு போட்டியாக நடக்கவோ, பாடசாலை வளர்ச்சியை முடக்கவோ அனுமதிக்க விடக்கூடாது. அது மாணவர்களின் கல்வியை பாதிக்கும். என்றாலும், இந்த விடயத்தில் கல்வித்திணைக்கள அதிகாரிகள் மெத்தனமாக இருப்பது அரசியல்காரணங்களினால் என கூறப்படுகிறது. வடக்கு கல்வியமைச்சர் குருகுலராஜாவுடன் தற்போதைய அதிபர் நெருக்கமாக இருப்பதால் அதிகாரிகள் கையாலாகாமல் இருக்கிறார்கள் என்பது அதிருப்தியாளர்களின் குற்றச்சாட்டு.


குருகுலராஜா
கல்வியமைச்சர் வடமாகாணம்

**இதுபற்றி எந்த கருத்தும் சொல்ல முடியாது**

இந்த விடயம் தொடர்பில் கருத்தறிய கல்வி அதிகாரிகளுடன் நாம் தொடர்புகளை ஏற்படுத்திய போது 'ஆளை விட்டால் போதும்' பாணியில் அனைவரும் தலைதெறிக்க ஓடியதையும் குறிப்பிட வேண்டும்.

அரசியல்வாதிகளின் பிரச்சனைகளாலோ அல்லது அதிகாரிகளின் மெத்தனங்களினாலோ இரண்டாயிரத்திற்கும் அதிகமான மாணவர்களின் கல்வி ஈடுவைக்கப்படும் சம்பவங்களை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

அதிகாரிகளே, இது உங்கள் கவனத்திற்கு... இந்த விடயம் முற்றுப்புள்ளியை எட்டும்வரை தீபமும் உன்னிப்பாக அவதானித்த படியிருக்கும்.


வவுனியா சைவப்பிரகாச ஆரம்பப்பாடசாலையிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் பத்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். ச.ஆதித்யா 176, பா.கோசாளினி 173, பா.ஆகாஷ்கர் 172, ச.சுரேசிகன் 165, ந.அபிஷேக் 164, ஸ்ரீ.மாதங்கி 163, ந.திலுக்ஷிகா 162, ர.அபிநயன் 162, ல.அபிமன்யு செல்வரத்தினம் 161, ர.கேஷனா 156 ஆகிய சித்தியடைந்த மாணவர்களுடன் பாடசாலையின் அதிபர்.


வவுனியா விபுலாநந்தா கல்லூரியின் 11 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். ஸ்ரீபவன் யுகிர்தன் 183, சசிதரன் மதுமிகா 179, ஸ்ரீலங்கா ரட்ணம் பிரகாஷினி 178, திருநாவுக்கரசு பிரசன்னா 177, யோகராசா 177, ஜெகதீஸ்வரன் சஞ்ஜய் 176, இளங்கோவன் கிருக்சிகா 174, யோகராஜ் பிரவின் 173, கோமளேஸ்வரன் கிஷான் 172, ராஜ்குமார் சந்தியா 171, தியாகச் செல்வம் டிலுக்சிகா 171 ஆகியோருடன் அதிபர், ஆசிரியர்கள்.



# விடாமுயற்சிக்கு இன்னொரு பெயர் டென்சிகா!







பி.சியா
siyapj27@gmail.com

சுசந்திகா ஜயசிங்கவின் இன்னொரு வடிவம்தான் டென்சிகா. சுசந்திகாவைப் போல இலங்கை விளையாட்டு உலகில் தனித்துவமானவராக விளங்குவார் கிளிநொச்சியின் புதல்வி டென்சிகா. இப்படி பெருமையுடன் கைகாட்டு கிறது மெய்வல்லுனர் உலகம்.

விளையாட்டு விமர்சகர்களின் கருத்தை ஆமோதிப்பதைப் போலவே டென்சிகாவின் கனவுகளும் உள்ளன. சுசந்திகாவைப் போலவே விளையாட்டுலகில் சாதிக்க வேண்டுமென்பதே தனது கனவென்கிறார் டென்சிகா.

ஆம்... இலங்கை பாடசாலைகளிகிடையில் அண்மையில் நடந்து முடிந்த கனிஸ்ர மெய்வல்லுனர் போட்டிகளில் அசத்தி தங்கம் வென்று திரும்பிய கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலத்தின் மாணவி டென்சிகாவை விளையாட்டுலகமே இப்பொழுது உற்றுப் பார்க்க தொடங்கியுள்ளது. தங்கப் பதக்கத்தின் சொந்தக்காரியாக திகழும் டென்சி மேலும் மேலும் தங்கத்தை வென்றெடுப்பாரா?

சில மாதங்களின் முன் நடந்த தேசிய கனிஸ்ட மெய்வல்லுனர் போட்டியில் 17 வயது பிரிவின் 800m ஓட்டப்பந்தயத்தில் தங்கம் வென்று அசத்திய டென்சிகாவை தமிழ் ஊடகங்கள் அவ்வளவாக கண்டுகொண்டதாக தெரியவில்லை. சமநேரத்தில் இந்தியா தென்னாபிரிக்கா போட்டி பற்றி விலாவாரியாக அலசும் ஊடகங்கள், நம்மவர் சாதனைகளை கண்டும் காணாமலுமிருப்பது வேதனையே.

டென்சிகா போன்ற இளம்சாதனையாளர்களை ஆரம்பத்திலேயே தட்டிக்கொடுப்பது நம் கடமையல்லவா.வாருங்கள் டென்சிகாவின் வீட்டுக்கே செல்லலாம்.

கிளிநொச்சியின்... உள்ள நடுத்தர வீடுகளில் டென்சிகாவின் வீடும் ஒன்று. யுத்தத்தின் பின்னார் மீள்குடியேறிய குடும்பம். இப்பொழுதுதான் வீட்டுத்திட்டம் கிடைத்துள்ளது. இரண்டு அறை ஒரு சமையலறை இரு விறாந்தை கொண்ட சிறிய வீடு. ஐந்து பிள்ளைகள் தாய் தந்தை என மொத்தம் ஏழுபேர் அதற்குள் வாழ்கிறார்கள். மூன்று அண்ணாக்களிற்கும் தம்பிக்குமிடையில் டென்சிகா பிறந்திருக்கிறார். ஆதனால் வீட்டில் டென்சிகா செல்லப்பிள்ளை. தந்தை கடற்றொழில் செய்கிறார்.

வீட்டிற்குள் நுழைந்ததும், மலைத்து விட்டோம். ஏதோ விளையாட்டு வெற்றி கேடயங்கள் பதக்கங்கள் விற்கும் கடைக்குள் நுழைந்து விட்டோமா என்ற சந்தேகமும் வந்தது. வீடு முழுவதும் வெற்றிக்கிண்ணங்களும், பதக்கங்களும் குவிந்திருந்தன. இது எப்படியென மலைத்து நின்ற எம்மை டென்சிகா குடும்பம்தான் சாதாரண நிலைக்கு கொண்டு வந்தனர். டென்சிகா மட்டுமல்ல அவர்களின் குடும்பமே ஒரு விளையாட்டு குடும்பம் என புரிய வைத்தார்கள்.

### ஆரம்பமே அமர்களமல்ல

மைதானத்தில் மின்னலாக பறக்கிறார் டென்சிகா என்ற செய்தியை வைத்து, மனதிற்குள் ஒரு உருவத்தை வைத்திருந்தோம். நெடுநெடுவென உயரமாக இருப்பார் என எங்களின் முதல்கற்பனையே நேரில் பார்த்தபோது தகர்ந்தது. அதிக உயரமாக இல்லாமல், மிக அமைதியாக இருந்தார் டென்சிகா. என்ன கேட்டாலும் அமைதியாக சிரிப்பதுதான் அவரது முதல்பதிலாக இருந்தது.

டென்சிகாவுடன் பேசியபோது, அவர் இன்று தொட்ட உயரம் இலகுவில் கிடைத்ததல்ல என்பது புரிந்தது. எல்லா சாதனையாளர்களையும் போல விடாமுயற்சியும், தீவிர பயிற்சியுமே அவரை இன்று சிகரம் தொட வைத்துள்ளது.

> **மாற்றுத் திறனாளிகளை புறந்தள்ளும் பழக்கம் சமூகத்தில் இன்னமும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. நாமும் சமூகத்தில் ஒருவர் என வாழவேண்டும் என்றால் கல்வியும், சொந்த உழைப்பும் அவசியம்.**

இன்று தேசியமட்டத்தில் முதலிடம் பெற்றுள்ள டென்சிகாவால் ஆரம்பத்தில் மாவட்ட மட்டத்தில் கூட முதலிடம் பிடிக்க முடியாமலிருந்தது என்றால் நம்ப முடிகிறதா?. ஒருமுறை இருமுறை அல்ல... பலமுறை அது முடியாமல் போராடியிருக்கிறார். ஒவ்வொருமுறை போட்டியின் பின்னும் சோர்வாக வீடுதிரும்புவாராம். என்றாலும், வெற்றிபெற வேண்டுமென்ற வெறிமட்டும் டென்சிகாவிற்குள் குறையவில்;லை. கூடவே குடும்பமும்; துணையிருந்தனர். டென்சிகாவை உற்சாக மூட்டி இந்த இடத்திற்கு கொண்டு வந்ததில் அவர்களின் பங்கும் முக்கியமானதாம்.

டென்சிகாவின் அப்பா முன்னர் ஒருகாலத்தில் கலக்கலான உதைபந்தாட்ட வீரன்.'நாவாந்துறை சிங்கன்' என்றால் கால்பந்து பரிச்சயமுள்ளவர்களிற்கு நிச்சயம் தெரிந்திருக்கும். சென்மேரிஸ் கழகத்தின் வீரன். பெரிய துயரம் அவரை இன்று யுத்தம் முடக்கிவிட்டது. யுத்த அனர்த்தத்தில் அவரது காலொன்று காவுகொள்ளப்பட்டுவிட்டது. கடற்றொழில் மட்டும் செய்து கொண்டிருக்கிறார்.

ஆம் அப்படித்தான் டென்சிகாவின் கூடப்பிறந்தவர்களையும் பற்றி ஊரில் பேசிக்கொள்கிறார்கள். 'நாவாந்துறை சிங்கனின்' பிள்ளைகள் அனைவரும் நல்ல விளையாட்டு வீரர்கள். டென்சிகாவின் இரண்டாவது அண்ணன் டென்மன் நீண்டதூர ஓட்டவீரர். 2013 ஆண்டு மரதன் தேசிமட்ட மரதன் ஓட்டத்தில் 2ம் இடம்பெற்றார். அப்பொழுது அண்ணனிற்கு கிடைத்த கௌரவமும், வீட்டில் குடிகொண்ட மகிழ்ச்சியும்தான் தன்னையும் விளையாட்டில் தீவிர கவனம் செலுத்த தூண்டியதென்கிறார் டென்சிகா

அப்பாவின் இரத்தம் போல வீட்டில் நான் அண்ணாக்கள் தம்பி எல்லோருமே நன்றாக விளையாடுவோம். எனது 2வது அண்ணா டென்மன் கடந்த 2013ம் ஆண்டு மரதன் ஓட்டத்தி;ல் தேசியமட்டத்தில் 2ம் இடத்தினை பெற்று கொண்டார். அவருக்கு கிடைத்த கௌரவம் சந்தோஸம் தான் என்னையும் தேசிய மட்டம் வரையிலும் தூண்டியது. சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஆழப்பதித்தது என்கிறார் டென்சிகா.

### ஓடு.. ஓடு

ஆரம்பம் சொல்லிக் கொள்ளும் படியாக இல்லை... வீட்டின் சிரமமான பொருளாதார நிலைமை. சோர்ந்துபோய் மூலையில் உட்கார்ந்துவிடவில்லை. முயற்சி... முயற்சி... பயிற்சி என்பது மட்டுமே டென்சிகாவின் தாரக மந்திரமாக இருந்தது.

தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயத்தில் கடந்த 2014இல் டென்சிகாவிற்கு இன்னொரு வாய்ப்பு கிடைத்தது. அப்பொழுது 9ம் தரத்தில் கற்றுக்கொண்டிருந்தார். தேசியமட்டப் போட்டிகளிற்கு அப்பொழுது தேர்வானார். அதுவரை மாவட்ட மட்டம், மாகாண மட்டம் என வடக்கிற்குள்ளேயே சுழன்றடித்துக் கொண்டிருந்த டென்சிகா புயலிற்கு அதுதான் முதலாவது மிகப்பெரிய களம்.

## முகுந்தன் பயிற்சியாளர்

டென்சியின் திறமையை நான் 2011ம் ஆண்டு ஒரு மரதன் ஓட்டத்தில் தான் இனம் கண்டு கொண்டேன். டென்சியால் ஓட்டத்தில் சாதனை படைக்க முடியும். அவரை பயிற்றுவித்தால் தேசியம் வரை கொண்டு செல்ல முடியும் என்பதை அன்றே உணர்ந்தேன். எனவே அன்றிலிருந்து தொடர் பயிற்சியளித்து வருகின்றேன். அதாவது விளையாட்டு போட்டி காலத்தில் மட்டும் பயிற்சி கொடுப்பதில்லை. தினமும் அதிகாலையில் பயிற்சியளிக்கப்பட்டு தான் இந்தளவு தூரம் கொண்டு செல்ல முடிந்தது. தொடர்ந்து 3வருடங்கள் மூச்சு விடா பயிற்சி தான் இந்த வெற்றி எனலாம். ஆரம்பத்தில் டென்சியின் குடும்ப சு+ழல் மிக மோசமாக இருந்தது. உணவில் கூட டென்சிக்கும் டென்சி குடும்பத்திற்கும் பிரச்சினை இருந்தது. எனவே முதலில் பாடசாலை ஊடாக அதிகாரிகளிடம் கதைத்து வீட்டின் தேவைகளை ஓரளவு நிவர்த்தி செய்து கொடுத்தோம். அதன் பின்னர் டென்சியின் பயிற்சி படிப்புக்கு தேவையான அனைத்து உதவிகளையும் பாடசாலை ஊடாக செய்து அவரை பயிற்றிவித்தோம். தினமும் போசாக்குணவை பெற்று கொடுப்போம். இப்பொழுது தேசியம் சென்று வரும் பொழுது கூட உடைஇ பாதணிஇ உணவுஇ போக்குவரத்து என்று அனைத்து செலவுகளையும் பாடசாலை தான் பொறுப்பெடுத்து நிறைவேற்றியது. இப்படியாக டென்சியினை முழுமையாக கவனித்து பயிற்றுவித்தோம்.

நிறையப் பதட்டங்களுடன் சென்ற டென்சிகாவிற்கு அங்கு நல்ல பெறுபேறுகள் கிட்டவில்லை. அந்தப்போட்டிகளில் 4ம் இடத்தையே பெற முடிந்தது.

சோர்வாக வீடு திரும்பிய டென்சிகாவிற்கான உற்சாக 'ரொனிக்' வீட்டிலேயே இருக்கிறதல்லவா. ஓடு...ஓடு... இன்னும் விரைவாக ஓடு என கொடுத்த உற்சாக 'ரொனிக்'கை மனம் நிறைய அருந்திய டென்சிகாவின் இறுதிப் பெறுபேறுதான் இப்பொழுது தேசியமட்டத்தில் 800 மீற்றரில் தங்கத்தை வெல்ல வைத்துள்ளது.

டென்சிகாவின் கனவுகள் அனைத்தையும் விளையாட்டு மைதானங்கள்தான் ஆக்கிரமித்துள்ளன. அவருக்கு வேறு எந்த எண்ணமுமில்லை. கல்வியை விட விளையாட்டுத்தான் தனக்கு அதிக ஈடுபாடு உள்ளதாக கூறுகிறார். அதிலும் ஆங்கிலமுள்ளதே... அது சுத்தமாக ஓடாதென்கிறார். ஆனால் ஆங்கில புத்தகத்தில் சுசந்திகா பற்றி ஆசிரியர் படிப்பிக்கும்போது விருப்பமாக கேட்பாராம். சுசந்திகாவின் சாதனை தனக்கு ஒருவித உத்வேகத்தை தந்ததாக கூறுகிறார்.

தனது வெற்றியின் முழுமுதல் காரணம் குடும்பம்தான் என நெகிழ்கிறார் டென்சிகா. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குடும்பத்தினர் தனக்கு உறுதுணையாக இருந்தார்கள் என சொல்கிறார். 'அம்மா அதிகாலையிலேயே என்னை எழுப்பிவிடுவார்.

என்னுடைய பயணத்தின் ஒவ்வொரு காலடியிலும் அம்மா இருக்கிறார். அப்பா, அண்ணாவும் நிறைய சப்போர்ட்டாக இருக்கிறார்கள். பயிற்சிகளிற்கு செல்வதற்கு உதவுவதுடன், ஆலோசனைகளும் தருவார்கள்.



அதேபோல, எனது பயிற்சியாளர்களையும் நினைவுகூர வேண்டும். நான் இந்த இடத்திற்கு வந்ததற்கு அவர்களும் முக்கிய காரணமானவர்கள். முகுந்தன் சேர், நவரத்தினம் சேர் போன்றோர் எனக்காக நிறைய நேரம் ஒதுக்கி பயிற்சிகள் தருவார்கள். இவர்கள் எனது வெற்றியின் பின்னணியில் இருந்தவர்கள். அவர்கள் தந்த உற்சாகம், நம்பிக்கை, பயிற்சி என்னை சாதிக்க வைத்தது. இன்னும் இன்னும் அதிகதூரம் சென்று சாதிக்க வேண்டும்.

நான் பாடசாலையை விட்டு வெளியேறினாலும், முகுந்தன் சேர் போன்றவர்களை போல இருக்க ஆசை. நான் கற்றுக்கொண்டதை விளையாட்டில் ஆர்வமுடைய ஏனையவர்களிற்கு கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்களிற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்' என்கிறார் நிதானமாக.

### தேடி வரும் கௌரவம்

நம்மவர் வீட்டு சுவர்களில் நடிகர் நடிகைகளின் படங்கள் தான் தொங்கவிடப்படும். ஆனால் இவர்களுடைய வீட்டில் கொடி போல் கம்பியை கட்டி அதில் மெடல்களை தொங்க விடப்பட்டுள்ளது. 'ஷோக்கேஸ்' ஒன்றின் மேல் பிள்ளைகள் அள்ளிவந்த சம்பியன்கள் குவிக்கப்பட்டுள்ளது.

டென்சிகாவின் சாதனைகள் பலரையும் திரும்பிப்பார்க்க வைத்துள்ளது. டென்சிகாவை இப்பொழுது அனைவரும் அறிந்து வைத்துள்ளனர். மாவட்ட செயலகம், பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் அவரை கௌரவித்துள்ளனர்.

டென்சிகாவின் விளையாட்டு துறை கனவுகள் நனவாகி இந்த சின்ன பெண்மணி ஒரு சாதனை பெண்ணாக இந்த மண்ணில் ஜொலிக்கஇறைவனை பிரார்த்திப்பதோடு தீபம் பத்திரிகை சார்பாக வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.



## மக்கள் குரல்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசசெயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ளது இந்த வீதி. மிகநீண்டகாலம் திருத்தப்படாமல் இருந்த வீதியை அண்மையில் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கான ஒப்பந்தக்காரர் மண்ணை நடுவீதியில் கொட்டிவிட்டுள்ளதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். நடுவீதியில் கொட்டப்பட்ட மண், பரவப்படாமல் உள்ளதால் பயணிகள் பெரும் சிரமங்களை சந்திக்கின்றனர்.

நட்டாங்கண்டல், பனங்காமம், கரும்புள்ளியான், துணுக்காய், சிராட்டிக்குளம், பாண்டியன்குளம் போன்ற பிரதேசங்களிற்கு செல்லும் முக்கிய வீதியாக இது விளங்குகிறது. பிரதேசசெயலகம், வைத்தியசாலை, பாடசாலை போன்றவற்றிற்கு செல்பவர்கள் பலவித வித்தைகளை புரிந்தே செல்ல வேண்டியுள்ளது.



இந்தப்பகுதியிலிருந்து நோயாளர்களை மல்லாவி வைத்தியாலைக்கு கொண்டு செல்வதென்றாலும் இந்த பகுதியால்த்தான் செல்ல வேண்டும். வீதி தற்போதுள்ள நிலையில் நோயாளர் காவுவண்டி செல்வதற்கும் முடியாத நிலைதான் காணப்படுகிறது.

ஒப்பந்தங்களை வழங்குவது மட்டுமல்ல, அவற்றை கண்காணிப்பதும் அதிகாரிகளின் பணியல்லவா!

## அரசியல் கிசுகிசு

- வீட்டுக்காரர்கள் நாலுபேரும் முகத்தை உர் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்களாம். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு கோணம். அரசுக்கட்சி மத்தியஅரசுடன் நெருக்கம், ஜெனீவா தீர்மானத்திற்கு ஆமா போட்டதெல்லாம் மற்றவர்களிற்கு உவப்பில்லை. தட்டிக்கேட்போம் என மற்ற மூவரும் புறப்பட்டால் 'பணக்கார' நாதன் பம்மிவிடுகிறார். பாராளுமன்றத்தில் தந்த பதவிக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமென அவர் விரும்புகிறாராம். இப்படியே விட்டால் நாலுபேரும் நாலுமூலையில் உட்கார்வார்கள் என சிந்தித்த சிவில் செயற்பாட்டாளர்கள் ஒரு குழுவை அமைக்க முயல்கிறார்களாம். தமிழர் தீர்வு விவகாரத்தில் பொறுப்பை அரசியல்வாதிகளிடம் விட்டால் இப்படி சொதப்புவார்கள் என்பதால் அந்த ஏற்பாடாம். அதற்கான முன்னோடிக் கூட்டம் வவுனியாவில் நடந்தது. இம்முறை யாழில் தோற்ற கட்சித்தலைவரும், இம்முறைதான் யாழில் வென்ற கட்சித்தலைவரும் வீட்டுக்குள்ளிருந்து போனார்களாம்.
- புலிகளின் அரசியல் பிரிவு பெண் முக்கியஸ்தர் புற்றுநோயால் மரணமாகியிருந்தார். இறக்கும்வரை அவர் வாழ்ந்தது ஒரு சிறிய, வசதியற்ற வீட்டில். போதுமான பணவசதியும் இருக்கவில்லை. அவர் விடுதலையாகி இரண்டரை வருடங்களிற்கு மேல். ஒரு அரசியல்வாதியும் அவரை எட்டிப்பார்க்கவில்லை. அவர் விடுதலையான புதிதில், யாழிலிருந்து வரும் உதயமான பத்திரிகை முழுப்பக்க கட்டுரையொன்று வெளியிட்டிருந்தது. அதில் அவரை பச்சைத்துரோகி, ஏன் உயிர்தப்பினாய் என சொல்லாத குறையாக கேள்வி கேட்டிருந்தார்கள். இப்பொழுது என்னடாவென்றால், அவர்கள்தான் முன்வரிசையில் நின்று அழுதார்கள். அதைவிட கொடுமை, அங்கு சென்றிருந்தார் வீட்டின் 'பணக்கார'நாதன். மரணவீட்டிற்கு வந்திருந்த முக்கியஸ்தர்களான முன்னாள் போராளிகள் சிலரை கண்டதும், 'அட.. நீங்கள் எல்லாரும் இருக்கிறியளா?.. செத்துவிட்டீர்கள் என நினைத்தன்' என சொல்லி போட்டாராம் ஒரு போடு!
- யாழ்ப்பாணத்தில் ஒரு தொலைக்காட்சிக்கு சீல் வைக்கப்பட்டு விட்டது. செய்தி வெளியான பின்னர்தான் யாழ்ப்பாணத்திலிருந்த பெரும்பாலானவர்களிற்கு அப்படியொரு தொலைக்காட்சி இருந்தது தெரிய வந்ததாம். அந்த தொலைக்காட்சியால் ஒரு பலனுமில்லை என வீணைத்தலைவரிடம் கட்சிக்காரர்கள் பலரும் சொல்லி வந்திருக்கிறார்கள். தலைவருக்கும் புரிவது போல இருக்குமாம். பின்னர் புரியாதாம். காரணம், தலைவரின் சொந்த இரத்தம்தான் தொலைக்காட்சியை நடத்தினார். இதனால் நீண்டநாட்களாக சொந்தக்காசில் சூனியம் செய்து கொண்டிருந்தனர். இப்பொழுது சீல் வைக்கப்பட்டது கட்சிக்குள் பரவலான சந்தோசமாம். ஆனால், இரத்தம் ஓய்வதைப் போல தெரியவில்லையாம். மீண்டும் தொடங்கிக்காட்டுகிறேன் என சவால் விடுகிறாராம்.



# ஜெயித்துக் காட்டும் ஜெயக்குமாரி

செ.கார்த்திகா
sukuna.k@gmail.com

கை, கால் நன்றாக இருப்பவர்கள்கூட இன்று பணத்திற்காக கொள்ளையடித்தும், அடுத்தவர்களிடம் பிச்சை எடுத்தும் வாழ்கின்ற நிலையில், சொந்த உழைப்பில் தன்னை மட்டுமல்ல தன் தாயையும் நன்றாக கவனித்து வருகின்றார் மாற்றுத் திறனாளி செல்வி என்.ஜெயகுமாரி.

பிறவியிலேயே கால்கள் வளர்ச்சி குன்றிய இவர், ஆரம்பத்தில் பல சவால்களையும், சிரமங்களையும் எதிர்கொண்டாலும், அவற்றுடன் எதிர்நீச்சல் போட்டு மாற்றுத் திறனாளிகளுக்கு ஓர் முன்னுதாரணமாக வாழ்ந்து வருகின்றார்.

யாழ்.திருநெல்வேலி வடக்கில் இயங்கிவரும் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் நண்பர் ஒருவர் ஊடாக 1991ஆம் ஆண்டு இணைந்து கொண்ட ஜெயக்குமாரி இன்று அந்தச் சங்கத்திலேயே சுயதொழில், தையல் ஆசிரியராகவும், நிதி வருமானப் பிரிவுப் பொறுப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.





கிளிநொச்சியை பிறப்பிடமாகக் கொண்ட இவருக்கு உடன் பிறந்தவர்கள் இருந்தாலும் அவர்களில் தங்கி வாழ விரும்பாத இவர், தன்னுடைய தாயுடன் யாழ்ப்பாணத்திலேயே தனியாக வசித்து வருகின்றார். உடன் பிறந்தவர்கள் அனைவருக்கும் திருமணமாகிவிட்டது. அவர்களை விட்டு பிரிந்து இருந்தாலும். எங்களுடைய பாசம் அளவிட முடியாது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் என்னையும் அம்மாவையும் வந்து பார்ப்பார்கள் நாங்கள் அவர்களைப் போய் பார்ப்போம் தன்னுடைய குடும்பம் பற்றிக் குறிப்பிட்டார்.

## மாறிவிட்டேன்

"மற்றவர்களைப்போல் என்னால் இயங்க முடியவில்லை என்று ஆரம்பத்தில் நிறைய கவலைப் பட்டன். யாருடனும் பெரிசா கதைக்க மாட்டன். மனசில வெறுப்பும், கோபமும் தான் முழுக்க முழுக்க இருந்திச்சு. ஆனால், இப்ப நான் நிறைய சந்தோசமா இருக்கிறன். எனக்கு எந்தக் குறையுமில்லை. கையில நல்ல வருமானம் இருக்கு" எனக் கூறும் இவர், தன்னுடைய கவலை, கோபத்தை முற்றாக மாற்றி தன்னம்பிக்கை கொடுத்து, சொந்தக் காலில் நிற்க வைத்தது வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் தான் எனவும், இந்தச் சங்கத்தின் மூலம் தனக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

வாழ்க்கையில் கீழே வீழ்ந்து விடாமல் நிலையாக நிற்க வைப்பதும், நடக்க வைப்பதும் கையில் வைத்திருக்கும் ஊன்றுகோல் இல்லை என்னுடைய நம்பிக்கை என தைரியமாகக் கூறுகிறார் அவர்.

## கையில் பல கலைகள்

கேக் தயாரித்தல், கேக் ஐசிங், பூமாலை கட்டுதல், தலை அலங்காரம், முத்துமாலை, நாகசடம், பின்னல் வேலைகள், மணிகள், முத்துக்கள் மூலம் கழுத்தணிகள் தயாரித்தல், கிறிஸ்ரல் கல் அலங்கார வேலைகள், தையல் என பல்வேறு தொழிற் பயிற்சிகளை வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் பெற்றுக் கொண்ட ஜெயக்குமாரி, அங்கேயே சுயதொழில், தையல் பயிற்சிகளை வழங்கும் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இதுவரை கிட்டத்தட்ட 1000ற்கும் மேற்பட்டவர்கள் இவரிடம் பயிற்சி பெற்றுள்ளனர். மாற்றுத்திறனாளிகள் மட்டுமல்ல சாதாரணமானவர்களுக்கும் இவர் பயிற்சியளித்துள்ளார். வாய் பேச முடியாதவர்களுடன் சைகை மொழியிலும் இவர் பேசக்கூடியவர்.

சமூக நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் என அனைத்து நிகழ்வுகளிலும் பங்குபற்றி அசத்தும் இவர் வெளி மாவட்டங்களுக்கும் சுற்றுலா சென்று வருகின்றார். இதற்கான ஏற்பாடுகளை வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கமே ஏற்பாடு செய்து கொடுக்கின்றதாம்.



## கண் பார்க்க கை செய்யும்

எந்தவொரு தையல் வடிவமாக இருந்தாலும்சரி, கேக் ஐசிங் வடிவமாக இருந்தாலும்சரி அதை ஒரு தடவை மட்டுமே பார்த்து விட்டு அப்படியே தைக்கக்கூடிய, செய்யக்கூடிய வல்லமையுடையவர். குழந்தைகள், பெண்களுக்கான சகல விதமான ஆடைகளையும், காலத்திற்கு ஏற்றால்போல் பல்வேறு டிசைன்களில் வடிவமைத்துக் கொடுத்து வரும் ஜெயக்குமாரியிடம், வெளியிடங்களில் இருந்தும் பலர் ஆடைகளை தைத்து வாங்கிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. அதுமட்டுமல்ல எந்தவொரு வேலைக்கும் அதிகம் நேரம் எடுத்துக் கொள்வதில்லையாம். வாழ்க்கையில் நேரம் பொன்னானது ஒரு செக்கனைகூட விரயமாக்கக் கூடாது என்கிறார் அவர்.

## எங்கும் செல்வேன்

தன்னால் முடியவில்லை என ஓர் இடத்திலேயே இருக்காமல் தனக்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட மூன்று சக்கர மோட்டார் சைக்கிளில் தான் விரும்பிய இடங்களுக்குச் சென்று வருவதுடன், இவருடைய மற்றும் இவருடைய தாய், உறவினர்கள், நண்பர்களின் தேவைகளையும் இவரே பூர்த்திசெய்து வருகின்றார்.

## எதிர்காலத்தில்...

மாற்றுத் திறனாளிகளை புறந்தள்ளும் பழக்கம் சமூகத்தில் இன்னமும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. நாமும் சமூகத்தில் ஒருவர் என வாழவேண்டும் என்றால் கல்வியும், சொந்த உழைப்பும் அவசியம். எனவே, என்னைப் போன்றவர்களுக்க என்னால் இயலுமானவரை சுயதொழில் பயிற்சிகளை வழங்கி அவர்களை சொந்தக் காலில் நிற்க வைப்பது தான் என் இலட்சியம் என்கிறார் ஜெயக்குமாரி. தான் மட்டும் நன்றாக வாழ்ந்தால் போதும் என்று நினைக்கும் இந்தக் காலத்தில் அடுத்தவர்களும் நன்றாக வாழ வேண்டும் என நினைக்கும் ஜெயக்குமாரி பாராட்டுக்குரியவர்தான்.

> **மாற்றுத் திறனாளிகளை புறந்தள்ளும் பழக்கம் சமூகத்தில் இன்னமும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. நாமும் சமூகத்தில் ஒருவர் என வாழவேண்டும் என்றால் கல்வியும், சொந்த உழைப்பும் அவசியம்.**



மாற்றுத் திறனாளிகளை சமுதாயத்திலிருந்து வேறுபடுத்தாமல் அவர்களுக்கு தன்னம்பிக்கை கொடுத்து அவர்களோடு இணைந்து செயற்பட அனைவரும் முன்வரவேண்டும். அவர்களின் மறுமலர்ச்சிக்கு சமூக ஒத்துழைப்பும் அவசியம். அந்தவகையில், முன்னுதாரணமாகச் செயற்படும் மாற்று திறனாளிகளை சமூகத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டிய பொறுப்பும், கடமையும் நிச்சயமாக ஊடகங்களுக்கு உண்டு. அவ்வாறே, "தீபம்" வார இதழும் மாற்றுத் திறனாளிகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.





1-ம் பக்க தொடர்ச்சி

விதைத்ததைதான் அறுக்க முடியும்என்பார்கள். அது எவ்வளவு பெரிய உண்மை. நிலத்தில் கல் கிடந்து எடுப்பதும் ஒன்றுதான், இலங்கையில் எலும்புக்கூடுகள் எடுப்பதும் ஒன்றுதான் என்பதுதான் தற்போதைய இலங்கை நிலையென்பதை நினைக்க மனசு பகீர் என்கிறது. நிலத்தை தோண்டுபவர்களில் பலரிற்கு என்ன கிடைக்கிறதோ இல்லையோ எலும்புக்கூடுகள் கிடைக்கிறது. வன்னிப்பகுதியில் பல இடங்கள், வேலணை, மன்னார், திருகோணமலையென இந்தப்பட்டியல் பெரியது.

எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்படுவதும், பின்னர் அது வழக்கம் போல மறக்கப்படுவதும் வெகு சாதாரண நிகழ்வுகள். மன்னார் விவகாரம்தான் அண்மையில் நீதிமன்றத்தின் ஊடாக விசாரணை தொடரும் சம்பவம்.

இப்பொழுது இறுதியாக அரியாலையை அண்டிய பகுதிகளில் எலும்புக்கூடுகள் சில மீட்கப்பட்டுள்ளன. அந்தப்பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டபோது, ஏதேச்சையாக தடயங்கள் வெளிப்பட்டுள்ளன. அவை பெண்களுடையதாக இருக்கலாமென நம்பும் வகையிலான சில ஆதாரங்களும் கிடைத்தன. செருப்பு, கைப்பை, ஆடைகள் என்பன அந்த ஆதாரங்கள். இதில் மாணவிகளும் இருக்கலாமென அஞ்சப்படுகிறது.

### கறுப்பு அத்தியாயம்

செம்மணியை யாரும் இலகுவில் மறக்கமாட்டார்கள். குடாநாட்டின் கறுப்பு வரலாறாக அது என்றும் நினைவில் இருக்கும். 1995, 96 காலப்பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டில் குடாநாடு இருந்த சமயத்தில் கைது செய்யப்பட்டு காணாமல் போன நூற்றுக்கணக்கானவர்கள் பற்றிய மர்மம் நீடித்துக் கொண்டிருந்தபோது செம்மணி அதிர்ச்சிகள் வெளிப்பட்டன. அரியாலையை அண்மித்த பகுதிகள், செம்மணி பகுதிகளில் அந்த மனிதப்புதைகுழி அம்பலமானது.

காணாமல் போனவர்கள் இராணுவத்தினரால் கொன்று புதைக்கப்பட்டிருந்தார்கள் என்பது நீதிமன்ற விசாரணையில் நிரூபிக்கப்பட்டு, இராணுவச்சிப்பாய் தண்டிக்கப்பட்டுமிருந்தார்.

இப்பொழுது மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதும், இதற்கு சமீபமான பகுதியில்த்தான் என்பதே மனதை பதறச் செய்கிறது.

95, 96 காலப்பகுதியில் அரியாலைப்பகுதியை சேர்ந்த பெருமளவு மக்கள் கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்டுள்ளனர். அரியாலை, செம்மணியை உள்ளடக்கிய பகுதிய இராணுவத்தின் விஸ்தீரணமான உயர்பாதுகாப்பு வலயமாக முன்னர் விளங்கியது. அந்தப்பகுதி தொடர்பான திடுக்கிடும் கதைகளும் பரவலாக உலாவின. இதனாலேயே செம்மணி என்றாலே நம்மவர்களிற்கு அடிவயிறு பிசையும். அரியாலையில் காணாமல் போன பெருமளவானவர்கள் இந்த உயர்பாதுகாப்பு வலயங்களிற்குள் காணாமல் போயிருக்கலாமென, காணாமல் போனவர்களின் உறவுகள் இன்றும் நம்புகிறார்கள். எனினும், அவர்களின் குற்றச்சாட்டை முன்னெடுத்துச் செல்லத்தக்க உறுதியான பௌதீக,தகவல் ஆதாரங்கள் எதுவும் இதுவும் கிட்டியிருக்கவில்லை.

இப்பொழுது இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இதுதான் அந்தப்பகுதியில் காணாமல் போனவர்களின் உறவுகளை திகிலடைய வைத்துள்ளன. காணாமல் போன பிள்ளை என்றாவது ஒருநாள் வருமென நம்பியிருந்தவர்களை இந்தத் தகவல்கள் நிலைகுலைய வைத்துள்ளது.

### இன்னொரு கிரிஷாந்தி

கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் பெண்களுடையவை என்று நம்பும்படியான பௌதீக ஆதாரங்கள்தான் கிட்டியுள்ளன. என்றாலும், அதுமுறையான ஆய்வு முடிவல்ல. முறையான ஆய்வு முடிவுகளிற்காக இன்னும் சிலநாட்களோ, வாரங்களோ காத்திருக்க வேண்டி வரலாம்.

கிடைத்த ஆதாரங்களினடிப்படையில் அவை பெண்களுடையவை என நம்பலாமென கூறப்படுகிறது. பெண்கள் பயன்படுத்தும் பொருட்கள் அந்த எலும்புக்கூடுகளுடன் மீட்கப்பட்டுள்ளன. பெண்களின் கைப்பை, பேர்ஸ் என்பன அங்கிருந்துள்ளன.

எலும்புக்கூடு ஒன்றிற்கு அருகில் இருந்த கைப்பையிலிருந்து பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் பேர்ஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுதான் நெஞ்சைப்பதறச் செய்கிறது. அதற்குள்ளிருந்து பென்சில், பேனா, அடிமட்டம் போன்ற கல்விஉபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன. அந்தப் பேர்ஸ்சை வைத்துப் பார்க்கும்போது அவர் மாணவியாக இருக்கலாமென நம்ப வாய்ப்புள்ளது.

கிரிசாந்தி, கோணேஸ்வரி, சாராதாம்பாள், ரீட்டா என நாம் பறிகொடுத்தபெண்களின் பட்டியல் ஏராளம். பறிகொடுத்தவர்களிற்காக அழுது தீர்த்து தொண்டைத் தண்ணீரும் வற்றிவிட்டது. இந்தப் பட்டியல் முடிவின்றி நீளப்போகிறதா என்பதே இப்பொழுது மனதைப்பதைக்க வைக்கும் கேள்வி.

இந்தப்பகுதிக்கு சென்று பார்த்தபோது, எலும்பக்கூடுகள் மீட்கப்பட்ட பகுதிக்கு அண்மையில் இராணுவக்காவலரண்கள் இருந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. என்றாலும், எலும்புக்கூடுகளும் காவலரண்களும் சமகாலத்தவையா என்பதை நம்மால் உறுதி செய்ய முடியாது. அதற்கு உரியவிசாரணைகள் அவசியம். என்றாலும், அந்தப்பகுதி நீண்டநாட்களாக உயர்பாதுகாப்பு வலயமாக இருந்துள்ளது. கடந்த இரண்டு வருடங்களின் முன்னர்தான் பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

நம்மவர்களும் இலேசுப்பட்டவர்கள் இல்லை, ஜீரணித்துக் கொள்ளவே முடியாத எத்தனை பாதகங்களை செய்கிறார்கள், அதில் ஒன்றாக இதுவும் இருக்கலாமென்பவர்களும் உள்ளனர். எனினும், மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் ஐந்து முதல் ஏழு ஆண்டுகளின் முன்னர் புதைக்கப்பட்டிருக்கலாமென்ற முதற்கட்ட தகவலை வைத்துப் பார்க்கும்போது அதற்கு வாய்ப்பில்லை போலவே தோன்றுகிறது.

### ஆர்ஜென்ரீன முன்னுதாரணம்

இந்த எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதும், வழக்கம் போல பல்வேறு ஊகங்கள் கிளம்பியுள்ளன. அந்தப் பகுதி முழுவதும் எலும்புக்கூடுகள் உள்ளதாகவும் ஒரு தகவல் காட்டுத்தீயாக பரவியது.

இது வதந்தியாக இருக்கவே வாய்ப்புள்ளது. என்றாலும், அப்படியான சந்தேகங்கள் மக்கள் மத்தியில் நீடிக்காமலிருக்க முறையான ஆய்வுகள் செய்வதே வழி. இப்பொழுது பொலிசார் முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். தடயவியல் நிபுணர்களும் அங்கு சென்று ஆதாரங்களை சேகரித்துள்ளனர்.

தற்போது நடைமுறையில் உள்ள நமது தடயவியல் ஆய்வு முறைமையின் அடிப்படையில் அந்த எலும்புக்கூடுகள் ஆண்களதா பெண்களதா?, எந்தக்காலப் பகுதிக்குரியவை என்பதை மட்டுமே துல்லியமாக அறிய முடியும். எலும்புக்கூடுகளை வைத்து, யாரின் எலும்புக்கூடுகள் என்பதை துல்லியமாக அறியும் பொறிமுறையை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

யுத்தத்தின் பின்னரான நல்லிணக்க நடவடிக்கைகள் ‘மறுமலர்ச்சி’ கண்டுள்ள தற்போதைய நிலையில் இந்த நடவடிக்கைகள் அவசியம். ஆர்ஜென்ரீன உள்நாட்டு யுத்தத்தின் போது பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்ட குழந்தைகளை, உண்மையான பெற்றோரிடம் ஒப்படைக்கும் பொறிமுறையை அந்தநாட்டு அரசு இதயபூர்வமாக முன்னெடுத்தது.

இதற்குவாய்ப்பாக பிள்ளைகளை பறிகொடுத்த பெற்றோரின், பிரிக்கப்பட்ட பிள்ளைகளின் மரபணுக்கள் சேமிக்கப்பட்டன. அதன் பின்னர் இருதரப்பையும் இணைத்து வைக்கும் செயற்பாடு சிரமமின்றி, வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

நமக்கும் இது முன்னுதாரணமாக இருக்கும். இனநல்லிணக்கத்தில் பொறுப்புக்கூறலும் முக்கியமான அம்சமென்பதை புதிய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. காணாமல் போனவர்கள் விடயத்தில், அவர்களின் உறவுகளிற்கு நடந்ததை உரியவர்கள் அறந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளை, உறவுகளை பறிகொடுத்தவர்களின் மரபணுக்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டால், இப்படியான சமயங்களில் ஒப்பிட்டு பார்த்து, அது யாரின் எலும்புக்கூடு என்பதை அடையாளம் கண்டுகொள்ளலாம்.

இவை எல்லாவற்றையும் விட, நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு அந்தப்பகுதி முழுமையான ஆய்வு செய்யப்பட்டால் மேலும் பல உண்மைகள் வெளிவரலாம்.

பிள்ளைகளிற்கு என்ன ஆனதென்பதை தெரியாமல் அலைந்து திரியும் பெற்றோர்களின் கேள்விகளிற்கு அது விடையும் கொடுக்கலாம்.

## “தீபம்” பத்திரிகையால் 4 இலட்சம் ரூபா ஓடர் வந்தது!





தீபம் பத்திரிகையில் வெளிவந்த என்னுடைய மட்பாண்ட கைத்தொழில் பற்றிய ஆக்கத்தால் சுமார் 4 இலட்சம் ரூபாய் ஓடர் வந்தது. ஆனால், மழை மற்றும் போதிய இடவசதி இல்லாத காரணத்தினாலேயே வெளிநாட்டில் இருந்து கிடைத்த இந்த ஓடரை என்னால் ஏற்றுச் செய்ய முடியாமல் போனது.

அதுமட்டுமல்ல எனது உற்பத்திகளுக்கு இப்போது அதிகம் வரவேற்புக் கிடைத்துள்ளது. பலர் என்னை தேடி வருகின்றனர். எனது முயற்சிகளுக்கு பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர். குறுகிய வட்டத்துக்குள் மட்டுமே இருந்த எனது உற்பத்திகளுக்கு, தற்போது வடக்கு மாகாணம் முழுவதும் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் அதிகம் வரவேற்புக் கிடைத்துள்ளது. **“கைவிரல்களில் கலைநயம்”** என்ற தலைப்பில் தீபம் பத்திரிகையில் வெளிவந்த என்னுடைய மட்பாண்ட தொழில் பற்றிய ஆக்கமே இதற்கு பிரதான காரணம்.

இதற்கு முன்னரும் ஒரு சில ஊடகங்கள் என்னை பேட்டி எடுத்தன. அவை அத்துடன் மட்டுமே முடிந்தது. ஊடகங்களில் வெளிவரவில்லை. ஆனால், தீபம் ஊடகம் என்னைப் பற்றியும், என்னுடைய கைத்தொழில் பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும் எழுதியிருந்தது உண்மையிலேயே எனக்கு சந்தோசமாக இருக்கிறது. தீபம் ஊடகவியலாார் வந்து என்னை பேட்டி எடுக்கும் போது, “இது எங்க பத்திரிகையில வரப்போகுது சும்மா கதைச்சிட்டு போயிடுவாங்க” என்று மனசுக்குள்ள நினைத்தன். ஆனால், பேட்டி எடுத்து இரண்டு நாட்களிலே பத்திரிகையில் வெளிவந்துவிட்டது.

ஆரம்பத்தில் இருந்து முடிவு வரை சுவாராஸ்யமாக ஒரு கோர்வையாக ஆக்கம் அமைந்திருந்ததால் வாசிக்க ஆசையாகவும், ஆர்வமாகவும் இருந்து. அதுமட்டுமல்ல பத்திரிகையில் வெளிவரும் அனைத்துப் பகுதிகளுமே நன்றாக உள்ளன.

என்னைப் போல வேறுபல கைத்தொழிலாளர்கள் பற்றியும் வெளியில் தெரியப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

பலர் மத்தியில் என்னை அறிமுகப்படுத்திய தீபம் ஊடகத்திற்கு மீண்டும் மீண்டும் நன்றிகள்.

**பழனிமுருகையா ராஜேந்திரன்**

மட்பாண்டக் கைத்தொழிலாளர்

யாழ். மட்பாண்ட கலைஞர் கூட்டுறவுச் சங்கத் தலைவர

மேகலா.ம
mehala.mahilrajah@gmail.com



# நல்லாட்சியும் சமூகப்பொறுப்புடைமையும்

சேவைகளின் மேம்பாடும் அவற்றின் தரங்களிலுமே நல்லாட்சி தங்கியிருக்கிறது. அச் சேவைகளை பெறும் போது உரிமைகளும் கடமைகளும் பற்றி எப்போதும் எல்லோரும் பேசிக்கொள்வது வழக்கம். ஒரு பாவனையாளராக சேவை ஒன்றை பெறுகிற உரிமை எமக்கு இருக்கிறது, அதை சரிவர வழங்கவேண்டிய கடமை அந்த சேவை வழங்குனருக்கு இருக்கிறது. இதைப்பற்றி விமர்சிக்கிற கண்டனம் தெரிவிக்கிற பொதுமக்களாகிய நாம் இந்த சேவைகள் மேம்பாட்டிற்கு எமது பங்களிப்பு, நமது பொறுப்புடைமை பற்றி எப்போதாவது சிந்தித்து இருக்கிறோமா?

ஒருகுடும்பத்தை மட்டும் எடுத்துக் கொண்டால் மின்னிணைப்பில் பிரச்சினை என்றால், அல்லது தண்ணீர் வழங்கலில் சிக்கல் என்றால் ஒருவர் பொறுப்பாக அதை செய்கிறோம். ஏனென்றால் நமது வீடு. நமது பிள்ளைகளின் கல்விக்கு தடங்கல் வந்துவிடக்கூடாதே என்கிற அக்கறை. அதுவே பொதுக் கிணற்றில் நீர் மாசடைவு, நூலகத்தில் மின்னிணைப்பு இல்லை என்பது பற்றி பேசினால் 'யாரோ' பார்த்துக் கொள்வார்கள், நமக்கேன் தேவையில்லாத வேலை என்கிற ஒதுக்கம் பரவலாக எங்களிடம் இருக்கிறது.

சேவைகளில் உள்ள குறைகளை முறைப்படி மேலிடத்துக்கு எடுத்துச்செல்ல நமது பின்னூட்டல்களை ஆதாரத்துடன் வழங்க என்று பல்வேறு முறைகள் இருக்கிறன. அவற்றில் எவற்றையேனும் பின்பற்றாமல் வெறும் எதிர்மறை விமர்சனங்களை கூறுவதில் என்ன பயன் இருக்கிறது? அனோமேதய கடிதங்கள் அனுப்புதல், கலவரம் அல்லது ஆர்ப்பாட்டம் செய்தல், அதிகாரிகளை தாக்குதல் என்று முறையற்ற பின்னூட்டல்களை செய்வதென்றாலும் பலருக்கு நாட்டம் உண்டு.

கடந்த ஆக்கத்தில் சொன்னது போல வெறும் கல்வி அடைவு மட்டங்களையும் உயர்பதவி என்கிற இலக்கையும் கொண்டு நகர்கிறோமே தவிர மற்றைய பொறுப்புக்களில் பண்புகளில் நமது கடமையை உணரத் தவறிவிடுகிறோம். தனி நபராக சில விடயங்களை செய்ய முடியாதவிடத்து குழுக்களாக இணைந்து கூட சில பின்னூட்டல்களை சேவைகளின் தர மேம்பாட்டுக்காக வழங்க முடியும். உண்மையில் சமூக அமைப்புக்கள் உருவாக்கம் பெற்றமைக்கு இத்தகைய இணைந்த பொறுப்புடைமை செயற்பாடுகளே காரணம். இணைந்த முறைப்பாடுகள், தேவைக்கான பிரேரணைகள், அதற்கான முன்னெடுப்புகள் என்று வாரத்தில் ஒருநாளேனும் குறித்த நேரத்தை ஒதுக்கியிருப்பார்கள். அதில் இருக்கிற 'பொறுப்புடைமை' இப்போது 'சம்பளமில்லா வேலை' என்று முத்திரை குத்தப்பட்டு அந்த ஒன்றுகூடல்களும் குறைந்து விட்டன. ஆனால் தற்போது அவை முதியோரின் விடயங்கள் போலவும் 'வேலை இல்லாதவர்கள், சமூக தொண்டு செய்ய விரும்புபவர்கள் தான் அங்கு இருப்பதாகவும் பலர் கருதுகிறார்கள்.

பொதுவாக நிர்வாக கட்டமைப்பு அலுவலகங்களில் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ள 'பிரசைகள் பட்டயம்' (citizen charter) என்பது கூட ஒரு பொறுப்புடைமை முறைமை. இந்த சேவைக்கான காலம் இவ்வளவு என்பதையும் அதற்கான பொறுப்பானவர் யார் என்பதையும் குறிப்பிட்டு இருக்கும். அதனை சரிவர நடைமுறைப்படுத்தாவிட்டால் கேட்கிற பொறுப்பு நமக்கு உள்ளது என்பது எம்மில் பல பேருக்கு தெரிவது இல்லை. கொடுக்கிற பணத்துக்கான உரிய பற்றுச்சீட்டை கேட்டுப் பெறுவது கூட பொறுப்புடைமை தான்.

முறைப்படுத்தப் பட்டதும் அங்கீகரிக்கப்பட்டதுமான ஆதாரத்துடன் வழங்கக் கூடிய சமூக பொறுப்பு முறைமைகள் பல இருக்கிறன. ஒவ்வொரு நாட்டிற்கும் பிரதேசத்திற்கும் அவற்றின் பின்னணிக்கேற்ப இந்த முறைகளை அல்லது கருவிகளை தேர்ந்தெடுத்து பிரயோகிக்க முடியும்.

உதாரணமாக உலக வங்கியின் சமூக பொறுப்புடைமை தொடர்பான கையேடு ஒன்றில்

- பங்கேற்புடனான கொள்கைவகுப்பு மற்றும் திட்டமிடல் (Participatory Policy Making and Planning)
- வரவுசெலவு திட்டம் தொடர்பான சமூக பொறுப்புடைமை (Budget -Related Social Accountability Work)
- பொதுச் சேவைகள் கண் காணிப்பு மற்றும் மதிப்பீட்டில் சமூகப் பொறுப்புடைமை (Social Accountability in the Monitoring and Evaluation of Public Services and Goods)
- பொதுமக்கள் பின்னூட்டலும் எண்ணப்பாடுகளும் (Social Accountability and Public Oversight )


ஆகிய நான்கு சமூகப் பொறுப்புடைமை செயற்பாடுகளில் எவ்வாறான முறைகளையும் கருவிகளையும் எவ்வாறான விடயங்களுக்கு எப்படியான சூழலில் அவற்றை பயன்படுத்தலாம் என விளக்கமளித்துள்ளார்கள்.

அது தவிர குடிமக்கள் மதிப்பீட்டு அட்டை (Citizen Report Card) மற்றும் சமூக மதிப்பெண் அட்டை (Community Score Card) என்பனவும் பரவலாக சேவை வழங்குனர்களின் சேவைகளின் தரம் தொடர்பில் ஆதார பூர்வமான பின்னூட்டல்களை வழங்கும் முறைகளாக பல்வேறு நாடுகளிலும் பல்வேறுபட்ட துறைகளிலுள்ள நிறுவனங்களாலும் பின்பற்றப்பட்டு வருகிறன.

தற்போது நமது நாட்டில் சேவைகளின் மேம்பாட்டிற்கான மக்களின் பின்னூட்டலுக்கு சேவை வழங்குனர்களுடன் இணைந்து ஒரு சில நிறுவனங்கள் (வறுமை ஆராய்ச்சி நிலையம், ஆசியா நிறுவனம்) குடிமக்கள் மதிப்பீட்டு அட்டையை பயன்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள்.

இதற்கு துடிப்பாக இயங்கும் சமூக அமைப்புக்களும் அவற்றின் அங்கத்தவர்களுமே பயிற்சி வழங்கப்பட்டு பயன்படுத்தபடுகிறார்கள். ஆனால் சமூக அமைப்புக்கள், சனசமூக நிலையம், விளையாட்டுக்கழகம் என்று தன்னார்வமாக தமது பங்களிப்பை ஆற்றி வந்த இளைஞர்களை காண்பது இப்போது அரிதாகிவிட்டது. இத்தகைய ஆர்வமிக்க அமைப்புக்களை கண்டுபிடிப்பதும் சவாலாகவே இருக்கிறது.

இளைஞர்கள் மட்டுமன்றி பொது மக்களது பங்களிப்பும் இத்தகைய விடயங்களில் நலிவடைந்தே இருக்கிறது. நகரமயமாக்கல் என்று சொல்லிக்கொண்டு நம்மை நாம் சுருக்கிக் கொண்டு விட்டோம். இன்னும் அந்த மக்கள் பண்போடும் பற்றோடும் இருக்கிற பசுமை கிராமங்களில் ஒட்டிக்கொண்டிருக்க அபிவிருத்தி என்று அதையும் துடைத்தெறிந்து விடப்போகிறோமா தெரியவில்லை.




# வவுனியாவிலும் தலைதூக்குமா ரௌடிகள் ராச்சியம்?



தற்போது வவுனியா வைரவப் புளியங்குளத்தில் இளைஞர்கள் பலர் ஒன்றுகூடி போதை கலந்த பாக்கை உட்கொண்டுவிட்டு பெரும் அட்டகாசங்களில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

இப் பகுதியில் பல தனியார் கல்வி நிறுவனங்களும் மிக நெருக்கமாக அமைந்திருப்பதால் சுமார் பி.ப 3.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை இக் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்களும் மாணவிகளும் பெருமளவில் இப் பகுதியில் நடமாடும் நிலையில் போதைப் பிரியர்களின் அடாவடியினால் அம் மாணவர்கள், குறிப்பாக மாணவிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். மாணவர்களின் இவ் அவலம் போக்கக் கடந்த சில நாட்களாக வைரவப் புளியங்குளம் பகுதியிலும் அதனை அண்மித்த இடங்களிலும் பொலிஸ் ரோந்தும் கண்காணிப்பும் மிகவும் பலப்படுத்தப்பட்டும் இருந்தது. அப்பகுதியில் உள்ள குளக்கட்டுப்பகுதியால் சென்று கொண்டிருந்த ஒரு யுவதியைப் போதை தலைக்கேறிய நிலையில் கும்பலொன்று பின்தொடர்ந்து சென்று ஆபாச வார்த்தைகளினால் அர்ச்சனையும் செய்து சேடைகளையும் மேற்கொள்ளவும் முயன்றுள்ளது. ஆனால் அந்நபர்கள் நேரத்தில் அவ்வழியால் மோட்டார் சைக்கிளில் சிலர் வரவும் போதை மன்னர்கள் ஓடித்தப்பிக்கொண்ட போது யுவதியும் பிழைத்துக் கொண்டார்.

இவ்விடத்தில் அண்மையில் யாழ்ப்பாண நகரில் புதிதாக திருமணம் முடித்த ஆசிரியத் தம்பதியொன்றைக் கண்ணுற்ற போதையுடன் காணப்பட்ட சிலர் அவர்கள் தொடர்பில் விஷமத்தனமான அணுகுமுறைகளைக் கையாண்ட போது அத்தம்பதியும் போதையில் நின்றவர்களுடன் எதிர்த்து வாதாடியதனால் அவர்கள் அத்தம்பதியை மிக மோசமாகத் தாக்கியுள்ளார்கள். இத்தாக்குதலினால் பலத்த காயங்களுக்கு இலக்கான ஆசிரியர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுக் காப்பாற்றப்படாமல் உயிர் துறந்தும் உள்ளார் என்பதையும் குறிப்பிடுவதோடு இவ்வாறான ஓர் அவலம் வவுனியாவிலும் இடம்பெறாமல் தடுத்துநிறுத்தி வருமுன் காக்குமாறு பொலிசாரையும் பொதுமக்களையும் வேண்டி நிற்கிறோம்.

– வீரபத்தி விநோதன்

செ.கார்த்திகா
sukuna.k@gmail.com








# இளைஞர்களின் மோட்டார் சைக்கிள் மோகம்

சைக்கிள்களை மட்டுமே கண்ட வீதிகளை இன்று மோட்டார் சைக்கிள்கள் ஆக்கிரமித்து விட்டன. வீட்டிற்குப் பகத்தில் உள்ள கடைக்குப் போவதென்றாலும்மோட்டார்சைக்கிளில் தான் செல்கிறார்கள். அந்தளவிற்கு தற்போது மோட்டார் சைக்கிள்களின் பாவனை அதிகரித்துவிட்டது. அதுவும் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில்தான் மோட்டார் சைக்கிள்கள் அதிகம் வரவேற்பைப் பெற்றுள்ளது. காரணம், மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்களில் 75 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் இளைஞர்கள்தான். யாழ்ப்பாணத்தின் பிரதான வீதி ஒன்றில், வேண்டாம் ஒரு சிறிய உள் வீதி ஒன்றில் குறைந்தது அரை மணிநேரம் நின்று பாருங்களேன் நான் சொல்வது உண்மையா? பொய்யா? என்று உங்களுக்கே புரியும்.

ஏதோ ஒரு துறையில் கற்றுத்தேற வேண்டும் அல்லது தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதைவிட எப்படியாவது மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்க வேண்டும் என்பதே பெரும்பாலான இளைஞர்களின் கனவாக உள்ளது. அதுவும் வெறுமனே போக்குவரத்தை இலகுவாக்க வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல... என்ன இருக்கோ இல்லையோ மோட்டார் சைக்கிள் ஒன்று வைத்திருந்தால்தான் இந்த சமூகத்தில் கௌரவமானவன் என்கிற தோற்றத்துக்காகவும் ஸ்டைலுக்காகவும் வாங்குகிறார்கள். (முறைக்காதீங்கப்பா... நான் எல்லா இளைஞர்களும் அப்படித்தான் என்று நான் சொல்லவில்லை.)

மோட்டார் சைக்கிள் வீற்றருக்கு எத்தனை கிலோ மீற்றர் செல்லும் என்பதை தெரிந்து கொள்வதைவிட அது எந்த அளவுக்கு ஸ்டைலாக உள்ளது, எத்தனை சிசி என்பதில்தான் கூடுதலான இளைஞர்கள் கவனம் செலுத்துவதாக மோட்டார் சைக்கிள்கள் விற்பனை முகவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அதற்கு ஏற்றால்போல் மோட்டார் சைக்கிள் உற்பத்தி நிறுவனங்களும் காலத்திற்குக் காலம் பாவனையாளர்களை கவரக்கூடிய விதத்தில் புதிய தொழில்நுட்பங்களைக் கையாண்டு புதிய வகை மோட்டார் சைக்கிள்ககளை அறிமுகப்படுத்துகின்றன.



**இளைஞர்களை கவரும், அதிகம் விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்கள் சில**

- ✓ Bajaj Discover 150cc
- ✓ Hero Honda
- ✓ CBZ Extreme
- ✓ Bajaj Discover 125CC DTS-I
- ✓ TVS Wego 110CC
- ✓ TVS Apache RTR 160cc
- ✓ TVS Apache 150cc
- ✓ TVS Metro
- ✓ TVS Scooty Streak

**எப்படி வாங்குகின்றனர்?**

மோட்டார் சைக்கிள் இல்லாத வீடுகள் இல்லையென்றே சொல்லலாம். தொழில் ஒன்று இல்லை... வருமானம் இல்லை... பின்னர் எப்படி இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் வாங்குகின்றனர் என்று விசாரித்துப் பார்த்தால்,

- மற்றவர்களின் பிள்ளைகள் எப்படி ஆடம்பரமாக வாழ்கிறார்களோ அப்படி தங்களின் பிள்ளைகளும் வாழவேண்டும் என எண்ணும் சில பெற்றோர்கள் மோட்டார் சைக்கிளை பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுக்கின்றனர்.
- வெளிநாட்டில் உள்ள உறவுகள் அனுப்பும் பணத்தில் வாங்கப்படுகின்றது.
- தற்போது அதி விலைகூடிய எந்தவொரு வாகனத்தைம் தவணை முறையில் (லீசிங்கில்) பணத்தைச் செலுத்தி வாங்க முடியும். மோட்டார் சைக்கிள்கள் அதிகம் விற்பனையாகுவதற்கு இதுவும் ஒரு காரணம்.
- சிலர் கடன் வாங்கிக்கூட மோட்டார் சைக்கிளை வாங்குகின்றனர். பெரும்பாலான இளைஞர்கள் இன்று கடனாளிகளாக ஆவதற்கு மிக முக்கியமான காரணம் இந்த ஆடம்பரம்தான். இன்றைய நவீன வாழ்க்கை முறைக்கேற்ப கடன் வாங்கி ஆடம்பர செலவு செய்துவிட்டு, பின்னர் நெருக்கடி சூழ்நிலை வரும்போது, மேலும் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையே ஏற்படுகின்றது.

இவர்கள் மத்தியில் தமது சொந்த உழைப்பில் மோட்டார் சைக்கிள் வாங்கும் இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களில் பலர் தங்களது வருமானத்தில் பெற்றோர், சகோதரர்களுக்கும் வாகனங்கள் வாங்கிக் கொடுத்துள்ளார்கள்.

என்னடா மோட்டார் சைக்கிள் வாங்குவது தப்பா? நாங்க எப்படி வாங்கினால் உங்களுக்கு என்ன? என்று நீங்கள் கோபத்தோடு கேட்கலாம். மோட்டார் சைக்கிள் வாங்குவதோ அதில் பயணிப்பதோ தவறில்லை. போக்குவரத்தை இலகு வாக்கிக்கொள்ள ஏதோ ஒரு வாகனம் எல்லோருக்குமே அவசியம் தான். அதற்காக வாகனத்தை மட்டும் வாங்கி காப்பெற் வீதியில்தனல் பறக்க ஸ்டைலா 70, 80 கிலோ மீற்றர் மின்னல் வேகத்தில ஓட்டுவது, கடன் வாங்கி மோட்டார் சைக்கிள் வாங்குவது, கௌரவத்துக்காக வாங்குவதுதான் தவறு.

ஆடம்பரமாக வாழ்ந்தால் மட்டும் போதாது வருமானமீட்டக் கூடிய வேலைவாய்ப்பொன்றையும் பெற்று வருமானத்திற்கு ஏற்றவாறு ஒரு வாகனத்தை வாங்கி அதனால் அடுத்தவர்களுக்கு ஏதும் பாதிப்புக்களின்றி வாழ்வதுதான் இளைஞர்களாகிய எமக்கு உண்மையான கௌரவம். ஒரு நாட்டினுடைய வளர்ச்சி இளைஞர்கள் கையில் உண்டு, இளைஞர்கள் நினைத்தால் முடியாது என்று எதுவுமே இல்லை என எந்தவொரு நாட்டிலும் எவர் மத்தியிலும் இளைஞர்களுக்கென தனியான ஒரு இடம், மதிப்பு உண்டு. எனவே, அதற்கு ஏற்றாற்போல் நாம் நடந்துகொள்ள வேண்டாமா????







முப்பரிமாண கோலத்தை வரைந்து அசத்தியுள்ளார் யாழ்ப்பாண கலைஞன் ஒருவர். 35Kg அரிசியைப் பயன்படுத்தி 7m நீளமும் 3m அகலத்தையும் கொண்டதாக கோலம் வரையப்பட்டது. யாழ்ப்பாண தொழில்நுட்பக்கல்லூரியில் பார்வைக்கு விடப்பட்ட இதனை பெருமளவானவர்கள் பார்த்து ரசித்துள்ளனர். சுகாகன் என்ற கலைஞரே இதனை உருவாக்கி அசத்தியுள்ளார்.



# டூரிங் டாக்கீஸ்

## எமியின் காதல்!

எமி ஜக்சனின் தற்போதைய காதலும் ஊற்றிக் கொண்டு விட்டதாம். தன்னைவிட சினிமாவிற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார் என சினந்தபடி, லண்டன் காதலன் மூட்டைகட்டிவிட்டாராம். இதை டுவிற்றரில் சூசகமாக சொல்லியிருக்கிறார் எமி. ஒரு காதல் ஊற்றினால் என்ன, அடுத்த காதலை கைவசமே வைத்திருக்கிறாராம் எமி. இந்தி சினிமாக்காரராம். பிரபல நடிகரென்றெல்லாம் அவசரப்பட்டு முடிவெடுக்காதீர்கள். டெக்னீசியனாம். இந்தியில் எமி நடித்த 'சிங் இஸ் பிளிங்' சூட்டிங்கில் மலர்ந்த தெய்வீக காதலாம்.



## ஐயிற்றம் கேர்ள் ஆன அனுஷ்கா!

பொக்ஸ்ஒபிஸை தற்போது கலக்கிக் கொண்டுள்ள 'ருத்ரமாதேவி'யில் அல்லு அர்ஜூன் நடித்திருந்தார். அல்லு சிறிய வேடத்தில் நடித்தது பலரையும் புருவம் உயரவைத்தது. சிறியவேடமென்றாலும், அழுத்தமான வேடம். இதற்கு அல்லு அர்ஜூன் சம்மதித்தற்கு முக்கிய காரணம் அனுஷ்காதானாம். இருவரும் நெருங்கிய நண்பர்கள் என்பதால், நடிக்க சம்மதித்தாராம் அல்லு. இப்பொழுது கைமாறு செய்யும் நேரம். அல்லு அர்ஜூன் நடிக்கும் படமொன்றில் குத்தாட்டம் போட அனுஷ்கா சம்மதித்துள்ளார். பாகுபலி, ருத்ரமாதேவியென வரிசையாக திரையுலகத்தை கலக்கிய அனுஷ்கா ஐயிற்றம் கேர்ள் ஆகிறார் என்றதும், தெலுங்கு ரசிகர்கள் இப்பொழுதே மூச்சைப்பிடித்துக் கொண்டு தியேட்டர்வாசலில் நிற்கிறார்களாம்.



## பேயுடன் பரிச்சயமான ராய் லட்சுமி!

ரீகாந்துடன் ராய் லட்சுமி நடித்துள்ள படம் 'சவுக்கார்பேட்டை'. இது பேய்ப்பட சீசன் என்பதால், அதுவும் அப்படித்தான் உருவாகியுள்ளது. ஏற்கனவே சில பேய்ப்படங்களில் நடித்து, பேய் அனுபவம் வைத்துள்ள ராய் லட்சுமி படப்பிடிப்பில் அனைவருக்கும் உதவியாக இருந்திருக்கிறார். ரீகாந்திற்கு மேக்அப் கூட போட்டு விட்டுள்ளாராம். எரிந்து கொண்டிருந்த பிணத்திற்கு அருகில் சூட்டிங் நடந்தபோது, பலரும் நடுநடுங்கிப் போனார்களாம். அவர்களையெல்லாம் ராய் லட்சுமிதான் தட்டிக்கொடுத்து படப்பிடிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்ய வைத்தாராம்.




## ஸ்ரீதிவ்யாவுக்கும், கீர்த்தி சுரேசுக்கும் கவர்ச்சி போட்டி

தமிழ்பட உலகின் இளம் கதாநாயகிகளான ஸ்ரீதிவ்யாவுக்கும், கீர்த்தி சுரேசுக்கும் இடையே கடும் தொழில் போட்டி உருவாகி இருக்கிறது. ஸ்ரீதிவ்யாவுக்கு செல்ல இருந்த இரண்டு புதிய பட வாய்ப்புகளை கீர்த்தி சுரேஷ் தட்டிப்பறித்து விட்டாராம். "ஸ்ரீதிவ்யாவை விட அதிக கவர்ச்சி காட்டி நடிக்க நான் தயார்" என்று கூறி, அந்த பட வாய்ப்புகளை கீர்த்தி சுரேஷ் பிடித்ததாக கூறப்படுகிறது. இதைக் கேள்விப்பட்டதும், "கீர்த்தி சுரேசை விட அதிக கவர்ச்சியாக நடிக்க நான் தயார்" என்று ஸ்ரீதிவ்யா அறிவித்து இருக்கிறாராம். "சபாஷ், சரியான போட்டி!" என்று ரசிக்க தயாராகி விட்டார்கள், ரசிகர்கள்!



## ஆன்ரியாவின் அலப்பறை!

ஆன்ரியாவின் விபரீத ஆசையை பாருங்கள். ஏ.ஆர்.ரஹ்மான் ஒரு படத்தில் டான் ஆக நடிக்க வேண்டுமாம். அவருடன் தான் ஜோடி போட வேண்டுமாம். இந்த விபரீத ஆசையை தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கூறியிருக்கிறார். இதைவிட வேறும்பல 'ஷொக்' வைத்துள்ளார். யாருக்காவது முத்தம் கொடுக்க வேண்டுமென்றால் அதை ரன்பீர் கபூருக்கு கொடுக்க ஆசையென கூறி, கத்ரினாவின் வயிற்றில் புளியை கரைத்துள்ளார். ரன்பீருடன இணைந்து தன்னைப்பற்றி கிசுகிசு வரவேண்டுமென்றும் விருப்பமாம். என்ன பிழைப்போ!



## நயன்தாராவுடன் சேர்ந்தது மகிழ்ச்சி

தனுஷ் தயாரித்துள்ள 'நானும் ரவுடிதான்' படத்தில் விஜய்சேதுபதி கதாநாயகனாக நடித்து இருக்கிறார். இவருக்கு நயன்தாரா ஜோடி சேர்ந்துள்ளார். விக்னேஷ் சிவன் இயக்கியுள்ள இந்த படத்தின் அறிமுக நிகழ்ச்சி நடந்தது. இயக்குனர் விக்னேஷ் சிவன் பலமுறை இந்த கதையை என்னிடம் கூறினார். அதில் மாற்றங்கள் செய்து என்னை கதாநாயகனாக நடிக்க வைத்து விட்டார். இந்த படத்தை தயாரித்துள்ள தனுஷ் சார் எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி. அனிருத்தின் இசை சிறப்பாக உள்ளது. நயன்தாராவுடன் இந்த படத்தில் ஜோடியாக நடித்து இருப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. நான் முன்பு புதுப்பேட்டையில் இருந்தபோது தனுஷ்சார், செல்வாசார் ஆகியோருடன் கிரிக்கெட் ஆடி இருக்கிறேன் என்றார்.



## முன்னாள் காதலன் 'புறோ' ஆனார்!

தீபிகா படுகோனின் முன்னைய காதல் ஊரறிந்த பிரபல்யம். ரன்வீர் கபூரும் அவரும் திருமணம் செய்வார்கள் என நினைத்திருந்த சமயத்தில் பிரிந்துவிட்டார்கள். பின்னர் ரன்வீர் கபூருடன் கத்ரீனா ஜோடியானார். தீபிகாவின் காதலனானார் ரன்வீர் சிங். தற்போது 'தமாஸா' என்ற படத்தில் தீபிகாவும் ரன்வீர் கபூரும் நடிக்கிறார்கள். படத்தின் புரமோஷன் ஒன்று மும்பையில் நடந்தது. இருவரும் கலந்து கொண்டனர், செய்தியாளர் ஒருவர் கேட்டகேள்விக்கு ரன்வீர் பதிலளித்தார். ரன்வீரின் பதிலால் மெய்மறந்த தீபிகா, 'சூப்பர் புறோ' என கைதட்டினாராம்.முன்னாள் காதலன் புறோ (சகோதரன்) ஆகிவிட்டாரா என சிலர் தலையிலடித்துக் கொண்டனர்!

# நீங்கள் தொழில் தேடுபவரா??? எடுங்கள் NVQ சான்றிதழ்



வடக்கில் பொருளாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள் என்பன நாளுக்கு நாள் புதிய புதிய மாற்றங்களுடன் வேகமாக அபிவிருத்தி அடைந்துகொண்டே சென்றாலும் இங்குள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது பாரிய சாவாலாகவே உள்ளது.

பெரும்பாலான இளைஞர், யுவதியரிடம் என்ன செய்கிறீர்கள் எனக் கேட்டால் உடனே அவர்கள் சொல்லும் பதில் "நான் சும்மா இருக்கிறன். வேலை ஒன்றும் கிடைக்கவில்லை." என்பதுதான். இவ்வாறு சொல்லவேண்டிய அவசியமே இல்லை. உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த ஒரு தொழிலில், அல்லது, பிடித்தமான, கைவரப்பெறும் தொழில் ஒன்றில் பயிற்சியைப் பெற்று, தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமைச் (NVQ) சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். அதன் பின்னர் வேலைவாய்ப்பு என்பது உங்களுக்கு ஒரு பிரச்சினையாகவே இருக்காது.

மின்னிணைப்பாளர், தகவல் தொழில்நுட்பத்துறை, கட்டட நிர்மானிப்பாளர் என எந்தவொரு தொழில் துறையிலும் தேர்ச்சி பெற்றவர் என்பதை நிரூபிக்கும் வகையிலான தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமைச் (NVQ) சான்றிதழ் இருப்பவர்களுக்கே இப்போது வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. அண்மைக் காலமாக அரச மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்புக்கான நேர் முகத் தேர்வின்போது NVQ சான்றிதழ் முக்கியமாக எதிர் பார்க்கப்படுகின்றது.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் பாரம்பரியமாக ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகள் தேசிய ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பாடவிதானஙகளைக் கற்பித்து பரீட்சைகள் நடாத்தி க.பொ.த சாதாரணதர, உயர்தரச் சான்றிதழ்களை வழங்குகின்றன. உயர்தரப் பரீட்சையின் பின்னர் பல்கலைக் கழக அனுமதி பெற்றவர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ்வரும் வளாகங்கள் கலை. வர்த்தகம் மற்றும் விஞ்ஞானத் துறைளில் பட்டங்களை வழங்குகின்றன.

ஆனால், இந்தப் பாரம்பரிய கல்வி முறைமையில் இணையும் மாணவர்களில் 12 சதவீதமானவர்களுக்கே பல்கலைக்கழகம் வரையில் சென்று பட்டம் பெறும் வாய்ப்புக் கிடைக்கிறது. இந்த வழிமுறையில் எதிர்காலத்துக்கான தொழில்வாய்ப்புக்களைப் பெற முடியாத சுமார் 98 சதவீதத்துக்கும் அதிகமானவர்களுக்கு வாழ்க்கைத் தொழில் பாதையை வளமாக அமைக்கும் நோக்குடன், மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவால் தேசிய, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமை முறைமை (National Vocational Qualification (NVQ) System) அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

### தேசிய வாழ்க்கைதொழில் தகைமை முறைமை குறிப்பிடும் மட்டங்கள்.

ஒவ்வொரு வாழ்க்கைத் தொழிலுக்கும் பொருத்தமான பணியின் அளவு, அப்பணியை நிறைவேற்றும்பொழுது ஏற்புடைய அறிவு, மற்றும் அப்பணியை நிறைவேற்றும் ஆளில் நிலவும் அளவு மற்றும் பண்புசார் பொறுப்புக்களும் பிரிவுகளும் உள்ளடங்கியதாக இந்தத் தகைமைச் சான்றிதழ் முழுமை ஏழு மட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது.

1ஆம் மட்டம் - அடிப்படை, ஆரம்ப ஆற்றல்கள் உள்ள கைப்பணியாளர்கள்

2ஆம் மட்டம் - அடிக்கடி மேற்பார்வையின் கீழ் செயலாற்றும் கைப்பணியாளர்கள்

3ஆம் மட்டம் - சிறிய மட்டத்திலான மேற்பார்வையின் கீழ் செயலாற்றக்கூடிய கைப்பணியாளர்கள்

4ஆம் மட்டம் - சுயாதீனமாகச் செயலாற்றக்கூடிய கைப்பணியாளர்கள்

5ஆம் மட்டம் - மேற்பார்வையாளர்கள்

6ஆம் மட்டம் - முகாமையாளர்

7ஆம் மட்டம் - திட்டமிடுபவர்.

### தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமைச் சான்றிதழை இரண்டு வழிமுறைகளில் பெறமுடியும்

1. ஏற்கனவே ஒருவர் கொண்டிருக்கக்கூடிய தொழிற்திறன், பணி நிறைவேற்றும் ஆற்றல் என்பவற்றை நிருபிக்க முடியுமாயின் அதன்மூலம் பெற்றுக் கொள்ளலாம். பாரம்பரியமாகவோ அன்றி வேறு வழிகளிலோ சில தொழில்களைச் செய்வதற்கான முன்னனுபவம் கொண்டவர்கள் உத்தியோகபூர்வ தொழில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த வழிமுறை உதவுகிறது. இம்முறைமையை "முன்னறிவு இனங்காணல் முறைமை" என்பர். (RPL- Recognition of Prior Learning)
2. மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் பாட அங்கீகாரம் பெற்ற அரச, தனியார் நிறுவனங்கில் (Accreditation) தகைமை அடிப்படையிலான பயிற்சிபெற்று (CBT – Competency Based Training) பயிற்சியினை முறையாகப் பூர்த்தி செய்து NVQ சான்றிதழைப் பெற முடியும்.

### NVQ சான்றிதழின் அனுகூலங்கள்

- உடனடி வேலைவாய்ப்பு, அதிக வருமானம் ஈட்டும் வாய்ப்பு
- அங்கீகரிக்கப்படாத திறன்களுக்கு ஒரு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் (உத்தியோகபூர்வமான சான்றிதழ்)
- வேலைத்தளங்களில் பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
- பயனுள்ள வெளிநாட்டு வேலைகளைப் பெறுவதில் கூடிய வாய்ப்புக்கள்
- RPL மதிப்பீடானது பெரும்பாலும் துணைச்சான்றுகளில் (துறைசார்ந்த) உதவியுடனேயே நடாத்தப்படுகின்றது. எனினும் மதிப்பீட்டிற்கு உட்படுபவர் தகைமைகளையும் திறன்களையும், திறமைகளையும் கொண்டிருக்கவேண்டும்.

மூன்றாம்நிலைக் கல்வி ஆணைக்குழுவால் நற்சான்றிதளிக்கப்பட்ட தனியார் துறைகளில் பின்வரும் பாடநெறிகள் நடாத்தப்பட்டு NVQ சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

- ✓ விவசாயம், பயிர்ச்செய்கை மற்றும் வளர்ப்பு பிராணிகள்
- ✓ மின், மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு
- ✓ உணவு தொழில்நுட்பம்
- ✓ ஹோட்டல் மற்றும் சுற்றுலா
- ✓ கனரக இயக்கம்
- ✓ அலுவலக நிர்வாகம்
- ✓ இயந்திர மின்னணுவியல்




- ✓ அச்சு மற்றும் குளிரூட்டல் சார்ந்தவை
- ✓ கலை, வடிவமைத்தல் மற்றும் ஊடகவியல்
- ✓ மரம், தச்சுக்கலை சார்ந்தவை
- ✓ ஆடைத்துறை சார்ந்தவை
- ✓ சுயவளர்ச்சி, சமூக அபிவிருத்தி
- ✓ மனிதவள மேம்பாடு
- ✓ நிதி, வங்கியிடல் மற்றும் நிர்வாகம்
- ✓ கட்டடம் மற்றும் கட்டுமானம்
- ✓ உலோகம் மற்றும கப்பல்துறை சார்ந்தவை
- ✓ இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள்

க.பொ.த சாதாரணதரத்துடனேயே இந்தப் பயிற்சிநெறிகளில் இணைந்துகொள்ள முடியும்.

### தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கும் நிறுவனங்கள்

- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை (VTA)
- தொழில்நுட்பவியல் கல்லூரி
- தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA)
- தேசிய இளைஞர் சேவை மன்றம் (NYSC)



# குப்பி விளக்கில் பெறப்பட்ட 183 புள்ளிகள்

## முன்னுதாரணமான நிகேதன்


வ.நரேஜி

அண்மையில் வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் பலருக்கு மகிழ்ச்சியைக்கொடுத்திருக்கின்றது.சிலருக்கு எதிர்பார்த்த பெறுபேறு வரவில்லையே என கவலையை கொடுத்துள்ளது. இன்னும் சிலருக்கு கடும் வறுமை, மற்றும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் சாதித்துள்ளார்கள் என்ற பாராட்டைப் பெற்றுக் கொடுத்துள்ளது. அந்த வகையில் அனைவரதும் கவனத்தையும் திரும்பிப் பார்க்கச் செய்த ஒரு மாணவனே சிறிதரன் நிகேதன்.

இவன் 183 புள்ளிகளைப் பெற்று வவுனியாமாவட்டத்தில்5ஆம்இடத்தைப் பெற்றுக் கொண்ட மாணவன். இவனது இந்த நிலைக்கு பின்னால் பல துன்பமானதும் சுவாரசியமானதும் ஆன கதை இருக்கின்றது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் புதுக்குளம் கனிஸ்ட வித்தியாலயத்தில் கல்வி கற்று வருபவனே மாணவன் சிறிதரன் நிகேதன். பாடசாலையில் இருந்து சுமார் 5 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய ஒரு










கிராமமே கற்குளம். இது சாஸ்திரி கூழாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளது. இக்கிராமத்திற்கான போக்குவரத்து பாழடைந்த குச்சு ஒழுங்கைகள் ஊடான நடைபயணமும்,சைக்கிள் பயணமும்மட்டுமே.இக்கிராமத்தில் இருந்து 2 கிலோமீற்றர் வந்தால் மட்டுமே புதுக்குளம் பிரதான வீதியில் பஸ்ஸை காணமுடியும். அதிலிருந்து 3 கிலோமீற்றர் பஸ்சில் பயணித்தே புதுக்குளம் கனிஸ்ட வித்தியாலயத்திற்கு செல்ல முடியும்.

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களை பெற்றோர்கள் தினமும் வாகனங்களில் ஏற்றிக்கொண்டுபாடசாலை மற்றும் ரியூசன் என மாறி மாறி ஏற்றி இறக்குவதை நாம் தினமும் நகரங்களில் காண்கின்றோம். ஆனால் நிகேதனுக்கு அந்த கொடுப்பனை இன்று வரை கைகூடவில்லை. ஏன் எனில்..

பின்தங்கிய கிராமத்தில் வாழும் நிகேதனின் குடும்பம் கூட ஒரு சாதாரண விவசாய குடும்பமே. தந்தையும், தாயும் இணைந்து தமது விவசாயத்தைச் செய்து தமது நான்கு பிள்ளைகளையும் படிக்க வைக்கிறார்கள். அவர்களது கடின உழைப்புக்கு கிடைத்த பரிசு தான் நிகேதனின் பெறுபேறு.

பெற்றோர் காலையிலேயே விவசாய வேலையை கவனிக்க 2 கிலோமீற்றர் நடந்து சென்று பின்னர் பஸ்சில் 3 கிலோமீற்றர் பயணித்து கல்வி கற்ற நிகேதன் பாடசாலை விட்டு வீடு வந்து சேர மாலை 4 மணி ஆகும். நடந்த வந்த களைப்பால் சில மணிநேரம் உறங்கிவிட்டு இருள் சூழத் தொடங்கியதும், வீட்டில் பெற்றோரிடம் பறித்து ஒளித்து வைத்திருந்த மண்ணெண்ணெயை எடுத்து குப்பி விளக்கில் விட்டு விட்டு படிக்கத் தொடங்குவான் நிகேதன். விளக்கு வெளிசத்துக்கு வரும் ஈசல்கள், பூச்சிகள் என்பவற்றுடன் போராடிய படியே கற்கும் நிகேதன் இரவு 10 மணி ஆனதும் உறக்கத்திற்கு சென்று விடுவான்.

மீண்டும் காலையில் 5 மணிக்கு எழுந்து ஒரு மணிநேர படிப்பு. பின்னர் பாடசாலை என தன்னம்பிக்கையாலும் பாடசாலை படிப்பையும் மட்டுமே நம்பி சாதித்தவன் இவன்.

ரியூசன் என்ற பெயரைக் கேள்விப்பட்ட நிகேதனுக்கு இன்று வரை அதைத் தொரியாது. வவுனியா மாவட்டத்தில் 188 புள்ளிகளைப் பெற்று முதல்நிலையில் நகரப் பகுதி மாணவி ஒருவர் சாதித்துள்ளார். ஆனால் அதைவிட வெறும் 5 புள்ளிகளே குறைவாக பெற்று எந்தவித வசதியும் இன்றி குப்பி விளக்கில் ரியூசன் இன்றி தனது தனி முயற்சியால் சாதித்துள்ளான் நிகேதன். இது அவனது தனித் திறமை.

மகிழ்சி வெள்ளத்தில் இருக்கும் இவனது சகோதரர்களுக்கும், பெற்றோருக்கும் மத்தியில் ஓடித் திரிந்த நிகேதன் வைத்தியராவதே எனது இலக்கு என்கிறான். அதற்கான பயணத்தை அவன் ஆரம்பித்து விட்டான். இந்த சாதனையின் பின் திரும்பிப் பார்த்துள்ள எமது சமூகம் இவனது இலட்சியத்தை அடைய என்ன செய்யப் போகின்றது. நிகேதன் தனது இலக்குக்காக பயணிக்க தயாராகி விட்டான் அதனை சிறப்பாக செய்ய.

மின்சாரம் எப்போது கிடைக்கும் இவனது வீட்டிற்கு... போக்குவரத்து வசதி கூட கிடைக்குமா... என்ற ஏக்கத்துடன் இருக்கிறார்கள் அவனது பெற்றோர்.











வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் அண்மையில் ஆசிரியர் தின நிகழ்வுகள் நடந்தன. சிறப்பாக நடந்த நிகழ்வின் சில படங்கள்.



# செஞ்சோலை என்னும் அழகிய கூடு

பி.சியா
siyapj27@gmail.com

'யுத்தம் சப்பித்துப்பிய குடும்பங்கள் ஏராளம். யுத்தத்தின் கோரப்பசிக்கு குடும்பங்களை இழந்து, அநாதாரவாக நடுவீதிக்கு வந்த குழந்தைகளின் எதிர்காலத்தை வளமானதாக மாற்றிக் கொடுப்பதை என் வாழ்வின் இலட்சியமாக கொண்டுள்ளேன். யுத்தத்திற்கு பங்களித்த நாம், பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வை கட்டி யெழுப்புவது தானே முறை' என கண்கள் பனிக்கப் பேசியிருந்தார் குமரன் பத்மநாதன். முன்னர் சில நேர் காணல்களில் அவர் பேசிக் கேட்ட போதே செஞ்சோலைக்கு செல்ல வேண்டுமென நினைத்திருந்தேன்.

யுத்தத்தில் பங்காளியாக இருந்த ஒருவர், தனது மனத்திருப்திக்காக... ஆத்மார்த்தமாக ஆரம்பித்ததுதான் செஞ்சோலையின் மீள்உருவாக்க பின்னணி.

யுத்தம் என்றாலே மரணங்களும், அங்கவீனமும், அகதிகளும், இழப்புக்களும்தான். இதில் எது நடந்தாலும் அது கொடுமைதான். என்றாலும், வாழ்வின் சூட்சுமங்களை பிரித்தறிய தெரியாத பிஞ்சு வயதில் பெற்றோரை பறிகொடுப்பதென்பது எவ்வளவு பெரிய துயரம். அதிலும் பெண்குழந்தையென்றால்...? நினைக்கவே நெஞ்சு பதறுகிறதல்லவா.

யுத்தம் நடந்த நாடுகளிலெல்லாம் இப்படியான குழந்தைகள் குறைந்த வருமானத்தில் குழந்தை தொழிலாளர்களாகவும், அடிமைகளாகவும், பாலியல் தொழிலாளிகளாகவுமே மாற்றப்படும் சமூக அவலம் நிகழ்கிறது. ஒரு குழந்தை பெற்றோரை இழக்கும்போது, அது தனது எதிர்காலத்தை, பாதுகாப்பை, சமூக தொடர்புகளை இழக்கிறது. குழந்தைகளை பொறுத்தளவில் மிகக்கொடுமையான தண்டனை பெற்றோரை இழப்பது.

> **அவர்கள் சொல்லும் கதையை கேட்டு முழுதாக நாம் நிலைதடுமாறி உட்கார்ந்துவிடுகிறோம். என்ன செய்வதென தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்க, கதை சொன்ன அதே பிள்ளைதான் நம்மை தேற்றுகிறது.**

முப்பது வருடங்களாக கொடிய யுத்தம் நடந்த வடக்கு, கிழக்கில் இந்தவகையான சமூக அவலம் பெருமளவிற்கு தவிர்க்கப்பட்டுள்ளது என்பதே நம்மையெல்லாம் நிம்மதிப்பெருமூச்சு விடச் செய்கிறது. அரச, தனியார் பொறி முறைகள் அதனை தவிர்த்து விட்டது.

இந்த பொறிமுறையின் அடையாளம்தான் செஞ்சோலை. யுத்தத்தால் பெற்றோரை இழந்த பெண் பிள்ளைகள் என்றதும், நமக்கெல்லாம் உடன் நினைவிற்கு வருவது செஞ்சோலைதான். என்றாலும், நம்மில் எத்தனைபேர் அந்த குழந்தைகளின் வாழ்க்கை, எப்படி அவர்கள் வழிநடத்தப்படுகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் சிந்தித்திருக்கிறோம்? அல்லது அறிந்திருக்கிறோம்?

வாருங்கள்... உங்களையும் செஞ்சோலைக்கு அழைத்து செல்கிறோம்.

**ஆரம்பம்**

செஞ்சோலையின் ஆரம்பத்தை தேடிச் சென்றொமென்றால் நாம் 1991 இற்கு செல்ல வேண்டும். பெற்றோரை ,ழந்த கைக்குழந்தைகள் முதல் பதினெட்டு வயது வரையான பெண்பிள்ளைகள் தத்தெடுக்கப்பட்டு வளர்த்தெடுக்கப் பட்டார்கள்.

அவர்களிற்கு கல்வி, தொழில் நுட்ப அறிவுகள் புகட்டப்பட்டு, நவீன உலகத்தின் சவால்களிற்கு ஈடுகொடுக்க வல்லவர்களாக மாற்றுவதே செஞ்சோலையின் இலக்கு

யுத்தத்தின் பின்னர் 2013 தை மாதத்தில் மீண்டும் இயங்கத் தொடங்கியது செஞ்சோலை சிறுவர் இல்லம். அப்பொழுது சர்ச்சைக்குரிய மனிதராக மாறியிருந்த மனிதரான குமரன் பத்மநாதன் தான் இந்த இல்லத்தின் மீள்உருவாக்கத்தின் முக்கியமானவராக இருந்தார். இதனாலேயே நம்மவர்கள் பலர் செஞ்சோலையென்ற பெயரை உச்சரிக்க தயங்கிய காலமொன்றுமிருந்தது.

யுத்தத்தில் பெற்றோர்களை இழந்த பெண்பிள்ளைகள் பல்வேறு இல்லங்களில் தங்கியிருந்தார்கள். இவர்களில் 5 வயது தொடக்கம் 18 வயது வரையான பெண்பிள்ளைகள் சட்டரீதியாக தத்தெடுக்கப்பட்டு செஞ்சோலைக்கு உள்வாங்கப் பட்டனர்.

செஞ்சோலை கிளிநொச்சியின் இரணைமடு பகுதிக்கு அண்மையாக அமைந்துள்ளது. இதுதவிர, முல்லைத்தீவிலும் ஒரு இல்லம் இயங்கி வருகிறது. கிளிநொச்சியில் 110 பெண் பிள்ளைகளும், முல்லைத்தீவில் 95 பெண் பிள்ளைகளும் தங்கியிருந்து கல்விகற்கிறார்கள். ஆரம்பத்தில் பெற்றோரை இழந்த சிறுமிகள் மாத்திரமே உள்வாங்கப்பட்டபோதும், நாளடைவில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட, சுமுகமற்ற குடும்பச்சூழலுள்ள குழந்தைகளும் உள்வாங்கப் பட்டனர். அம்மா இரண்டாவது திருமணம், அப்பா இரண்டாவது திருமணம், தந்தை உழைப்பில்லாமல் இருத்தல் போன்ற காரணங்களினால் வறுமையை எதிர்கொள்ளும் பெண்குழந்தைகளும் இல்லத்தில் இணைக்கப் பட்டுள்ளனர்.

பொருளாதாரத்தில் அதிக நெருக்கடி காரணமாக படிக்க இயலாமையினாலும் கூட பிள்ளைகள் இங்கே வசித்து வருகின்றனர்.

செஞ்சோலையின் சுற்றயல் கிராமங்களில் உள்ளவர்களும் செஞ்சோலை குழந்தைகளை தத்தெடுத்திருக்கிறார்கள் என்றும் கூறலாம். அயல்கிராமங்களில் உள்ளவர்களில் பலர், பண்டிகைநாட்கள், தமது பிறந்ததினம் போன்ற விசேடநாட்களில் தம்மால் முடிந்ததை செஞ்சோலை குழந்தைகளிற்காக செய்கிறார்கள். தமது பிள்ளைகளிற்கு புத்தாடை எடுக்கும்போது செஞ்சோலை பிள்ளைகளிற்கும் புத்தாடை எடுப்பவர்கள் உள்ளதாக நெகிழ்ச்சியுடன் கூறுகிறார்கள் நிர்வாகத்தினர்.

இதேபோல, விசேடதினங்களில் உணவு ஏற்பாடுகள் செய்பவர்களும் உள்ளனர். குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் அனேகர் அப்படி செய்கிறார்கள்.

இவர்கள் படிப்பதற்கு எந்தவிதமான குறைகளும் இன்றி வாழ்வை சந்தோசமாகவாழ்கின்றனர் என்பது அவர்களை பார்க்கையில் அவர்களின் புன்னகையில் புரிகின்றது.

**கல்விச் சீதனம்**

கல்விதான் தங்களிற்கு தரப்படும் உத்தரவாதமான ஒரே மூலதனம் என்பதை அந்தக்குழந்தைகளும் உணர்ந்துள்ளதாக தெரிகிறது. அங்குள்ளவர்களை நன்றாக கல்வி கற்பிக்க வேண்டுமென்பதில் நிர்வாகம் அதிக சிரத்தையெடுப்பது புரிகிறது.

புனிததிரேசா பெண்கள் கல்லூரி, இரணைமடு மகாவித்தியாலயம், கனிஸ்ரா மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிற்கு செஞ்சோலை








மாணவிகள் செல்கிறார்கள். பாடசாலைக்கு மட்டும் தான் இவர்கள் வெளியே செல்கின்றனர். இவர்களுக்கான ரீயூசன் முழுதும் இங்கு தான் நடக்கின்றது. அனைத்து பாடங்களுக்குமான வகுப்புக்களும் இடம் பெறுகின்றது. அதற்கான கட்டட ஒழுங்குகளும் செஞ்சோலை வளாகத்திலேயே உள்ளன.

இப்பொழுது ஒரு நூலகமும் கட்டப்பட்டு வருகின்றது. இதனை விட உடற்பயிற்சி, நடனம், நாடகம் என்று கல்வி கலை ஆரோக்கியம் தொடர்பான அனைத்த செயற்பாடுகளையும், வளாகமண்டபத்திலே பெற்றுக் கொடுக்கப்படுகின்றமையினை அவதானிக்க முடிந்தது. இவர்கள் சிறந்தகல்விமான்களாகமட்டுமின்றி சிறந்த ஒழுக்கமுடையவர்களாகவும் திகழ வேண்டும் என்பதே

எமக்கு வீட்டை விட இங்கு வாழத்தான் பிடித்திருக்கின்றது. வீட்டில் அப்பாவிற்கு வருத்தம் என்று உழைப்பிற்கு போவதில்லை அதிக வறுமை படிக்க இயலாத கட்டத்தில் கிராமசேவகர் ஊடக அனுமதி பெற்று இங்கு வசிக்கின்றோம். வீட்டிலிருந்து பிரிந்திருக்கும் எந்த வருத்தமும் கிடையாது. வீடுகளில் இருப்பதைப் போலவே உணர்கிறோம். நமக்கெல்லாம் கற்பதற்கான வாய்ப்பு கிடைக்குமென ஒருகாலத்தில் கனவில்கூட நினைத்துப் பார்த்ததில்லை. ஆனால் செஞ்சோலையின் வடிவில் அது கிடைத்தது நாம் செய்த பெரிய பாக்கியம்தான்.



அம்மா, அப்பா என எங்களை பொறுப்பாக வளர்க்க கூடியவர்களை நாங்கள் இழந்துவிட்டோம். உறவுகள் எத்தனைநாள்த்தான் எமக்கு சோறுபோடும்... அப்படி நடந்தாலும், அந்நியமான உணர்வுதானே எங்களிற்குள் இருந்து கொண்டிருக்கும். எல்லாம் இழந்துவிட்டோம் என நினைத்த சமயத்தில்த்தான் செஞ் சோலைக்கு வந்தோம். வரும்போது, எப்படியிருப்பமோ என்ற பயம் இருந்தது. ஆனால் வந்ததுமே நாங்கள் புதிய உலகத்திற்கு வந்தவிட்டோம் என்பது தெரிந்தது. நமக்காவும் ஒரு வாழ்க்கை காத்திருக்கிறது என்பதை கண்டோம். நமக்காக ஏராளம் உறவுகள் இருப்பதை புரிந்தோம். நமக்கு யாரும் இல்லையே என்ற எந்த கவலையும் இப்பொழுது இல்லை. ஏனென்றால், நமக்குத்தான் இப்பொழுது நிறையப் பேர் இருக்கிறார்களே!







செஞ்சோலையின் நோக்கமாக திகழ்கின்றது.

**நிகழ்வுகள்**

பாடசாலை, வீடுகளில் இடம் பெறுகின்ற அனைத்து நிகழ்வு களும் இவ்வளாகத்தில் இடம் பெறு கின்றது. இவர்களோடு ஆசிரியர் களும் பொறுப்பாளர்களும் இணைந்து சந்தோசமாக கொண்டாடுகின்றனர். இவர் களுக்கு தேவையான ஆடைகளை அந்ததந்த நிகழ்வுகளுக்கு அவர் களுக்கு பிடித்தால் போல் பெற்றுக் கொடுக்கப்படுவதாகவும் கூறியிருந்தனர். இங்கே ஒரு நிகழ்வு என்று வந்து விட்டால் ஆடல்கள் பாடல்கள் என கலை நிகழ்வுகள் களை கட்டத் தொடங்கி விடுமாம்.

இங்குள்ள பிள்ளைகளுடன் பேசியபோது, யாருக்குமே மனக் குறைகள் இருந்ததாகதெரியவில்லை. சாதாரணமாக வீடென்றால் நான்கு, ஐந்து உறவுகள்தான். இங்கே செஞ் சோலையே ஒரு வீடாக அவர்கள் உணர்கிறார்கள். நுள்ளுப்பிராண்டி கிள்ளுப்பிராண்டி, அவளோட டூ என வீட்டில் சகோதரிகளிற் கிடையிலான சகல வகையறாக் களும் இங்கு உண்டு.


இங்குள்ள ஒவ்வொரு பிள்ளை யின் பின்னாலும் ஒவ்வொரு சோகக் கதையுள்ளது. அவற்றை கேட்டால் நிச்சயம் நமது நிம்மதியை சிலநாட்கள் இழக்க வேண்டிவரும். சின்னஞ்சிறிய வயதில் அத்தனை பெரிய சோகத்தை தாங்கிக் கொண்டு எப்படி அவர்கள் புன்னகைக்கிறார்கள் என்று ஆரம்பத்தில் பெரிய குழப்பமாக இருந்தது. ஆனால் அங்கு சென்றதன் பின்னர்தான் புரிந்தது அவர்களிடமுள்ள வைராக்கியமும், வாழ்வில் வெற்றிபெற்றுவிட வேண்டுமென்ற துடிப்பும்.

ஒவ்வொரு பிள்ளையுடன் பேசும் போதும், மனம் கனக்கும் கதை யொன்றை சொல்கிறார்கள். என்ன தான உற்சாகமாக இருந்தாலும், கடந்தகாலத்தை பற்றி பேசும்போது அவர்கள் தடுமாறுகிறார்கள். குழந்தைப்பருவத்து வசந்தத்தை வாழ்க்கை அவர்களிடமிருந்து பறித் தெடுத்து துயரம் இன்னும் அடி மனதில் அவர்களிடம் படிந்துள்ளது. எனினும், இன்னொருவர் அவரை ஆறுதலாக்குகிறார். தோளிலோ.. தலையிலோ ஆதரவாக பதியும் இன்னொருபிஞ்சுக்கரம் அவர்களை நம்பிக்கையூட்டிவிடுகிறது.

அவர்கள் சொல்லும் கதையை கேட்டு முழுதாக நாம் நிலைதடுமாறி உட்கார்ந்துவிடுகிறோம். என்ன செய்வதென தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்க, கதை சொன்ன அதே பிள்ளைதான் நம்மை தேற்றுகிறது.

இங்குள்ள குழந்தைகளில் 23 பேர் 5 வயதிற்கு உட்பட்ட வர்கள். அவர்களிற்கு முறையான பராமரிப்பு வசதிகள் செய்யப்பட் டுள்ளன. அவர்கள் மிக குறும்பா கவும், சுட்டித்தனமாகவும் வளர்கி றார்கள். வெறும்கைகளை பொத்தி, இதற்குள் என்ன இருக்கிறதென நம்மிடமே கேட்டு கலாய்கிறார்கள் குழந்தைகள்.

நாங்கள் எல்லோருமே யுத்தத்திற் குள் வாழ்ந்தவர்கள்தான். என்றா லும், யுத்தத்தின் உண்மையான வலியை புரிந்தவர்கள் இந்த குழந்தைகள்தான். அதன் விளைவு களையும் அவர்கள்தான் பெருமள வில் சுமக்கிறார்கள். அவர்களிற்கு ஆறுதலாக இருக்கும் செஞ்சோலை யின் பணி உண்மையில் மகத் துவமானது. அந்தக்குழந்தைகளை யாராவது பார்த்து கொள்வார்கள் என நாம் சிந்திக்காமல், நாமும் அதன் பங்காளியாகலாம். நம்மால் முடிந்து ஒரு உடை, ஒருநேர உணவு, சிறுபணம்... எதுவும் அந்த பிள்ளை களின் வாழ்க்கையை ஒளியேற்ற லாம். குறிப்பாக விசேட தினங் களில் நாம் தாராளமாக, தண்ணீராக செலவிடும் பணங்களை இந்த குழந்தைகளிற்கு செலவிடலாம். பெருந்தொகை பணத்தை செல விட்டு கொண்டாட்டங்களால் கிடைக்கும் மகிழ்ச்சிகளை விட, இப்படியான காரியங்களின் மூலம் கிடைக்கும் ஆத்ம திருப்தி மேலல்லவா!




## குமரன் பத்மநாதன்

இவர்கள் எங்களுடைய பிள்ளைகள். நாம் இவர்களின் கல்வியில் முழு அக்கறை காட்டி வருகின்றோம் ஒவ்வொரு பிள்ளையுமே கல்வியில் தலை சிறந்து விளங்க வேண்டும் என்பதையே நாம் எதிர்பார்க்கிறோம். இவர்கள் கா.பொ.த உயர்தரம் முடித்து பல்கலைக்கழகம் செல்ல வேண்டும். அப்படி செல்ல முடியாவிட்டாலும் ஒன்றும் குறையில்லை. வளமான எதிர்காலத்திற்கு தேவையான எத்தனையோ வெளிவாரி படிப்புக்கள், தொழில்நுட்ப கல்விகள் உள்ளன. அதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்போம். நிச்சயம் இங்கு உள்ள ஒவ்வொருவரும் ஏதோ ஒரு துறையில் தலை நிமிர வேண்டும். இது தான் எமது விருப்பம். அதுதவிர, அவர்களின் வாழ்க்கை என்று வரும்போது, சரியான வயதில், சரியான சமயத்தில் திருமணம் கூட செய்து கொடுப்போம். அது நிச்சயம் அவர்களிற்கு பிடித்ததைப் போலத்தான் இருக்கும். அப்பொழுது சகல பொறுப்புக்களையும் ஏற்று, நானே அதனை முன்னின்று நடத்தி வைப்பேன்.

இங்கே இவர்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவதற்கான நிதி உதவிகளை நெர்டோ நிறுவனம் செய்து வருகின்றது. இது கு.பத்மநாதன் அவர்களின் தலைமையில் இயங்கும் நிறுவனமாகும். இந் நிறுவனத்திற்கான பண உதவியினை வெளிநாட்டின் புலம் பெயர் தமிழர்கள் செய்து வருகின்றனர்.

தீபம் தொலைக்காட்சியை இலங்கையிலும் பார்க்கலாம்





Channel name Deepam TV

Satellite frequency: Eutelsat 70B @ 70.5E 11356,
Polarization: vertical
symbol rate: 44900



# ஆண்களின் ஆடைத் தெரிவு இரகசியங்கள்

ரஜிந்தன்
rajinthan2011@gmail.com



உடை, அலங்கார விடயங்களில் அதிகம் செலவழிப்பது யார்? இப்படியொரு கேள்வியை கேட்டால், உலகம் தெரியாத ஆளாயிருப்பானோ என வில்லங்கப்பார்வைதான் அதிகம்பேர் பார்ப்பார்கள் என்பது தெரியும். பெண்கள்தான் உடை விடயத்தில் அதிகம் செலவழிக்கிறார்கள் என்பதே பலரதும் அசைக்க முடியாத நிலைப்பாடு. பாடசாலை, சனசமூக நிலையங்களில் நடக்கும் பட்டிமன்றங்களில் எல்லோரும் இப்படித்தான் சொல்கிறார்கள்.

மக்கள்ஸ்... தயவுசெய்து இதை நம்பாதீர்கள். உடை விடயத்தில் ஆண்களும் கணிசமாக செலவழிக்க ஆரம்பித்து விட்டார்கள். இன்னும் தெளிவாக சொன்னால், சில பெண்களைவிட,சில ஆண்கள் உடைகளிற்காக அதிகம் செலவழிக்கிறார்கள்.

ஆண்களின் ஆடை உற்பத்தி, விற்பனைதுறையும் நல்ல செல்வம் கொழிக்கும் துறையாகிவிட்டது. பெண்களின் உடைகளைப்போல நாளாந்தம் இல்லாவிட்டாலும், வாராந்தமாவது புதியபுதிய பாஷன் உடைகள் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன. 'பெண்கள் அவ்வளவு செலவழிக்கும்போது நாம் இப்பிடி கொஞ்சமாவது செலவழிக்கிறோம். அதைக்கூட எழுதுகிறார்களே' என யாராவது நண்பர்கள் வயிறு எரியாதீர்கள்.

இதை நாங்கள் சொலல்வில்லை. வடக்கின் பல்வேறு முன்னணி ஆடை விற்பனையகங்கள் எல்லாம் இப்படித்தான் சொல்கின்றன. நமது பையன்களின் தெரிவுகள்,எவ்வளவு பணத்தை செலவிட தயாராக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் அறிய வேண்டுமல்லவா. இதற்காக யாழில் ஆண்கள் ஆடைவிற்பனையில்முன்னணியிலுள்ளரெப்பாஸசினிற்கு சென்று விசாரித்தோம். ஆண்களின் ஆடை தேர்வுகள் பற்றி விசாரித்தோம். இந்த பகுதியின் கீழ் வருவதெல்லாம் நாம் சொல்லவில்லை. அங்கு விற்பனையாளர்களுடன் பேசி தயார் செய்தது.

இந்தக் காலத்தில் பெரும்பாலான ஆண்கள் கஸ்சுவல் ஆடைகளை வாங்குவதிலோயே ஆர்வம் காட்டுகின்றார்கள். அது மட்டுமல்ல ஆண்களில் ஆதிகமானவர்கள் வெறுமனே ஆடைகள் என்றில்லாமல் தமது தோற்றம், வாங்கிய ஆடைகளிற்கு தகுந்தாற்போல றிச் ஆக காட்டும் பொருட்களையும் வாங்குகிறார்கள்.

பெரும்பாலும் இப்பொழுது ஆண்கள் வாங்கும் ஆடைகளில் அதிக நிறங்கள் இல்லாமல் இரண்டோ அல்லது மூன்று நிறங்கள் கொண்டதாக காணப்படுகின்றது. ஜீன்ஸ் எனில் எளிமையான ஸ்ரைலை வெளிப்படுத்தக் கூடிய விதத்தில் இருக்கும். இது கருமை நிறத்திலோ அல்லது வேறு விதமான கடுமை நிறத்தில் இருக்கும். இதன் விலைகள் பொதுவாக 2000 ருபா முதல் 3000 ருபா வரையிலும் இருக்கும். அதுவே பிறாண்டட் டெனிம் என்றால் அதன் விலை நிச்சயம் 6000 ருபாய்க்கு மேல் வரும். அதன் தரம், வடிவத்திற்கு ஏற்ப விலைகள் மாறுபடும்.

சேட், ரீ சேட் என்றால், விதம் விதமான கட்டிங்ஸ்கள், வடிவங்களைக் கொண்ட சேட்களையே அதிகம் வாங்குகின்றார்கள். புதிது புதிதாக வரும் வடிவங்களையே எல்லோரும் விரும்புகிறார்கள். நீளமான கை, கட்டையான கை, சிலிம் பிற் என தமக்கு எது பிடித்தது, எது பொருத்தமானது என பார்த்துப் பார்த்து தெரிவு செய்கிறார்கள். புதிதாக அறிமுகமாகிய சேட்டின் விலை அதன் தரத்திற்கு ஏற்ப பல்வேறு விலைகளில் காணப்பட்டாலும் 2000 ருபாவாவது குறைந்தது தேவைப்படுகிறது.

தற்போதய ஆண்களுக்கான ஆடை கொள்வனவு வெறுமனே சேட்,ஜீன்ஸ்வாங்குவதோடு முடிந்துவிடுவதில்லை. பெண்களைப் போல விதவிதமான அலங்காரங்கள், அழகுப்பொருட்கள் மூலம் அழகை அதிகரித்து காட்ட முற்படுகிறார்கள். இதனால், ஆடைகளை விட வேறு அணிகலன்கள், பொருட்களை வாங்கவருபவர்களே அதிகம்.

வாங்கிய அல்லது தம்மிடமுள்ள ஆடைகளுக்கு மச்சிங் செய்யக் கூடிய விதத்தில் சூ, பெல்ட், பேர்ஸ், மணிக்கூடு என அனைத்தும் பக்காவாக பொருந்தும் விதமாக தெரிவு செய்கிறார்கள். இரவு எட்டுமணிக்கும் சன்கிளாஸ் போடும் பரம்பரை நமது. இதனாலோ என்னவோ சன் கிளாஸ் வாங்குவதில்த்தான் ஆண்கள் அதீத ஆர்வம் காட்டுவதாக சொல்கிறார்கள்.

இவை அனைத்தினதும் மொத்த பெறுமதி நிச்சயமாக பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் வரும். இப்பொழுது செல்லுங்கள், ஆண்களின் ஆடைச் செலவு பெண்களைவிட அதிகமா இல்லையா?

இதில் இன்னொரு பெரிய பிரச்சனையுள்ளது. நம்மவர்கள் ஏதோ ஒரு படத்தை பார்த்துவிட்டு, அதில் ஹீரோ அப்படி உடுத்தியிருந்தான் என தாமும் அப்படி உடுத்த முயல்கிறார்கள். இது இறுதியில் கத்தரித்தோட்ட வெருளி கதையாகவும் முடிந்துவிடுகிறது. பெரும் விலைகொடுத்து ஆடைவாங்கதெரிந்தநம்மவர்களில் பலர், தமக்கு தோதானது எது என்பதை தெரிவு செய்வதில் கோட்டை விட்டு விடுகிறார்கள்.

ஆண்கள் ஆடைத் தேர்வில் கோட்டைவிடுவதற்கு பிரதான காரணமாக சொல்லப்படுவது, நின்று நிதானித்து தேர்வு செய்ய அவர்களிற்கு பொறுமை இல்லை என்பதையே. இந்த விடயத்தில்த்தான் ஆண்கள் பெண்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். காலையில் கடை திறந்ததும் கடைக்குள் நுழையும் பெண்கள் சிலர் கடை பூட்டும்போதுதானே ஆடையை தெரிவு செய்து முடிக்கிறார்கள். ஆண்கள் கற்க வேண்டிய முதலாவது பாடம் இது.

சாதாரனமான நிகழ்;வு ஒன்றிற்கு செல்கிறீர்கள்... அங்கு உங்களுடைய தோற்றம் மற்றவர்களை ஈர்க்க வேண்டும் என்றால் சில ரகசியங்களை நீங்கள் நிச்சயம் தெரிந்து வைத்திருப்பது அவசியம். அவையாவன...

### எளிமையைப் பின்பற்றுங்கள்

அலுமாரியில் அதிகமான உடைகள் இருந்தாலும் அவை அனைத்தையும் ஒரே நேரத்தில் பயன்படுத்த வேண்டும் என நினைக்காதீர்கள். ஒரே நேரத்தில் மூன்றுக்கு மேற்பட்ட நகைகளையோ, நிறங்களிலான ஆடைகளையோ அணியாதீர்கள்.

### காஸ்வல் ஆடைகளை அணியுங்கள்

இவ் வகை ஆடைகள் மீது உங்கள் பார்வையை மாற்றிடுங்கள். இது என்றும் அலுத்துப் போகும் வகை கிடையாது. கட்டம் போட்ட கலர் உள்ள சட்டைகளை அணியுங்கள். இதனை சைனோஸ் வகையிலான ஜீன்ஸ் உடன் அணிந்து பாருங்கள் உங்களையே உங்களால் இனங்கான முடியாது.

### இடம் அறிந்து உடை உடுத்துங்கள்

நீங்கள் எங்கே செல்கிறீர்கள், யாருடன் செல்கிறீர்கள், என்பதை யோசியுங்கள். அந்த இடத்திற்கு தகுந்தாற் போல உடைகளை உடுத்துங்கள். நீங்கள் செல்லும் இடத்தின் விழா நாயகனை விட நீங்கள் நன்றாக அலங்காரம் செய்துவிடாதீர்கள்.

### சின்ன சின்ன விசயங்களில் முக்கியத்துவம்

சின்னச் சின்ன விசயங்கள் கூட பெரிதாக தாக்கத்தை ஏற்படுத்தும். நீங்கள் கடைசியாக அணியும் சிறு பொருட்கள் தான் அனைவரையும் கவரத்தக்கது. குறிப்பாக நீங்கள் ரையை அணிந்திருக்கும் விதம் கூட பலரை ஈர்க்க கூடியது. இப்படி சின்ன சின்ன விடயங்களிலும் கவனமாயிருங்கள்.

### சூ

நுல்ல தரமுள்ள சூக்களை தெரிவு செய்யுங்கள். உங்களிடம் பெண்கள் முதலிக் கவனிப்பது சூக்களைத்தான். அதனை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருங்கள் காலில் போடும் சூ தானே என்று நினைக்காமல் அதனை நன்றாகப் பாராமரியுங்கள்.

### எழுத்துக்கள் படங்களைத் தவிருங்கள்

நீங்கள் அணியும் ஆடைகளில் பெரிய பெரிய படங்கள், லோகோக்கள் வசனங்கள் இருப்பதனைத் தவிருங்கள். இதனையும் மீறி அணிவீர்கள் என்றால், நீங்கள் ஒரு நடமாடும் விளம்பரப் பதாகை போல காட்சியளிப்பீர்கள். கலையம்சம் பொருந்திய ஆடைகளை அணியுங்கள்.

இப்படி செல்லிக் கொண்டே போகலாம் ஆண்களுக்கான ஆடை அணிவிப்பது பற்றி.நாம் குறிப்பிட்ட விடயங்களை கவனத்தில் கொண்டு ஆடைகளை அணியத் தொடங்குங்கள். மாற்றம் என்பதை விரைவிலேயே உணர்வீர்கள். இதன் பின் எதிர்த்தரப்பிலிருந்து ஏதேனும் 'ரெக்வெஸ்ற்' வந்தால் அந்தப் பெருமையையும் தலைவணங்கி பவ்வியமாக ஏற்றுக்கொள் கிறோம்.







# வீட்டிலே ஒரு மூலிகைத் தோட்டம்

வைத்தியர் கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com
0776284687

பாரதியார் தன் காணிநிலம் வேண்டும் கவிதையில், ‘அந்தக் காணி நிலத்திடையே ஓர் மாளிகை கட்டித் தரவேணும், அங்கு, கேணி யருகினிலே தென்னைமரம் கீற்று மிளநீரும் பத்துப்பன்னிரண்டுதென்னைமரம் பக்கத்திலே வேணும்’என்றார் இன்றைய சூழலில் சிறியதாய் ஒரு மூலிகைத்தோட்டமும் வேண்டும் என கேட்கவேண்டும் என தோன்றுகிறது

சித்தமருத்துவம் ஆரோக்கிய வாழ்வை நோக்கமாக கொண்டது அனேக நோய்களுக்கு சித்தமருத்துவ மூலிகைள் குணமளிக்கின்றன இவ்வைத்தியமுறையை மேற் கொள்ள விரும்புகிறவர்கள் இதற் கான மூலிகைகளை பெறுவதற்கு கடினமாக உள்ளது எனவே வீட்டுத் தோட்டத்தில் முலிகைகளை வளர்ப்பது அதிக பயனுடையதாய் இருக்கும் அதாவது உங்கள் மருத்துவர் பரிந்துரைக்கும் மூலிகை களை உடனடியாக பெறக்கூடியதா யிருக்கும் அது மட்டுமன்றி தோட்டம் செய்வது சிறந்த உடற்பயிற்சியாகவும் அமைகிறது

**எத்தகைய மூலிகைகளை வீட்டிலே வளர்க்கலாம்**

நமது நிலத்தின் தன்மை சூழலுக்கு அமைவாக நாம் மூலிகை செடிகளை தெரிவு செய்யலாம்.

மூலிகைகள் ஏறிகள்(கொடிகள்), தரையை மூடி வளர்பவை, பூண்டுத்தாவரங்கள், செடிகள், மரங்கள், புற்கள், நிலகீழ்தண்டுகள். என பலவகைப்படும்

**இந்தவகையில் வீட்டிலே வளக்ககூடிய சில முலிகைகள்.**

**கொவ்வை:** இளம் தண்டு நுனிகள் சமைப்பதற்கு பயன்படும் இலை வேர் என்பவற்றின் சாறு நீரிழிவு நோயை குணமாக்குகிறது.

**தூதுவளை:** சுவாசரோகங்களில் இதன் இலைகுடிநீரிட்டு பயன்படுத் தப்படுகிறது

**பிரண்டை:** அசீரணம் வயிற்றுப் புண் என்பவற்றிக்கு பயன்படுகிறது.

**சிறுகுறிஞ்சா:** நீரிழிவுநோயில் பாவிக்கப்படுகிறது.

**கறுத்த பூக்கொடி:** குழந்தை களுக்கு இலகுவிரோசனமாக (மலமிளக்கியாக) இதன் இலைச்சாறு கொடுக்கப்படுகிறது

**பாகற்காய்:** கறியாக சமைத்து பயன்படுத்துவார்கள் இதுவும் நீரிழி வுற்கு சிறந்தது.

**மொசுமொசுக்கை:** சுவாசரோக குடிநீரில் பயன்படுகிறது

**கற்றாளை:** இதன் தண்டிலே காணப்படும் பாகுத்தன்மையான பொருள் எரிகாயங்கள், புண் என்பவற்றில் பயன்படுகிறது வயிற்றுப்புண்ணை குணமாக்கவும் பயன் படுத்த படுகிறது

**வட்டத்துத்தி:** சம்பல் செய்து சாப்பிட மூலரோகங்கள் குணமாகும் இதன் இலை புண்களுக்கு மருந்தாகிறது துவரம்பருப்புடன் சமைத்துண்ண மலச்சிக்கல் தீரும்.

**தேங்காய்ப்பூ கீரை:** சிறுநீரக வியாதியில் இது மிகவும் பயன் படுகிறது

**வல்லாரை:** ஞாபகசத்தியை அதிகரிக்கிறது

**விஸ்ணு கிரந்தி:** காச்சல் குடிநீரில் பயன்படுகிறது

**இஞ்சி:** அசிரணம் சமிபாடின்மை போன்றவற்க்கு பயன்படும். இஞ்சி தேனீராக பன்படுத்தப்படுகிறது உணவிலும் சேர்த்துக்கொள்ளப்படுகிறது

**பொன்னாங்காணி:** இரும்பு மகனீசியம் கல்சியம் விற்றமின் C நிறைந்த கீரை

**கற்பூரவள்ளி:** சுவாசரோகங் களில் குழந்தைகளுக்கான மருந்தாக பயன்படுகிறது

**ஆடாதோடை:** ஆஸ்துமா நோயில் குடிநீராக பாவிக்கப்படு கிறது



**குப்பை மேனி:** இலைசாறு 15 மி.லீ. குழந்தைகளுக்கு கொடுக்க பேதியாகும் அதனுடன் பூச்சிகள் வெளியேறும். குப்பைமேனிசூரணம் நாட்பட்ட சளியை அகற்றுகிறது. சிரங்கு சொறி என்பவற்றிக்கு இதன் இலையுடன் உப்பு மஞ்சள் சேர்த்தரைத்து பூசி குளித்து வர குணமாகும் .

இதை தவிர தூதுவளை நெல்லி தோடை போன்றனவும் வீட்டுத் தோட்டத்தில் வைக்ககூடிய மருத்துவ குணம் சார்ந்த பழ மரங்கள் ஆகும்

கொடிவகைகள் நீர் வடிய கூடிய மணற்பாங்கான தரைகளிலும் இஞ்சி வசம்பு போன்றவற்றை அதிக நீர் பெறதக்க களிமண் சாரந்த இடங்களிலும் கற்பூரள்ளி வல்லாரை குப்பைமேனி என்ப வற்றை சாடிகளிலும் வளரக்கலாம்.

**குறிப்பு: முலிகைகளை இனங் காண்பதில் தவறு நிகழாமல் பார்த் துக்கொள்ள வேண்டும் அருகில் உள்ளவைத்தியர் அல்லது வயது முதிர்ந்தவர்களது ஆலோச னையை பெற்றுக்கொள்வது நலம்.**





## தொன்மையான இடுகாடு!

விஜயனின் வருகைக்கு முற்பட்ட காலத்து புதைகுழிகள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தம்புள்ள இப்பன்கட்டுவ பிரதேசத்தில் உள்ள புராதன மயானத்தை ஆய்வுசெய்த தொல்லியலாளர்கள் இவற்றை கண்டுபிடித்துள்ளனர். சுமார் 2,600 வருடங்களிற்கு முந்தைய காலத்து புதைகுழிகள் இவை. புதைகுழிகளுடன் பல்வேறு பொருட்களும் காணப்பட்டுள்ளன. பௌத்தமதத்தின் வருகைக்கு முற்பட்ட காலத்து மக்களின் வழக்கப்படி, மரணித்தவருக்கு விருப்பமான பொருட்களை சேர்த்து புதைக்கும் வழக்கம் இருந்திருக்கலாமென ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.



## முழங்காவில் அதிசயக் கிணறு







கிளிநொச்சி முழங்காவில் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள இந்த புனித திர்த்தக் கிணற்றில் முழங்காமல் மின்னாமல் இடி விழுந்து நீர் ஊற்றெடுத்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் நீர்ப்பாற்றாக் குறை நிலவியதால் அப்பகுதி மக்களால் நீரைப் பெற்றுக்கொள் வதற்காகஇந்தக்கிணறு 26அடி ஆழம் வரை தோண்டப்பட்டபோதும் நீர் ஊற்றுவரவில்லையாம். சோர்ந்து போன மக்கள், இனி ஆழமாக்குவதில் பலனில்லையென தீர்மானித்து கிணறு தோண்டப் பயன்படுத்திய ஆயுதங்களையும் கிணற்றுக்குள் போட்டு, கிணற்றை மேலும் ஆழமாக்குவதை நிறுத்திவிட்டனர். இந்த நிலையில் 1932ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 26ஆம் திகதி மாலை இரண்டு மணியளவில் முழங்காமல், மின்னாமல் கிணற்றுக்குள் இடி விழுந்து நீர் ஊற்றெடுத்ததாக வரலாறு கூறுகிறது. இடி விழுந்ததால் கிணற்றின் உள்ளே சுரங்கம் போன்ற பெரிய துவாரம் செல்வதாகவும், இதனுடைய ஆழம் இதுவரை கண்டறிப்படவில்லை எனவும் மக்கள் கூறுகின்றனர்.

எந்தக் காலப்பகுதியிலும் இந்தக் கிணற்று நீர் வற்றாதாம். இந்தக் கிணற்றுக்கு “முழங்கா ஊற்றுத் தீர்த்தம்” என சிறப்புப் பெயரும் உண்டு.



# ஆளுக்கேற்ப பாவாடை

ஆடைகளின் கொள்ளைப் பிரியர்கள் பெண்கள் தான். ஆனால் தாம் விரும்புகின்ற ஆடைகள் எல்லாம் தமக்கு அழகானதா என்பதை சிந்திக்க மறந்து விடும் பொழுது தான் அவர்களின் அழகும் குறைந்து விடுகின்றது.

எனவே எமக்கு ஏற்ற ஆடைகளை தெரிவு செய்யும் பொறுப்பு எமது கைகளில் தான் உள்ளது. இன்று அதிகளவான பெண்கள் விரும்பி அணியும் “ஸ்ரைலான” ஆடை என்றால் அது பாவாடை, சட்டை தான். எனவே இந்த பாவாடையை தெரிவு செய்வது எப்படி என்று பார்ப்போமா...

**தோற்றம்**

உங்கள் தோற்றத்தை பொறுத்தே பாவாடையின் நீளத்தை தெரிவு செய்ய வேண்டும். நீங்கள் உயரமானவராக இருப்பின் முழங்காலோடு சற்று கீழ் இறங்கிய பாவாடைகள் மிகவும் பொருத்தமானதாகும். நீங்கள் குட்டையானவராயின் முழங்காலில் இருந்து 2அடி நீளம் கூடிய பாவாடைகள் பொருத்தமானது. அதே போல் சற்று வீதியான பாவாடைகள் முழு நீள பாவாடைகள் மிகவும் பொருத்தமானது. இல்லை நீங்கள் தமன்னா போல் மெல்லியவரா ஒட்டலான ‘ஊர்ட்ஸ் ஸ்கேட்’ உங்களுக்கு தான். அதுவும் இல்லை, நீங்கள் அளவான உடலமைப்பையும் அளவான உயரத்தையும் உடையவரா? கட்டையான சற்று வீதியான மற்றும் ரெனிம் பாவாடைகள் உங்களுக்கே மிகவும் பொருத்தமானது.

**கலர்**

பாவாடைகளை தெரிவு செய்யும் பொழுது கறுப்பு கலர் பொது என்பதால் அதிகளவான பெண்கள் கறுப்பை தெரிவு செய்வர். ஆனால் நீங்கள் அணியும் மேல் சட்டையின் கலருக்கு பொருத்தமான பாவாடையையும் தெரிவு செய்தால் தான் அழகு ஒட்டிக் கொள்ளும். எனவே கறுப்பு பாவாடைக்கு எல்லா கலர் பிளவுஸ்கலையும் போடலாம். வெள்ளை பிலவ்ஸ் இற்கு நீலம் சானி பச்சை, ரெனிம்ஸ் ஸ்கேட் என்பவை பொருத்தமானது. அதே போல் கறுப்பு பிளவ்ஸ் இற்கு பட்டர் கலர் பாவாடை பொருத்தம். ஊதா நீலம் பிளவுஸ் இற்கு வெள்ளை பாவாடை மிகவும் பொருத்தம். அத்தோடு செக், கோட்டு பாவாடைகளுக்கு பிளேன் பிளவுஸ்கள் மிகவும் பொருத்தமானவை.

**இடத்திற்கேற்ப**

நீங்கள் வைத்தியசாலை வங்கி அலுவலகங்களில் வேலை புரிபவரா? நீங்கள் அணியும் பாவாடை ரெனிம் அல்லது ரைய்ட் ஸ்கேட் உங்கள் லுக் இணை மேலூட்டும். இல்லை நீங்கள் படிக்க செல்லும் மாணவியா செக் பாவாடைகள் உங்களுக்கு மரியாதையை தரும். சொப்பிங் செல்லும் போதோ அல்லது வேறு இடங்களுக்கு பொழுது போக்காக செல்லும் போதோ நீளமான வீதியான பாவாடைகள் பொருத்தமாக இருக்கும்.

**வயதிற்கேற்ப**

10வயது வரைக்கும் உங்கள் பெண் பிள்ளைகளுக்கு குட்டையான பாவாடைகளை ஆசை தீர போட்டு அழகு பாருங்கள். 15-25 வயது வரை உங்கள் ஆசை தீர மாணவிகள் என்ற முறையில் செக் பாவாடைகள் கலர் கலராக போட்டு கலக்குங்கள். 25-35 வயது வரை ரெனிம் மற்றும் ரைய்ட் ஸ்கேட் ஓகே தான். ஆனால் அதன் பிறகு நீங்கள் திருமணம் செய்தால் ஒரு தாய் என்பதால் நம் தமிழ் பண்பாட்டின் படி சற்று நீளமான பாவாடைகளை ஒரு 45 வயது வரை போட்டு அழகு பாருங்கள். நீங்கள் 50 வயதை கண்டு விட்டால் முழு பாவாடையே (அது ரெனிமாக கூட இருக்கலாம்) உங்கள் மதிப்பை உயர்த்தி காட்டும்.



# பக்க விளைவற்ற வீட்டில் கிடைக்கும் பேஸ்வோஸ்

எல்லா பெண்களும் வெவ்வேறு அழகு என்பார்கள். ஆனால் யார் எப்படி என்ன புகழ்ந்தாலும் பெண்களின் மனங்கள் மட்டும் நிறைவதே இல்லை. தங்கள் அழகு போதாது முகம் அப்பிடி இருக்கு இப்பிடி இருக்கென்று அழகுசாதனப்பொருட்களை கொண்டு அழகைமெருகூட்டுவதாக நினைத்து சில வேளை உள்ள அழகையும் போகடிச்சிடுவார்கள். காரணம் தமது தோலிற்கு ஒத்து வராதபொருட்களை பயன்படுத்துவதேயாகும்.

அழகு சாதனப் பொருட்கள் என்னும் பொழுது இன்று அழகுக் கலை நிலையங்களில் கிடைப்பவை தான் நமது பெண்களுக்கு தெரியும். ஆனால் அவற்றை எல்லாம் விட வீட்டில் உள்ள பொருட்கள் எமக்கு எந்தளவு பாதுகாப்பு என்பதை மறந்து விடுகிறார்கள் நமது பெண்கள்.

வீட்டில் கிடைக்கும் கடலை மாவே உங்களுக்கு சிறந்த பேஸ் வோஸ் என்பதை நீங்கள் அறிவீர்களா?



தினமும் காலையில் வீட்டை விட்டு புறப்படும் இன்றய பெண்கள் மாலை அல்லது மதியம் தான் வீடு திரும்புகின்றனர். வீட்டிற்கு போனதும் நீங்கள் குளிக்கும் போது முகத்திற்கு சந்தையில் கிடைக்கும் பேஸ் வோஸ்களை விட கடலை மாவை பாவித்து பாருங்கள் இளமையான அழகு என்றும் உங்களோடு நீடித்து இருக்கும். அலர்ஜி தோல் புற்று நோய் போன்றவற்றில் இருந்தும் எம்மை பாதுகாக்க முடியும்.

கடலை மாவினைதயிரில் அல்லது பசும்பாலில் இல்லையேல் கூல் நீரில் குளைத்து முகத்தில் அப்லே பண்ணி 15-30 நிமிடங்கள் கழித்து நீர் தடவி ஈரழிப்பாக்கி காய்ந்த கடலை மாவினை உரித்தெடுங்கள். அப்புறம் சோப் போட தேவையில்லை உங்கள் முகம் பஞ்சு போல் மென்மையாகவும் மினு மினு என்றும் இருக்கும். அத்தோடு இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் கரும்புள்ளிகள் மறைவதோடு பருக்களும் வாராமல் இருக்கும்.

அதே போல் முகம் சொர சொர என்று இருந்தால் முட்டை மஞ்சள்கரு பாலாடை மற்றும் கடலைமா என்பவற்றை எடுத்து மிக்ஸ் பண்ணி முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்து சுத்தமான தண்ணீரில் கழுவ வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் முகம் மென்மையாகி பழிச்சிடும்.

அதே போல் கடலைமா மஞ்சள் பாலாடை என்பவற்றை சேர்த்து குழைத்து அப்லே பண்ணி 15 நிமிடம் கழித்து கழுவி வந்தால் முகமும் தங்கம் போல் ஜொலிக்கும். முகப்பருவும் உங்கள் முகத்தை எட்டிப் பார்க்கவே பயப்பிடும்.

எனவே உங்கள் முகப்பரு கருமை நிறம் சொர சொரப்பு என அனைத்து அசௌகரியங்களுக்கும் ஒரே மருத்துவர் கடலைமாவு என்பதை மறவாதீர்கள். இயற்கை என்றும் இனிமையை மட்டுமே தரும்.

# சேலையில் பெண், அழகோ, அழகு!

எதிலும் புதுமையை விரும்பும் இந்தக் காலத்துப் பெண்கள், சேலை கட்டும் விஷயத்திலும் அதைப் பின்பற்றுகிறார்கள். விதம் விதமாக சேலை உடுத்துவதையே இன்றைய பெண்கள் விரும்புகின்றனர்.

### முன்பக்க முந்தானை

பெரிய பார்டர் வச்ச சேலை என்றால் வழக்கமா சேலை கட்டும் ஸ்டைலில் கட்டிக்கொள்ளவேண்டும். முந்தானையை பின்னாலேருந்து எடுத்து முன் பக்கம் கொண்டு வரவேண்டும். பார்டர் பகுதியை சின்ன மடிப்புகளா பின் பண்ணி, வழக்கத்தைவிட நீளமா இருக்கிற மாதிரி வச்சுக்கிறது அழகு. பெரிய பார்டர் வச்ச சேலை, ரொம்ப ஆடம்பரமா வேலைப்பாடு செய்த ஜாக்கெட்டுக்கு இந்த ஸ்டைல் ரொம்ப அழகாக இருக்கும்.

### டிசைனர் ப்ளவுஸ்

ஆயிரக்கணக்குல செலவழிச்சு பட்டுப் புடவை வாங்கறதை விட, அதே செலவுக்கு டிசைனர் சேலை வாங்க நினைக்கிறாங்க இந்தக் காலத்துப் பெண்கள். திருமணம் மாதிரி நிகழ்ச்சிகளுக்கு பட்டுப்புடவை வாங்கும் போது, அது சாதாரணமா இல்லாமல், ஸ்பெஷலா இருக்க வேண்டும் என்பது இன்றைய பெண்களின் எதிர்பார்ப்பு.

புடவைக்கு ஏற்ப மேட்ச்சிங் பிளவுசுக்கும் நிறைய செலவு செய்து, அழகழகாக தைத்துப் போடுவது இப்பொழுது பேஷனாகி வருகிறது. இப்படி பல ஆயிரம் செலவு பண்ணி வாங்கற புடவையை, சாதாரண ஸ்டைல்ல கட்டினா, புடவையோட அழகு மறைஞ்சிடும். பார்த்துப் பார்த்து டிசைன் பண்ணின ஜாக்கெட்டோட அழகும் தெரியாது.

### ஜாக்கெட் அழகு

தெரியும் வழக்கமா சேலை கட்டுவது போல சேலை கட்டி முந்தானைப் பகுதியை எடுத்து சொருகாமல் லூசாக விடவேண்டும். அதாவது ஜாக்கெட் தெரியற மாதிரி விடுவது அழகு. இதுபோல மெலிசான புடவைகள்ல கட்டினா அழகு. முந்தானைப் பகுதியை இடது கைல சுத்திக்கலாம். பார்ட்டி, பொது விழாக்கள்ல நடிகைகளும், மாடல்களும் இந்த மாடல்ல சேலை கட்டிட்டு வருவதைப் பார்க்கலாம். ஜாக்கெட்டோட அழகு எடுப்பா தெரியணும்னு நினைக்கிறவங்களுக்கான ஸ்டைல் இது.

### காஸ்ட்லி புடவை

புடவைகளில் வழக்கமா முன்பக்கம் கொசுவம் வைத்து கட்டுவது வாடிக்கை. இடது பக்கம் கொசுவம் வைத்து கட்டுவது இப்போது பேஷனாகி வருகிறது. இதற்கு ஸ்லீவ்லெஸ் ஜாக்கெட் ரொம்பப் பொருத்தமா இருக்கும். முந்தானைப் பகுதியை லூசா விட்டு, பின் பக்கம் கொண்டு வந்து, வலது கை இடுக்கு வழியா முன் பக்கம் எடுத்து பின் பண்ணலாம். ரொம்ப காஸ்ட்லியான புடவைகளுக்கான ஸ்டைல் இது.





# இஞ்சி நம் மருத்துவர்

சமையலறையில் கிடைக்கும் இஞ்சி கூட எமது பல நோய்களுக்கு சிறந்த மருத்துவர் தான் என்பதை அறிவீர்களா?

1 இஞ்சி துவையல், பச்சடி வைத்து சாப்பிட மலச்சிக்கல், களைப்பு, மார்பு வலி தீரும்.

2 இஞ்சியை சுட்டு உடம்பில் தோய்த்து சாப்பிட பித்தம் , கப நோய்கள் தீரும்.

3 இஞ்சி சாறில்,வெல்லம் கலந்து சாப்பிட வாதக் கோளாறு நீங்கி பலம் ஏற்படும்.

4 இஞ்சியை புதினாவோடு சேர்த்து துவையலாக்கி சாப்பிட பித்தம், அஜீர ணம், வாய் நாற்றம் தீரும். சுறு சுறுப்பு ஏற்படும்.

5 காலையில் இஞ்சி சாறில், உப்பு கலந்து மூன்று நாட்கள் சாப்பிட பித்தம் தலைச்சுற்று, மலச்சிக்கல் தீரும். உடம்பு இளமை பெறும்.

6 பத்துகிராம் இஞ்சி, பூண்டு இரண்டையும் அரைத்து, ஒருகப் வெந்நீரில் கலந்து காலை, மாலை இரண்டு நாட்கள் சாப்பிட மார்பு வலி தீரும்.

7 இஞ்சி சாறோடு, தேன் கலந்து சூடாக்கி காலையில் வெறும் வயிற்றில் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வெந்நீர் குடித்துவர தொந்தி கரைந்து விடும்.

8 இஞ்சி சாறில், எலுமிச்சை சாறு கலந்து சாப்பிட நல்ல பசி ஏற்படும்.

9 இஞ்சியை வதக்கி, தேன் விட்டு கிளறி, நீர் விட்டு, கொதிக்க வைத்து நீரை காலை, மாலை குடித்துவர வயிற்றுப் போக்கு தீரும்.

10 இஞ்சியை அரைத்து நீரில் கலந்து தெளிந்தபின், நீரை எடுத்து, துளசி இலை சாறை சேர்த்து ஒரு கரண்டி வீதம் ஒரு வாரம் சாப்பிட வாய்வுத் தொல்லை நீங்கும்.

11 இஞ்சி சாறில், தேன் கலந்து தினசரி காலை ஒரு கரண்டி சாப்பிட்டு வர நோய் தடுப்பு திறன் கூடும். உற்சாகம் ஏற்படும். இளமை பெருகும்.

12 இஞ்சி சாறுடன், வெங்காய சாறு கலந்து ஒரு வாரம், காலையில் ஒரு கரண்டி வீதம் குடித்துவர நீரிழிவு குறையும்.

13 இஞ்சி சாறு, எலுமிச்சை சாறு, வெங்காய சாறு மூன்றையும் கலந்து ஒருவேளை அரை அவுன்ஸ் வீதம் சாப்பிட்டுவர ஆரம்ப கால ஆஸ்துமா, இரைப்பு, இருமல் குணமாகும்.

14. இஞ்சி, மிளகு இரண்டையும் அரைத்து சாப்பிட ஜீரணம் சுலபமாகும்.

# பெண்ணுக்கொரு கொலுசு வேண்டும்

கொலுசு என்றாலே என்ன என்று கேட்கும் அளவிற்கு இன்றய பெண்களின் நிலை மாறிவிட்டது. முன்னைய காலத்தில் பெண்களின் கால்களில் கொலுசு அணிவித்து அந்த கொலுசு சத்தம் வீட்டில் கேட்கும் போதெல்லாம் மகாஇலட்சுமியே வீட்டிற்குள் உலா வருவதாக நம்பிக்கை இருந்துள்ளது. ஆனால் இன்று காதணியே அணிந்து கொள்ளாதது தான் ஸ்ரைல் என்கிறார்கள் நம்ம பெண்கள்.

முன்பெல்லாம் பெண்குழந்தை நடக்கத் தொடங்கினால், வயசிற்கு வந்தால், தந்தை அல்லது மாமா புதிதாக சலங்கை நிறைந்த வெள்ளி கொலுசு செய்து காலில் அணிந்து விடுவார்கள். காரணம் பெண் பிள்ளைகள் அவர்கள் வீட்டு மகாலட்சுமிக்கு சமம்.

வெள்ளி கொலுசு அணிவதற்கு பல காரணங்கள் உள்ளன. பெண்களின் அச்சம், மடம், நாணம் இவை எல்லாம் அந்த ஒரு கொலுசின் ஓசைக்குள் மறைந்துள்ளதாக நமது பெரியவர்கள் கூறுவார்கள். நடக்கும் பொழுது வரும் ஒவ்வொரு சலங்கை ஓசையிலும் பெண்களின் நாணம் ஜொலிக்கும் என்பார்கள். அதனால் தான் பெண்களுக்கு கொலுசு முக்கியம் என்கின்றார்கள் நமது பெரியவர்கள்.

வெள்ளிதான் பெண்ணிற்கு நாணம் கொடுக்குமாம். அதனால் தான் முன்னைய காலத்தில் வெள்ளி கொலுசை பெண்களுக்கு அணிவிப்பர். ஆனால் இன்று தங்கம், பித்தளைகளில் கொலுசு செய்து அணிந்து கொள்கின்றார்கள் நமது பெண்கள். அதுவும் ஒற்றை காலுக்கு கொலுசு போடுவது தான் இப்ப ஸ்ரைலாம். இதை தான் ஒற்ரை றூட்டு என்பார்களோ.....

ஒற்றை கொலுசை கூட ஆலயங்களிற்கும் மங்களகரமான சடங்குகளிற்கும் மட்டுமே அணிந்து கொள்கின்றனர். இல்லையேல் இப்பொழுது வெறும் 2000ரூபாவில் கற்கள் பதிக்கப்பட்ட கொலுசுகள்புதிய டிசைன்களில் வந்துள்ளமையால் அதனை வாங்கி அணிந்து கொள்கின்றனர். எது எப்படியோ காலம் மாறும் வேகத்திற்கேற்ப நமது பெண்களின் பண்பாடுகளும் ஸ்ரைல் என்ற பெயரில் வேகமாகி மாறுகின்றது என்பதே உண்மை.



# குமிழமுனை காடழிப்பு

'இலங்கையில் காடுகள் பொறுப்பற்ற விதத்தில் அழிக்கப்பட்டு வருகின்றன. யுத்தம் நடந்த வடக்கு, கிழக்கு பகுதிகளில்த் தான் அவை ஓரளவாவது பாதுகாக் கப்பட்டுவந்தன' இதைச் சொன்னது நமது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. ஒரு விவசாயியாக, இயற்கையுடன் வாழும் மனிதராக மைத்திரியை புரிந்து கொண்ட நமக்கு காடுகளை பேணும் அவரது ஆர்வத்தில் எந்த சந்தேகத்தையும் கொள்ள முடியாது.

என்றாலும் ஜனாதிபதியின் ஆர்வமும், அவரது பரிவாரங்களின் ஆர்வக்கோளாறும் எதிரெதிர் திசைகளில்த்தான் உள்ளன என்பதற்கு குமிழமுனை காடழிப்பு சம்பவங்கள் ஒரு உதாரணம்.

யுத்தகாலத்தில் காடுகளின் ஆரம்பங்களில் 'இங்கு மரங்கள் தறிப்பது தண்டனைக்குரிய குற்ற மாகும்' என்ற ஒரு அறிவிப்பு, எண்ணெய் பரல் முகப்பு தகரங் களில் ஆங்காங்கே தொங்கவிடப் பட்டிருக்கும். அது வெறும் அறிவிப்பு மட்டுமல்ல. காடழிப்பை கட்டுப்படுத்த விசேடதிட் டங்கள் எல்லாம் முன்னர் நடை முறையில் இருந்தன. ஆனால் யுத்தத்தின் பின்னர் நிலைமை தலைகீழாகிவிட்டது.

யுத்தத்தின் பின்னர் வடக்கில்த் தான் விரைவாகவனங்கள் அழிக்கப் படுகின்றன போல்த் தெரிகிறது. இவற்றில் அதிகம் சர்ச்சையில் சிக்கியது இரண்டு பிரதான இடங்கள். ஒன்று மன்னாரின் மறிச்சுக்கட்டியில். மற்றது தற்போது குமிழமுனையில். இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், இரண்டிலும் அமைச்சர் ரிசாட் பதியூதின்தான் குற்றம்சாட்டப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவின் கரைத்துறைப் பற்று பிரதேச செயலர் பிரிவி லுள்ள குமிழமுனை கிராமத் தின் அடர்ந்தவனங்களே அழிக்கப் படுகின்றன. வனவளதிணைக் களத்திற்கு சொந்தமான 1000 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு அங்கு குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள் ளன என குற்றம்சாட்டப்படுகிறது. எனினும், முஸ்லீம்கள் முன்னர் குடியிருந்த பகுதிகளே துப்பரவு செய்யப்பட்டு குடியேற்றப்படு கிறார்கள் என்பது அமைச்சர் தரப்பு வாதம்.

ஏற்கனவே மறிச்சுக்கட்டியிலும் இதே விடயம்தான் நடந்தது. அந்தப் பகுதியிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லீம்களை மீள்குடியேற்றம் செய்வதாக காடழிப்பிற்கு விளக்கம் சொல்லப்பட்டது. சில எண்ணிக்கை குடும்பங்கள் சென்றது, பெரும் தொகை குடும்பங்களாக திரும்பி வந்ததாகவும், வகைதொகையின்றி காடழிப்பு நடப்பதாகவும் அப்போது குற்றம்சாட்டப்பட்டது.

பௌத்த அடிப்படைவாத அமைப்புக்கள் சிலவும், ரிசாட் பதியூதினுடன் முரண்டுபிடிக்கும் ஊடகங்களும் அப்போது அதனை சர்ச்சையாக்க, இறுதியில் காடுகள் தப்பித்தன.

தற்போது குமிழமுனையிலும் இதேவிதமான சம்பவம்தான் நடக் கிறது. சிறியளவிலான முஸ்லீம் குடும்பங்கள் சென்றதாகவும், பெருந் தொகையில் திரும்பி வந்துள்ள தாகவும் குற்றம்சாட்டப்படுகிறது.

குமிழமுனையில் இருந்து இடம்பெயர்ந்த சிலகுறிப்பிட்ட எண்ணிக்கையான முஸ்லீம்கள் திரும்பி வந்தார்கள் எனில், அவர்களின் காணிகள் அவர்களிற்கு வழங்கப்பட வேண்டுமென்பதில் யாரும் தடைபோட முடியாது. எனினும், பெருந்தொகையில் திரும்பி வருபவர்கள் விடயத்தில் முறையான பொறிமுறை அவசியம்.

வடக்கில் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக எண்ணற்ற வர்கள் அகதிமுகாம்களில் வாழ்கின் றனர். அவர்களிற்கு வேறு பொருத் தமான இடங்கள் எதுவும் வழங்கப் படவில்லை. அதுதவிர, வம்சாவளி பெருகிச் செல்கிறதென்பதற்காக ஒருவர், அரசகாணிகளை அடாத்தாக பிடிக்கவோ, காடுகளை அழித்து குடியிருப்புக்களை ஏற்படுத்தவோ முடியாது.

அமைச்சர் ரிசாட் இந்த விவகாரத்தில் பிறரது கருத்தை கவனிக்காமல் தன்னிச்சையாக நடப்பதாகவும் ஒரு குற்றச்சாட்டு உள்ளது.

காடுகளை அழிப்பதென்பது மனிதன் தனது தலையில் தானே மண்ணை போட்டுக்கொள்ளும் காரியம். அரசியலை தவிர்த்து, இயற்கைச்சமனிலை பேணுவதற் காவது காடழிப்பை தடுத்து நிறுத்த வேண்டிய அவசிய பணி எல்லோரி டமும் உள்ளது. அதிகரிக்கும் மக்கள் தொகையை சமாளிக்க வேறு பொறிமுறைகளைத்தான் கண்டறிய வேண்டும்.





## புண்ணியம் எது?


மேகலா.ம

இரப்போர்க்கு இல்லையென்று
இறைவனுக்கு காணிக்கையாம்
பசியோடு பலரிருக்க
படையல் கடவுளுக்காம்

அடுக்கி வைத்து குளிரூட்டி
அச்சடித்த விலை என்றால்
மறுப்பேதும் இல்லாமல்
மௌனித்து செலவுகளாம்


தினம் கூலி தேடுகிற
தெருவோர மாந்தரிடம்
விலை குறைக்க பேரமாம்
வலையோடும் ஏரோடும்
வெயிலோடும் மழையாடும்
நிதம் தோறும் போராடும்
இவர் பாடு அறியாராம்

நூலிழை ஈயாமல்
சேர்த்து வைத்த உண்டியலாம்
நூறடிச் சிலை வைத்து
காவடியாம் நேர்த்தியாம்
மனிதம் எங்கேயோ
இறைவன் அங்கேயாம்
அறியா இவர் வாழ்வு
இருந்தாலும் இல்லையாம்...



அனுஹேமன்






# வழியனுப்புதல் இல்லாத விடைபெறல்

அன்ரூ இக்னேஷ்

இந்திய கிரிக்கெட்டின் இரண்டு பெரிய அடையாளங்கள் கடந்த சில நாட்களில் ஓய்வை அறிவித்திருந்தனர். விளையாடிய காலத்தில் இந்திய கிரிக்கெட்டின் மகத்தான அடையாளங்களாக விளங்கியவர்கள், எந்த சலனமுமில்லாமல் விடைபெற்றுச் சென்றிருக்கிறார்கள். வரலாற்றின் பக்கங்களிலிருந்து தூக்கியெறியப் பட்டவர்கள்யாராலும் கண்டு கொள்ளப்படாமலேயே போவதையொத்த ஒரு துயரமான கிரிக்கெட் வாழ்க்கை இருவருக்கும் வாய்த்து, யாராலும் கண்டுகொள்ளப் படாததாலேயே ஓய்வை அறிவித்து விட்டனர் இருவரும். அவர்களின் ஓய்வு அறிவித்ததால் மட்டுமே ஓரிருதினங்கள் மீளவும் நினைவு கூரப்பட்டுள்ளனர்.

ஒருவர் வீரேந்திர சேவாக். மற்றவர் சகீர்கான். இரண்டுவீரர்கள் பற்றியும் ஏராளம் மனம்நிறைந்த விளையாட்டு தருணங்களை நினைவுகூர முடியும். இவர்களின் பொற்காலத்தில் மற்ற எல்லா நட்சத்திரங்களிற்கும் ஈடாக சில சமயங்களில் அதற்கும் அதிகமாக பேசப்பட்டார்கள். ஒருவர் துடுப்பாட்டத்திலும், மற்றவர் பந்து வீச்சிலும் சாதித்தார்கள்.

நவீன கிரிக்கெட் என்பது துடுப்பாட்டக்காரர்களின் ஆட்டம் என ஆகிவருவதால், சகீர்கானை விட வீரேந்தர் சேவாக்தான் அதிகமும் கிரிக்கெட் உலகத்தில் பேசப்பட்டார். புகழடைந்திருந்தார்.

வீரேந்தர் சேவாக் என்றால் ரசிகர்களின் மனதில் தோன்றும் அடையாளம் அடித்து நொறுக்குவதே. எதுபற்றியும் அலட்டிக் கொள்ளாமல் போட்டியின் ஆரம்பம் முதலே அடித்து நொறுக்கும்பாணி, இந்தியாவின் முறையான வேறெந்த ஆட்டக்காரர்களிடமும் இருந்ததில்லை. சேவாக் அணிக்குள் வந்தபோது கோலோச்சிக் கொண்டிருந்த சச்சின், கங்குலி, ராவிட் போன்றவர்களில் யாருமே மரண அடிகாரர்கள் கிடையாது. துடுப்பாட்டத்தில்பெரியசாதனைகளிற்கு சொந்தக்காரர்களான அவர்களின் ஆட்டம் மரபானது. அவர்களின் தலைமுறை எப்படி கிரிக்கெட் ஆடியதோ, அவர்கள் கிரிக்கெட்டை எப்படி கற்றார்களோ, அப்படி ஆடினார்கள். அவர்கள் கிரிக்கெட்டின் பரிசோதனை முயற்சிகளிற்கு செல்லவில்லை. எந்தப் பாணியையும் உருவாக்கவில்லை. ஆனால் சேவாக் அவற்றை செய்தார்.

டெஸ்ட் ஆட்டங்களில் ஒரு புதியபாணி ஆட்டத்தை வெற்றிகரமாக ஆடியவர் என அவரை சொல்லலாம். உண்மையில் இந்தப் பாணியை அவர் அறிமுகம் செய்யவில்லை. அதற்கு சொந்தக்காரர் இலங்கையின் ஜெயசூரியாதான். ஆனால் அந்த பாத்திரத்தை பெற்றுக் கொள்ள வெற்றிகரமான டெஸ்ட் ஆட்டக்காரராக அவரால் உருவெடுக்க முடியாமல் போய்விட்டது.

ஒருதினப்போட்டிகளில் இந்த பாணியின் முன்னோடியான ஜெயசூர்யா, டெஸ்ட்டில் சோபிக்கவில்லை. ஆனால் சேவாக் அதை வெற்றிகரமாக செய்தார். டெஸ்ட், ஒருதினம், ரி20 என மூன்று ஆட்டங்களிலும் அவரது பாணி ஒன்றுதான். பந்துவீச்சாளர்களின் மேலாதிக்கத்திற்கு ஆரம்பத்திலிருந்தே சாவல்விடும் ஆட்டம். இதனால்பலமுறைவந்ததும்,திரும்பி விடுவார்.ஆனால்மிரட்டல்ஆட்டத்தில் மிகப்பெரிய இன்னிங்ஸ்களையும் ஆடியுள்ளார். இவரளவிற்கு டெஸ்ட்டில் பெரிய இன்னிங்ஸ்களை ஆடிய வேறெந்த இந்திய வீரரும் இல்லை. பிரட்மன், லாரா, கெய்ல் வரிசையில் டெஸ்டில் இரண்டுமுறை முச்சதம் கண்டவர் பட்டியலில் இருக்கிறார். கண்மூடிக்கொண்டு பிளந்துகட்டும் அதிரடி ஆட்டக்காரர்கள் சதம் அடிக்கலாம். முச்சதமடிக்குமளவில் அதிர்ஸ்டம் கைகொடுப்பதில்லை. ஆனால் சேவாக் செய்துள்ளார். அதிர்ஸ்டத்தை மட்டும் வைத்துக் கொண்டு அப்படிச் செய்தார் என கூற எந்த முகாந்தரமுமில்லை.

250 இற்கும் அதிகமான ஓட்டங்களை நான்கு முறை எடுத்துள்ளார். பிரட்மனிற்குபின்னர் இந்தசாதனை சேவாக்கிற்குத்தான் சொந்தம்.

104 டெஸ்ட்களில் ஆடி 8585 ஓட்டங்களை குவித்துள்ளார். சராசரி 49.34. ஸ்ரைக்ட் ரேட் 82.23. சதங்கள் 23.

டெஸ்ட் ஆட்டங்களில் 2000 ஓட்டங்களிற்கு அதிகம் குவித்த ஆட்டக்காரர்களில் இந்த ஸ்ரைக்ட் ரேற்தான் தலைசிறந்தது.

இந்தியர்கள் சேவாக்கை தலையில் வைத்து கொண்டாட இன்னொரு காரணமும் உள்ளது. பாகிஸ்தானிற்கு எதிராக பிளந்து கட்டியதே அது. 9 போட்டிகளில் ஒரு முச்சதம் அடங்கலாக 1276 ஓட்டங்கள். 91.14 என்ற பிரமிப்பூட்டும் சராசரி.

ஒருதினப்போட்டிகளிலும் 35.05 என்ற சராசரியில் 8273 ஓட்டங்கள். என்றாலும் டெஸ்ட்தான் சேவாக்கின் அடையாளம்.

டெஸ்ட் ஆட்டங்களின் தொய்வுத்தன்மையை சேவாக் போன்ற ஆட்டக்காரர்கள்தான் சுவாரஸ்யமூட்டினார்கள். இப்பொழுதும் நினைத்துச்சிலிர்க்கசேவாக்கின்சில ஆட்டங்கள் உள்ளன. சென்னையில் தென்னாபிரிக்காவை துவைத்தெடுத்த 319, அவுஸ்திரேலியாவில் அடித்த 195, இலங்கையில் அடித்த 201, பாகிஸ்தானில் அடித்த 309 போன்ற இன்னிங்ஸ்களை சொல்லலாம்.

என்றாலும் அவரது ஆட்டத்தின் பின்னாட்கள் மகிழ்ச்சிகரமானவையாக இருக்கவில்லை. பந்தயத்தில் இறக்கப்பட்ட வயதான குதிரையைப் போல மிகச்சிரமப்பட்டார். அவரது பார்வையும் அவ்வளவாக ஒத்துழைக்கவில்லை. வாய்ப்புக்கள் குறைய தொடங்கின. கிடைத்த ஓரிரண்டிலும் சோபிக்கத் தவறிவிட்டார். இதனால் அணியிலிருந்து ஒதுக்கப்பட்டு, ஐ.பி.எல் மற்றும் உள்ளூர் ஆட்டங்களில் ஆடிக் கொண்டிருந்தார்.

**சகீர்கான்**

கபில்தேவிற்கு பின்னர் இந்தியா கண்ட புத்தாக்கம்மிக்க வேகப்பந்துவீச்சாளர் சகீர்தான். ஆக்ரோசம், துல்லியம் மிக்க ஒரு வேகப்பந்துவீச்சாளர். சுமார் பத்து வருடங்களாக இந்திய வேகப்பந்துவீச்சை தலைமை தாங்கினார்.

இவரது காலத்தில்த்தான் 2011 இல் உலகக்கோப்பையை இந்தியா வென்றது. அதில் சகீரின் பங்கு அளப்பரியது. அந்த தொடரில் 21 விக்கெட்டுக்களை கொய்துள்ளார்.

சகீர்கானிற்கு சமீபமாக முன்னரோ பின்னரோ அவரளவிற்குசிறந்தவேகப்பந்துவீச்சாளரை இந்தியா பெற்றிருக்கவில்லை. 2000 ஆண்டில் கிரிக்கெட்டில் அறிமுகமானதிலிருந்து இந்த ஆண்டு ஓய்வுபெற்றது வரையான 15 ஆண்டுகள் கிரிக்கெட்டில் இருந்தாலும், மூன்று ஆண்டுகளின் முன்னரே தனது கடைசி ஒருநாள் போட்டியில் ஆடிவிட்டார். ஒன்றரை ஆண்டுகளின் முன்னர் கடைசி டெஸ்ட் ஆட்டத்தில் ஆடினார்.

92 டெஸ்டில் 311 விக்கெட்டுக்களையும், 200 ஒருநாள் போட்டியில் 282 விக்கெட்டுக்களையும், 5 ரி20 போட்டியில் 17 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தார்.

இந்த இரண்டு வீரர்களின் அந்திமகாலமும் ஒரே மாதிரியானவே முடிந்துள்ளது. சச்சின், ராவிட் போன்ற முன்னணி கிரிக்கெட்டர்களின் வாழ்க்கையும் சுபமாக முடியாத முன்னுதாரணம் உள்ள போதும், இவர்கள் இருவரதும் முடிவு மிக வருந்தத்தக்கதாக அமைந்துள்ளது. கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் இருவரும் அணிக்கு வெளியில் ஒரு வாய்ப்பிற்காக காத்திருந்திருக்கிறார்கள். ஆனால் வாய்ப்புத்தான் கிட்டவில்லை.

இனி வாய்ப்பில்லை என கண்டதன் பின்னர், ஒருவர் பின் ஒருவராக ஒருவார இடைவெளிக்குள் இருவரும் ஓய்வு பெற்றுள்ளனர். தங்கள்தங்கள் அணியின் மகத்தான வீரர்களை ஒவ்வொரு நாட்டு கிரிக்கெட் வாரியங்களும் மகத்தான கௌரவங்களுடன் விடைகொடுத்துக் கொண்டிருக்கையில் இந்த இரண்டு வீரர்களும் கிட்டத்தட்ட அனாதைகளைப் போல விடைபெற்றிருக்கிறார்கள்.

அணியிலிருந்து நீக்கப்பட்டதற்கும், ஓய்வுபெற்றதற்குமிடைப்பட்ட காலத்தில் அவர்கள் அணிக்கு திரும்ப தீவிரபோராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் அது சாத்தியமாகவில்லை. மகத்தான வீரர்கள் இருவரது அந்திமகாலமும் ஒரேவிதமான துயரக்கதையாக முடிந்துள்ளது. அவர்களிடமும் ரசிகர்களிடமும் மகிழ்ச்சி கொள்ள எந்த விடயமும் இல்லை. என்ன சாதனை ஆட்டக்காரர்களாக இருந்தாலும், கௌரவமாக வழியனுப்புதல் இல்லையென்றால், கறைபடிந்த கசப்புணர்வுதான் எஞ்சியிருக்கும்.

சேவாக், சகீர் மனதிலும் கிரிக்கெட்டின் கசப்புணர்வுதான் எஞ்சியிருக்கப் போகிறது.




## கிணற்றை காணோம்!

இது வடிவேலுவின் நகைச்சுவையல்ல. நிஜமாகவே தனது கிணற்றை காணவில்லையென ஒருவர் மிரண்ட சம்பவம். தம்புள்ளவின் நாவுல பிரதேசத்தில் உள்ள ஒருவர் தனது கிணற்றை காணவில்லையென மிரண்டு, அருகில் சென்று பார்த்தால் கிணறு தரைக்குள் புதைந்து விட்டது. ஏன் கிணறு தரைக்குள் புதைந்தது என்பது பற்றி தற்போது ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.



## யானைக் கொடூரம்

மட்டக்களப்பின் சில பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் பற்றிய செய்திகள் வெளியானதும், காட்டு யானைகளை பிடிக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் தெரிந்ததே. இந்தநிலையில் தாந்தாமலை பகுதியில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த இளம்தம்பதியொன்றை யானை அடித்துக் கொன்றுள்ளது. கர்ப்பிணியாக இருந்த 17 வயது மனைவியை பரிசோதித்த வைத்தியர்கள் வயிற்றில் இரட்டைக்குழந்தைகள் இருந்ததாக கூறினார்கள்.









## வடை போச்சே!

மஹரகமவிலிருந்து புறக்கோட்டை சென்ற பேரூந்தில் யுவதியொருவர் பயணம் செய்துள்ளார். கைத்தொலைபேசியை காதிற்குள் வைத்து யாருடனோ நீண்டநேரம் கொஞ்சிக்குலாவிக் கொண்டு வந்திருக்கிறார். அதனைப்பார்த்து முழு பஸ்சுமே ஜொள்ளுவிட்டு கொண்டு சென்றிருக்கிறது. இடைநடுவில் இன்னொரு வாலிபன் ஏறியிருக்கிறான். அவனை கண்டதும், தொலைபேசி ஆளை கட் பண்ணிவிட்டு, அவனுடன் நெருக்கமாகியுள்ளார். இருவரும் நடந்து கொண்ட விதத்தை பார்த்து முழுச்சனமும் கூசியதாம். ஜொள்ளுவிட்டவரொருவர் படம் எடுத்து இணையத்தில் விட வைரல் ஹிட்.

## அதிசய தென்னம்பிள்ளைகள்!

யாழ்ப்பாணத்தில் நடந்த அதிசயமிது. ஒரு தென்னம்வித்திலிருந்து இரண்டு தென்னங்கன்றுகள் முளைத்துள்ளன. வீட்டுக்காரர் அந்த படத்தை பேஸ்புக்கில் பிரசுரிக்க, நம்மவர்கள் ஆளுக்கொரு லைக் கிளிக்கி தென்னம்பிள்ளையின் அதிசத்தை வரவேற்றுள்ளனர்.

## களவாணிகள்

நாரம்மல குளியாப்பிட்டிய வீதியின் கனன்கமுவ பகுதியில் பட்டப்பகலில் நடந்த ஆயுதமுனை கொள்ளை. மோட்டார்சைக்கிளில் வந்த இரண்டு ஆயுததாரிகள் பணத்தை கொள்ளையடித்ததுடன், அங்கிருந்த பெண்ணின் தங்கநகைகளையும் சுருட்டிக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டனர். கொள்ளையன் ஒருவனின் முகம் சிசிரிவி கமராவில் தெளிவாக தெரிவதால், விரைவில் சிக்கலாமென நம்பப்படுகிறது.




இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 25.10.2015 அன்று வெளியிடப்பட்டது